கடல் உணவின் களஞ்சியம்
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றிட
Kasturi Limited
IMPORT & EXPORT
29CB, Ealing Road, Wembley, Middlesex, HA0 4LL, UK.
Tel: 0181-903 4276 Fax: 0181-903 0827
Mobile: 0958 246580

France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P
ஈழமுரசு
பிரித்தானியா
Eelamurasu Weekly
முரசு: 3 25 - 31 டிசம்பர் 1997 முழக்கம்: 154

புதிய நிர்வாகத்தில்
மளிகைப் பொருட்கள் யாவும் மலிவு விலையில்
NEW (SRI) KANNAN STORES
249, Fore street, Edmonton, LONDON, N18 2TY
Tel: 081- 884 4979

# யாழ். குடாவில் 'தேர்தல்' பீதி

★ கூட்டணி — புளொட் — ஈ.பி.டி.பி. — ஈ.பி.ஆர்.எல்.எவ். பதவிப் போட்டி

★ புதிய இராணுவ கெடுபிடிகள் - * தமிழ் அரச ஊழியர்கள் தேர்தல் பணி பகிஸ்கரிப்பு

## புலிகளின் பதிலடி என்ன? உலகம் எதிர்பார்ப்பு

சிறீலங்கா அரசின் தேர்தல் நடவடிக்கைகள் யாழ். குடாநாடெங்கும் பரபரப்பையும் பீதியையும் ஏற்படுத்தியுள்ளது. தம்மால் கைப்பற்றப்பட்டு அரசாளப்படும் குடாநாட்டில் சுமுக நிலை நிலவுகின்றது என உலக சமூகத்திற்கு கூறவேண்டிய நிலையில், தேர்தலை ஒரு பிரச்சாரமாகக் கையாளும் சிறீலங்கா இராணுவம், குடாநாட்டில் தமது புதிய கெடுபிடி சட்டங்களை அதிகரித்துள்ளதுடன், தினசரி மிகக் கடுமையான

(☞ 2ம் பக்கம்)



வாசகர்களுக்கு எமது நத்தார் வாழ்த்துக்கள்

## தமிழர் உரிமைப் போரை ஆதரிக்கின்றேன்

### தென்னாபிரிக்க பிதா டெஸ்மன் டூட்டு

சிறீலங்காவின் பெரும்பான்மை சிங்கள சமூகம் தமிழ் மக்களுக்கான சமூக உரிமையினை வழங்கத் தவறிவிட்டதென தென்னாபிரிக்காவின் பிரபலமான கிறீஸ்தவ பேராயர் டெஸ்மன் டூட்டு கேப்ரவுணில் வெளியிட்ட அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளதாக இலண்டனிலிருந்து வெளிவரும் 'தமிழ் கார்டியன்' என்ற ஆங்கில ஏடு

(☞ 2ம் பக்கம்)

## பெப்ரவரி 4 காலக்கெடுவை காப்பாற்ற வன்னிக்கு மேலும் பல்லாயிரம் துருப்புக்கள்

சிறீலங்கா இராணுவ அமைச்சர் ரத்வத்தையின் புதிய 45 நாள் காலக்கெடுவை காப்பாற்றுவதற்காக வன்னி ஜெயசிக்குறுய் போர் முனைக்கு மேலும் பல்லாயிரம் துருப்பினர் கடந்த வார இறுதிமுதல் அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றனர். விடுதலைப் புலிகளின் மன்னகுளம் தாக்குதலையடுத்து வன்னிக் காட்டுப் பகுதிகளில் சிக்குண்டுள்ள சிங்களத் துருப்புக்களை மீள்கட்டுமானம் செய்யவும், புதிய தாக்குதல் நடவடிக்கைகளை முறியடிக்கவுமே இம்மேலதிக படைக் குவிப்புகள் இடம்பெறுவதாக பாதுகாப்பு அமைச்சவட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தற்போது வவுனியாவிலிருந்து புளியங்குளம் வரையிலான ஏ9 நெடுஞ்சாலையையும், புளியங்குளத்திற்கு மேற்குப்பகுதி காட்டுப் பிரதேசங்களிலும், மறுமுனையில் கரிப்பட்டு முறிப்பு வரையும் நிலை கொண்டுள்ள துருப்பினர், ஜனவரி மத்திய பகுதி வரை எதுவித பாரிய நகர்வுகளையும் காலநிலை காரணமாக மேற்கொள்ள முடியாது என இராணுவ வட்டாரங்கள் கருதுகின்றன.



ஈழத்தமிழர் இன்னல் நீக்க கரம்தந்த 'இதயக்கனி'யின் 10ஆம் ஆண்டு நினைவு

யாழ். குடாநாட்டில் சிறீலங்கா அரசினால் அறிவிக்கப்பட்ட உள்ளூராட்சித் தேர்தல் மனுத் தாக்கலுக்கான இறுதி நாளான இன்று கொழும்பிலிருந்து இரகசியமான முறையில் இராணுவத்தால் அழைத்துவரப்பட்ட அதிகாரிகள் முன், கொழும்பு தமிழ் குழுக்கள் தமது தேர்தல் மனுக்களை தாக்கல் செய்தன.

ஈபிஆர்எல்எவ், ஈபிடிபி, புளொட் ஆகிய ஆயுதம் தரித்த தமிழ்க் குழுக்கள் பல இனந் தெரியாத நபர்களை தமது உள்ளூராட்சி தேர்தலுக்கான வேட்பாளராக அறிவித்துள்ளனர். தமிழர் விடுதலைக் கூட்டணி, இச்செய்தி அச்சுக்குச் செல்லும் வரை எந்த வேட்பாளர் பட்டியலையும் வெளியிடவில்லையாயினும், திருமதி யோகேஸ்வரன் தலைமையிலான வேட்பாளர்கள் தங்கள் மனுக்களை இரகசிய அதிகாரிகளிடம் கையளிப்பார்கள் என கருதப்படுகின்றது. ஈ.பி.டி.பி. என்ற ஆயுதம் தாங்கிய சிறீலங்க இரா

(☞ 2ம் பக்கம்)

## தமிழ் அரச ஊழியர்கள் போர்க்கொடி

சந்திரிகா அரசினால் யாழ். குடாநாட்டில் இராணுவத்தின் துணையுடன் நடாத்தப்பட உள்ள தேர்தலில் கடமையாற்ற, தமிழ் அரச அதிகாரிகள் மறுப்புத் தெரிவித்து தமது பகிஸ்கரிப்பை ஆரம்பித்துள்ளனர். தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் பீடப்

(☞ 2ம் பக்கம்)

## ஆதரவாளர்கள் ஏமாற்றமடைந்து விடுவார்கள்

### மு.சிவசிதம்பரம் ஈழமுரசுக்கு பேட்டி

யாழ். மாவட்டத்தில் நடைபெறும் உள்ளூராட்சித் தேர்தலில் நாங்கள் போட்டியிடாவிட்டால் எங்களுடைய ஆதரவாளர்கள் ஏமாற்றமடைந்து விடுவார்கள் என்பதற்காகவே நாங்கள் அதில் போட்டியிடுகின்றோம் என்று தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் மு.சிவசிதம்பரம் ஈழமுரசுக்கு

(☞ 2ம் பக்கம்)

## கூட்டணிக்குள் விரிசல்

யாழ். குடா தேர்தல் நடவடிக்கைகள் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்களிடையே பலத்த விரிசலை ஏற்படுத்தியுள்ளது. நீலன் திருச்செல்வம் தலைமையிலான சந்திரிகாவின் தீவிர ஆதரவாளர்கள் யாழ். குடா தேர்தலில் பங்குபற்றி சிறீலங்கா அரசினை சர்வதேச ரீதியாக காப்பாற்ற வேண்டும் என செயற்பட்டுவரும் அதேவேளை, மறுபிரிவினர் இத் தேர்தலில்

(☞ 2ம் பக்கம்)

## சந்திரிகாவிடம் போட்டி ஈ.பி.டி.பி. குழு வேண்டுகோள்

(22.12.97)

சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவை யாழ்ப்பாணத்தில் தற்போது நிலவும் சூழ்நிலையை மாற்றியமைக்க வேண்டும் என ஈ.பி.டி.பி. போட்டிக் குழுவினர், கோரவுள்ளனர். இன்றையதினம் யாழ். வேம்படி வீதியில் அமைந்திருந்த தமது காரியாலயத்தில் நடாத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் அவர்கள் இதனை

(☞ 2ம் பக்கம்)

லண்டனில் நம்பிக்கை = நாணயம் = உத்தரவாதம் = குறைந்த விலை
மங்கையர் நெஞ்சங்களில் குறுகிய காலத்தில் இடம்பிடித்தவர்கள்
RATHY JEWELLERS
தாலிக்கொடி தயாரிப்பில் கைதேர்ந்தவர்களின் கைவண்ணத்தில் சகல நகைகளையும் செய்தும், இறக்குமதி செய்து வழங்குபவர்கள்

28 Ealing Road, Wembley, Middx. HA0 4TL
Tel: 0181-903 3063
Fax: 0181-903 9711
Mon.-Sat. 10.00 A.M. - 6.00 P.M.
Sunday 12.00 Noon - 6.00 P.M.

# உலகச் செய்திகள்

## பொலிசாரைச் சுட்டுவிட்டு கைது செய்யப்படாமல் தப்பிய கார்லோஸ் பயங்கரவாத குற்றச்சாட்டில் விசாரணை

'சர்வதேச பயங்கரவாதி' என வர்ணிக்கப்படும் கார்லோஸ் மீதான விசாரணை பாரிசில் கடந்த 12.12.97 வெள்ளியன்று ஆரம்பமாகியது.

பாரிஸ் விசேட நீதிமன்றத்தில் முதல்நாள் விசாரணை ஆரம்பமாகியபோது நீதிபதி முன் சாட்சியமளித்த கார்லோஸ், 'எனது பெயர் இல்யிச் ராமிரேஸ் சஞ்சேஸ். எனது தொழில் புரட்சி செய்தல். எனது வதிவிடம் உலகம். கடைசியாக நான் வசித்தது சூடான்' என சுத்தமான பிரெஞ்சில் தெரிவித்து




விட்டு, சிறையில் காலத்தை சும்மா கழிக்கவில்லை, பிரெஞ்சு மொழியையும், பிரெஞ்சு சட்டத்தையும் தான் கற்றுக் கொண்டிருப்பதை நிரூபித்தார்.

தனது வழக்கில் வழக்கை நடாத்தும் பிரதம சட்டத்தரணி போல் நடந்து கொண்ட கார்லோஸ் 'நான் சூடானில் இருந்து பிரான்சுக்கு கடத்தப்பட்டிருக்கின்றேன். சட்டப்படி பிரான்சில் என்மீது விசாரணை நடாத்த முடியாது என வாதாடினார் இச் சர்ச்சைக்கு ஏற்கனவே தீர்ப்பு வழங்கியாகிவிட்டதால் தொடர்ந்து விசாரணையை நடாத்த தலைமை நீதிபதி ஆணையிட்டார். புரட்சிகர இளைஞர்களின் சொர்க்கத்தை அனுபவித்துவிட்டதாக கார்லோஸ் திருப்தியடைகிறார் என 18.12.97 'லுமோன்ட்' தெரிவித்துள்ளது. பாலஸ்தீன விடுதலை இயக்க போராளிகள் எத்தனையோ பேர், 'மொசாட்' படையால் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் மீது ஏன் பயங்கரவாத குற்றச்சாட்டு விசாரணை நடாத்தவில்லை. எனக்கு எதிராக சாட்சியமளிக்கும் சியோனிசவாதிகள் மொசாட்டின் ஏஜன்டுகள் என அவர் சரமாரியாக குற்றச்சாட்டுக்களை தொடுத்தார். விசாரணை தொடர்ந்து நடைபெறுகின்றது. கார்லோஸ் நடாத்திய ஏழு முக்கிய தாக்குதல்களில் மொத்தமாக 16 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 174 பேர் காயமடைந்துள்ளனர்.

## தென்கிழக்காசியாவில் பணச்சந்தை சரிவு வீதத்தில்! ஐரோப்பாவில் சந்தை தீவிர வளர்ச்சி

தென்கிழக்காசியாவில் கடந்த ஆறுமாதங்களாக இடம்பெறும் பணச்சந்தை சரிவு தென்கிழக்காசிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சியை மோசமாகப் பாதிக்கும் என கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

இச்சரிவின் போது பாரிசில் 7%, பிராங்போர்ட் 11%, சூரிச் 13%, வோல் ஸ்ரீட் 11% வளர்ச்சி கண்டுள்ள அதேவேளை,

ஆசியாவில் சியோல் 36% வரை வீழ்ச்சி கண்டுள்ளது. இவ் வீழ்ச்சி சீன, ஜப்பானிய பொருளாதாரத்தைக்கூட ஆட்டம் காண வைக்கும் என அஞ்சப்படுகின்ற வேளை, மலேசியாவில் கூடிய ஆசியான் உறவு நாடுகள் இவ் ஆபத்தை எவவாறு சமாளிப்பது என ஆலோசனை நடாத்தியுள்ளன.

# உலக நினைவலைகளில்

## பாலஸ்தீன விடுதலை இயக்க உறுப்பினர் இல்லிச் - ரமிறேஸ் - சஞ்சேஸ் அல்லது கார்லோஸ் (Carlos) புரட்சிகர சக்திகளாலேயே பயங்கரவாதி எனப் பட்டம் சூட்டப்பட்டுள்ளவர்

கார்லோசைத் தெரியுமா? எனக் கேட்டால் கண்டபடி கொலைகள் புரியும் அந்த சர்வதேச பயங்கரவாதியை தெரியாதவருண்டா என புரட்சிகர சக்திகளிடம் இருந்தே பதில்வரும்.

1975 முற்பகுதியில் பாலஸ்தீன விடுதலை இயக்க பிரிவுகளில் ஒன்றான ஜோர்ஜ் ஹபாசின் PFLP இயக்கத்தினர் இஸ்ரேலிய விமான சேவையான EL.AL இன் போயிங் விமானங்கள் மீது தாக்குதல் நடாத்தியிருந்தனர். பாரிஸ் - ORLY விமான நிலையத்தில் இத் தாக்குதல் நடைபெற்றது.

இத்தாக்குதல் தொடர்பாக Michel Moukharbal என்ற லெபனான் நாட்டுப் பிரஜையை பிரெஞ்சு புலனாய்வு பொலிசார் கைது செய்தனர். தீவிரவாதக் குழுவைக் காட்டிக் கொடுக்க கைது செய்யப்பட்டவர் உடன்பட்டார்.

இன்ஸ்பெக்டர் Raymon Dous தலைமையிலான குழுவினர் தீவிரவாதிகள் தங்கியிருந்த முகாமுக்கு சென்றனர், மேசையில் மது போத்தல் இருக்க உல்லாசமாக 'கிற்றார்' இசைத்துக் கொண்டிருந்த இளைஞர்களில் ஒருவன் தன்னை பொருளியல்துறை மாணவன் என அறிமுகம் செய்தான்.

இளைஞர்களிடம் ஆயுதம் இருக்கின்றதா என பரிசோதித்துவிட்டு, கிற்றார் இசை - மது கிளாசில் திசை திரும்பினர் இன்ஸ்பெக்டர் குழுவினர். சரியான தருணம் பார்த்திருந்த 'கார்லோஸ்' எனப்படும் அந்த இளைஞன், கணப்பொழுதில் மறைத்து வைத்திருந்த தன் துப்பாக்கியை இயக்கி இன்ஸ்பெக்டர் குழுவையும் காட்டிக் கொடுக்கப் புறப்பட்ட தன் சக போராளி Michel Moukharbal ஐயும் சுட்டுக் கொன்றுவிட்டு தலைமறைவாகினான், 26 வயது நிரம்பிய அந்த இளைஞன்.

வெனிசுவேலா நாட்டில் தீவிர மார்க்சிச - லெனினிச வாதியான பிரபல சட்டத்தரணி Altagracia Ramirez Navas என்ற சட்டத்தரணிக்கு மூன்று ஆண் குழந்தைகள். மார்க்சிச லெனினிச சமூடமைக் கோட்பாடுகளின் மேல் பற்றுக்கொண்ட தந்தை லெனினின் நினைவாக அவரது பெயரின் மூன்று பகுதிகளான விளாமிடிர், இல்யிச், லெனின் என்ற பெயர்களை தனது குழந்தைகளுக்கு சூட்டினார்.

1949-ம் ஆண்டு பிறந்த கடைக்குட்டியான இல்யிச் அப்போது வெனிசுவேலாவில் தடைசெய்யப்பட்டிருந்த வெனிசுவேலா கம்யூனிச கட்சியில் தனது 15-வது வயதில் இணைந்தான்.

தனது 19-வது வயதில் மொஸ்கோவில் உள்ள பற்றிஸ் லுமும்பா பல்கலைக்கழகத்தில் இணைந்த இல்யிச்சிற்கு சர்வதேச போராட்ட சக்திகளின் உறவு கிடைத்தது.

'வல்லரசு ஆதிக்கத்திற்கெதிரான கெரில்லா' என தன்னைத் தெரிவிக்கும் கார்லோசும் அவரது நண்பர்




சேகுவேராவை ஒத்த முகச் சாயலுடையவராகக் காணப்படுபவர்தான் கார்லோஸ்

களும் சோவியத் - ரஷ்யா இல்லாதொழிந்த போது அவர்களை ஆதரித்த அனைத்து சக்திகளாலும் கைவிடப்பட்டு அநாதைகளாயினர்.

1994-ம் ஆண்டு சூடான் நாட்டின் தலைநகர் கார்ட்டுமில் மறைந்து வாழ்ந்த 'கார்லோஸ்'ஸை அடையாளம் கண்ட பிரெஞ்சு உளவு நிறுவனம், அவரைக் கைது செய்ய முகமாற்று சத்திர சிகிச்சை என்ற வலையை வீசி, அவரை மயக்க நிலையில் வைத்துக் கைதுசெய்து கண்கள் கட்டப்பட்ட நிலையில் கைவிலங்கிடப்பட்டு கழுத்துவரை நீளமுள்ள சாக்கொன்றில் போடப்பட்டு பாரிஸ் கொண்டுவரப்பட்டார். பயங்கரவாதி என்ற குற்றச்சாட்டில் இவர் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டு Maison D'arret de Fresnes (Val de Marne) இல் வைக்கப்பட்டுள்ளார். வழக்கு விசாரணைகள் பாரிசில் ஆரம்பமாகியுள்ளது.

''நேற்றைய செய்தி இன்றைய வரலாறு
இன்றைய செய்தி நாளைய வரலாறு
வரலாறும் செய்தியும் வாழ்வியலின் வழிகாட்டிகள்''

## தென்னாபிரிக்கத் தேசிய காங்கிரசின் தலைவராக தாபோ உம்பெக்கி

தனது 20 ஆண்டுகால அகதி வாழ்வில் பல்வேறு நாடுகளில் தென்னாபிரிக்க இனவாத அரசுக்கெதிரான பணிகளில் ஈடுபட்ட அதேநேரம், பொருளாதாரத் துறையில் பட்டமும் பெற்ற THABO MBERKI தென்னாபிரிக்க தேசிய காங்கிரசின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

27 வருடங்களைச் சிறையில் கழித்து உலகில் பிரசித்தி பெற்ற சிறைக்கைதியாக வெளியேறிய தென்னாபிரிக்கத் தலைவர் நெல்சன் மண்டேலா தலைமையில் நடைபெற்ற தென்னாபிரிக்க தேசிய காங்கிரசின் 50வது வருடாந்த மாநாட்டில் தபோ உம்பெக்கியின் தெரிவு இடம் பெற்றது.

"கறுப்பர்களும் வெள்ளையர்களும் சமூக உறவுடன் வாழ இன்னும் நீண்ட பணி செய்யப்படவேண்டியுள்ளது."

"வெள்ளையர்களில் பலர் இனவாத உணர்வுடன் இன்னமும் உள்ளனர்"

"எதிர்ப்புரட்சி சக்திகள் செயற்பட்ட வண்ணமேயுள்ளனர். வெளிநாடுகள் அவர்களுக்கு உதவுகின்றன".

"காலனித்துவம், நவகாலனித்துவம், காலனித்துவ பொருளாதார அரசியல் சுரண்டல்களுக்கெதிராக ஆபிரிக்கக் கண்டம் இணைய வேண்டும்."

"கம்யூனிச ஆட்சி சரிவின் பின் முதலாளித்துவ சக்திகள் ஆபிரிக்காவில் நிலைகொள்ள முயலுகின்றன".

என பல்வேறு விடயங்களை 4 மணிநேரம் தொடர்ந்து உரையாற்றிய நெல்சன் மண்டேலா அரசியலிலிருந்து ஓய்வுபெற்றுத் தன் பேரனுடன் மலைச்சாரலுக்கும், பாடசாலைக்கும் சுதந்திரமாக செல்ல ஆசைப்படுவதாகத் தெரிவித்தார்.

வெள்ளையர்களுக்கு எதிரான மண்டேலாவின் சில வார்த்தைகள் சபையில் இருந்த வெளிநாட்டுப் பத்திரிகையாளர் மத்தியில் சலசலப்பு ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ருவண்டா படுகொலைகள்! வல்லரசுகள் பின்னணியில்

### - ருவண்டா அமைச்சர் -

1994-ல் 5 இலட்சம் ருட்சி இனத்தவர்கள் ஹூட்டு இன இராணுவ ஆட்சியாளர்களால் கொல்லப்பட்டது முதல் கடந்த வாரம் நடைபெற்ற ருட்சி இனத்தவர் மீதான இன அழிப்புத் தாக்குதல்களுக்கு வெளிநாட்டு சக்திகள், குறிப்பாக சில வல்லரசுகள் பொறுப்பு என ருவண்டா செய்தித்துறை அமைச்சர் பத்திரிகையாளர் மத்தியில் தெரிவித்துள்ளார்.

ஐ.நா.சபையும் மற்றும் சில நாடுகளும் மறைந்து வாழும் ஹூட்டு இன இராணுவத்திற்கு ஆயுதமும் உதவிகளும் கிடைப்பதைத் தடுக்காததுடன் குற்றவாளிகளைத் தண்டிக்காமலும் உள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ச.நா.நிதிய தாளத்துக்கு ஆடும் தலைவர்கள் ரஷ்யப் பத்திரிகை பகிரங்க குற்றச்சாட்டு

சர்வதேச நாணய நிதியம் எனப்படும் IMF இன் கட்டளைகளுக்கு இணங்க முடிவுகள் எடுக்கும் நிலைக்கு எமது தலைவர்கள் இருந்தால் ஆட்சியை ச.நா.நி. குழுவிடமே ஒப்படைக்கலாமென NEZAVISSIMAIA GAZETA என்ற ரஷ்யப் பத்திரிகை தனது 18.12.97 இதழில் குற்றம் சாட்டியுள்ளது.

ச.நா.நி. தலைவர் MICHEL CAMDESSUS இடமிருந்து ரஷ்யத் தலைவர்களுக்கு அனுப்பப்பட்ட இரகசியக் கடிதத்தை அம்பலத்துக்குக் கொண்டுவந்த இப்பத்திரிகை ரஷ்யாவின் பொருளாதார மற்றும் நிதிநிர்வாகம் தொடர்பான 20 முக்கிய முடிவுகள் அமெரிக்காவில் தலைமையகத்தைக் கொண்ட ச.நா.நி.யிடம் இருந்து வந்துள்ளதாக வெளிக்கொணர்ந்துள்ளது.

எரிபொருள், எரிவாயு, மின்சாரம், இரும்புப் பாதை, விமானப்போக்குவரத்து உட்பட நாட்டின் உயிர் நாடிகள் மீது ச.நா.நி. செல்வாக்குச் செலுத்த இம்முறைகள் வழிவகுக்குமென அப்பத்திரிகை குற்றம் சாட்டியுள்ளது.

நாடுகளுக்கு உதவும் ச.நா.நி. அந்நாட்டை மெல்ல நிர்வாக ரீதியாக கைப்பற்ற முனைவதாக அப்பத்திரிகை குற்றம் சாட்டியுள்ளது. அவ்வமைப்புக் காலம் வரை வரலாற்றில் ஆகக்கூடிய உதவியை ரஷ்யாவுக்கு வழங்கியிருக்கும் ச.நா.நி. அண்மையில் தென் கொரியாவுக்கு ஆகக்கூடிய உதவியை வழங்கியது.

## செச்செனிய போருக்கு ஆயுதம் பிரான்சில் நடந்த பேரம்?

தீவிர பிரெஞ்சு தேசியவாதக் கட்சியான FN இன் பாதுகாப்பு பிரிவு DPS. இதன் தலைவர் பெர்னாட் சார்செல் என்பவர் செச்செனிய தீவிரவாதிகளுக்கு பயிற்சி மற்றும் ஆயுதம் வழங்கலில் ஈடுபட்டதை பகிரங்கமாக ஒப்புக்கொண்டுள்ளார்.

18.12.97 திகதியிட்ட NOUVELLE OBSERVATEUR என்ற சஞ்சிகையில் வெளியாகியுள்ள இச்செய்தி இதற்கு முன்னர் LIBERATION உட்பட பல பத்திரிகைகளிலும் தொலைக்காட்சியிலும் மேலோட்டமாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

செச்செனியா பல்கலைக்கழக ஆய்வாளர் ஒருவருடன் தொடர்பேற்பட்ட மேற்படி பாதுகாப்பு உத்தியோகத்தர், 1991-ற்கும் 1993-ற்கும் இடையில் ஏழு தடவைகள் செச்செனியா சென்று வந்துள்ளதையும் தன்னுடன் பயிற்சி உத்தியோகத்தர்களை செச்செனியா அழைத்துச் சென்றதையும் அவர் ஏற்றுக்கொண்டுள்ளதோடு,

குரோசியாவில் மலிவு விலையில் ஆயுதம் பெற்றுத் தருவதாக தெரிவித்த பெர்னாட், செச்செனிய தீவிரவாதி BASSEV இன் பிரதிநிதியை பாரிசில் சந்தித்து 4 இலட்சம் டொலர் முற்பணமும் பின்னர் 6 இலட்சம் டொலர் பணமும் பெற்றதாகவும், ஆனால் ஆயுத விநியோகம் நடைபெறவில்லை என்பதையும் அச்சஞ்சிகை வெளியிட்டுள்ளதோடு பெர்னார்ட் இத் தொடர்பைத் தற்பொழுது மறுப்பதாகவும் தெரிவித்துள்ளது.

# தென்கொரிய ஜனாதிபதி தேர்தல் 50 வருட ஆட்சி சரிந்தது

தென்கொரியாவில் RHEE தலைமையில் 1948-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அமெரிக்க சார்பு சர்வாதிகாரி ஆட்சிக்கு தென் கொரிய மக்கள் கடந்த 18.12.97 வியாழனன்று நடைபெற்ற தேர்தலில் சாவு மணி அடித்துள்ளனர்.

தென் கொரிய பணச் சந்தைச் சரிவைத் தொடர்ந்து மக்கள் மத்தியில் விரக்தி தலைதூக்கியிருந்த வேளை திட்டமிட்டபடி தென்கொரிய ஜனாதிபதித் தேர்தல் கடந்த 18.12.97 வியாழனன்று நடைபெற்றது. அமெரிக்காவினதும் சர்வதேச நாணய நிதிய குழுவினதும் உதவிகள் மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஊட்டவில்லை.

50 வருட காலமாக ஜனநாயகப் போராட்டம் நடத்திவந்த KIM DAE JUNG புதிய ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். 40.4 வீத வாக்குகள் பெற்ற கிம் ஜூங் கிட்டத்தட்ட மூன்று வீத அதிகப்படி வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ளார்.

ச.நா.நி.யின் உதவியை வரவேற்ற அவர், அவர்கள் விதித்திருக்கும் கட்டுப்பாடுகள் பற்றி மீளாய்வு செய்ய வேண்டியுள்ளது எனத் தெரிவித்துள்ளார். பெப்ரவரி 25ம் திகதி இவர் ஜனாதிபதியாகப் பதவியேற்கவுள்ளார்.

# யூதப் படுகொலைகள் சில்லறை விடயம் என்றவர் மீது பாரிசில் வழக்கு தொடரப்பட்டது

1000 பக்கம் கொண்ட இரண்டாம் உலகப் போர் வரலாற்றுப் புத்தகத்தில்- இரண்டு பக்கங்களில் மட்டும், அதுவும் 10 அல்லது 12 வரிகளில் மட்டுமே குறிப்பிடப்படும் நாசிப்படைகளால் யூதர்கள் கொல்லப்பட்டது சில்லறை "DETAIL" விடயம் எனப் பகிரங்கமாகக் குறிப்பிட்ட தீவிர பிரெஞ்சு தேசியவாத கட்சித் தலைவரான லூபென் மீது போர்க்குற்றத்தை மறுத்துரைத்தமை, குற்றமாக வேறு நீதிமன்றங்களால் காணப்பட்ட விடயத்தை மறுத்துரைத்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் பிரெஞ்சுச் சட்டமா அதிபர் திணைக்களம் கடந்த 18.12.97 வியாழனன்று வழக்குத் தொடர்ந்துள்ளது.

SAINT-DENIS தொகுதி கம்யூனிச கட்சி பாராளுமன்ற இருந்த CLAUDE GAYSSOT ஆல் சமர்பிக்கப்பட்டு 1990 ஜூலை 13 இல் உருவாக்கப்பட்ட சட்டப்படி லூபெனுக்கு ஒருவருட 'சைகோ' சிறைத் தண்டனையும், 30 ஆயிரம் பிராங்குகள் அபராதமும் விதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இச்சூழ்நிலை பற்றிக் கருத்து வெளியிட்ட விமர்சகர் ஒருவர் இது பற்றித் தெரிவிக்கையில் "வார்த்தைகளின் எண்ணிக்கையை வைத்து அர்த்தம் தேடாமல் தாற்பரியத்தை வைத்து அர்த்தம் தேடுதலே அறிவுடைமை" எனத் தெரிவித்துள்ளார்.

# 15 ஆயிரம் பேருக்கு ஐந்துவருட வேலைவாய்ப்பு பிரெஞ்சு வர்த்தக அமைச்சில் மகிழ்ச்சி

கடந்த 15.12.97 திங்கள் முதல் ஐக்கிய அரபுக்குடியரசில் சுற்றுப்பயணம் செய்த பிரெஞ்சு ஜனாதிபதியும், அவரது வர்த்தகக் குழுவினரும் அபுதாபியுடன் இராணுவ உபகரண விற்பனை ஒப்பந்தமொன்றை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளனர்.

தொம்சன், டசோ, மாத்ரா நிறுவன அதிகாரிகளுடன் சுற்றுப்பயணம் செய்த ஜனாதிபதி சிராக், மிராஜ் - 2000 வகை போர் விமானங்கள் 33 மற்றும் இராணுவ உபகரணங்களை பிரான்ஸ் விற்பனை செய்வது, அரபுக் குடியரசின் இராணுவ பலத்தை அதிகரித்து அவர்கள் பாதுகாப்பை வளர்த்துவிடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பிரான்சில் நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு அருமருந்தாகக் கருதப்படும் இவ் ஏற்றுமதி வியாபார அணுகுமுறையால் 15 ஆயிரம் பேருக்கு ஐந்து வருடத்திற்கு வேலைவாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்பது பிரெஞ்சு வர்த்தக அமைச்சால் பெரும் மகிழ்ச்சியுடன் வரவேற்கப்பட்டுள்ளது.

அபுதாபி விமான நிலையத்தை விஸ்தரிப்பு செய்வது தொடர்பான பேச்சுவார்த்தைகள் தொடர்கின்றன.

# வாரக் குறிப்பு

**14.12.97 ஞாயிற்றுக்கிழமை**

- பிரெஞ்சுக் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் நாயகம் அளித்த பேட்டி ஒன்றில் லெனினிச கொள்கையையும் ஸ்டாலினிசக் கொள்கையையும் விமர்சித்துள்ளார். இவ் ஆட்சிகளில் வன்முறை நிலவியதாக அவர் குறிப்பிட TERREUR என்ற கடுமையான பதத்தை பாவித்துள்ளார்.
- ஈரானின் ஜனாதிபதியாக அண்மையில் பதவியேற்ற மொகமத் காட்டமி பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் பேசுகையில் அமெரிக்க மக்களை "GREAT PEOPLE" என விமர்சித்துள்ளதோடு அமெரிக்காவுடன் பேச்சுக்களை நடாத்தி ஈரான் - அமெரிக்க உறவை மேம்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.
- நத்தார் பண்டிகை தினத்தை பொது விடுமுறை தினமாக கியூப தலைவர் பிடல் காஸ்ரோ அறிவித்துள்ளார். பாப்பரசர் கியூபா செல்ல இருப்பதையொட்டி இவ் விசேட முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

**15.12.97 திங்கட்கிழமை**

- ஐரோப்பிய மாட்டிறைச்சி வகைகள் அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்வதை தடை செய்வது என அமெரிக்கா தீர்மானித்துள்ளது. இது சமதர்மமற்ற முடிவு என ஐரோப்பிய ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
- கொங்கோ ஜனநாயகக் குடியரசில் ருவண்ட ஹுட்டு அகதிகள் படுகொலை செய்யப்பட்டனர் என விசாரிக்கச் சென்ற ஐ.நா குழுவினர், மக்கள் எதிர்ப்பால் தலைநகர் திரும்பினர்.
- கம்பூச்சிய ஆட்சியாளர்களும் எதிரணிக்குமிடையே மீண்டும் கடும்போர் வெடித்துள்ளது.

**16.12.97 செவ்வாய்க்கிழமை**

- ஐ.நா. தீர்மானங்களுக்கு ஈராக் கட்டுப்படவில்லை எனக்குற்றம் சாட்டியுள்ள அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் ஈராக் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரித்துள்ளனர்.
- ருவண்டிய படுகொலைகள் தொடர்பாக பிரெஞ்சு இராணுவத்தினர் சாட்சியமளிக்க அழைத்த சர்வதேச குற்றவியல் நீதிமன்ற முயற்சி 'பிரச்சார அணுகுமுறை' கொண்டது என பிரெஞ்சுப் பிரதமர் குற்றம் சாட்டியுள்ளார். விசாரணைக்கென இராணுவ அதிகாரிகளை அழைக்க முடியாது என பிரான்ஸ் தெரிவித்துள்ளது.
- பிரான்ஸ், பிரித்தானியா, ஜேர்மனி ஆகிய நாடுகள் இணைந்து இராணுவ உளவு செய்மதி ஒன்றை அனுப்ப முடிவு செய்துள்ளன.
- ஐரோப்பிய சமூகத்தில் துருக்கியை தற்போதைக்கு இணைக்க முடியாது என ஐரோப்பிய சமூகம் தீர்மானித்த பின் அமெரிக்காவுக்கு அவசர பயணம் ஒன்றை மேற்கொண்ட துருக்கிய பிரதமர் யில்மாஸ், ஐரோப்பிய சமூகத்தை எச்சரித்துள்ளார். வளைகுடா யுத்தத்தில் அமெரிக்காவின் நண்பனாக துருக்கியின் முன்னாள் பிரதமர் தான்சு சில்லர் செயற்பட்டது குறிப்பிடத்தக்கது.

**17.12.97 புதன்கிழமை**

- தென்னாபிரிக்க ஆபிரிக்க காங்கிரசின் உபதலைவர் பதவிக்குப் போட்டியிட போதிய ஆதரவு இல்லாமையால் கட்சியின் உபதலைவர் போட்டியில் இருந்து விலக வேண்டிய நிலைக்கு வின்னி மண்டேலா தள்ளப்பட்டுள்ளார்.
- சோமாலியாவில் சமாதானப்படை பணியில் இருந்த பெல்ஜியப் படை உறுப்பினர் இருவர் சோமாலிய பிரஜை ஒருவரை தீயில் இட்டு படுகாயப்படுத்தியது தொடர்பான குற்றச்சாட்டை விசாரித்த பெல்ஜிய நீதிமன்றம் படைவீரர்களை விடுதலை செய்துள்ளது.
- அமெரிக்க இராஜாங்க அமைச்சர் திருமதி மடலின் அல்பிரைட்டை பாரிசில் சந்திப்பதற்காக இஸ்ரேலிய பிரதமர் நெட்டன்யாகு பாரிஸ் பயணம். இச்சந்திப்பு வெற்றியளிக்காது என இஸ்ரேலிய வெளிநாட்டமைச்சர் டேவிட் லேவி தெரிவித்துள்ளார்.
- பிரித்தானியாவில் பாராளுமன்ற உறுப்பினராக உள்ள மொகமத் தேர்தல் ஊழல் தொடர்பாக பிரித்தானிய பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். பிரித்தானிய பாராளுமன்றத்துக்கும் உறுப்பினராக சென்ற முதலாவது இஸ்லாமியர் இவராவார்.
- தஜிகிஸ்தானில் மதுவகை, மற்றும் வெண்சுருட்டு வகைகளுக்கான பிரச்சாரம் சட்ட ரீதியாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
- போலந்தில் கருத்தடை மீண்டும் தடை செய்யப்பட்டுள்ளது.
- உக்ரேனிய விமானமொன்று 70 பயணிகளுடன் கிரேக்க வானில் காணாமற் போயுள்ளது.

**18.12.97 வியாழக்கிழமை**

- பொஸ்னியாவில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படைகள் அடுத்த ஆண்டு ஜூன் மாதத்திற்குப் பின்பும் அங்கு தங்கியிருக்க வேண்டிய அவசியம் உண்டு என ஜனாதிபதி கிளிண்டன் தெரிவித்துள்ளார்.
- டோக்கியோ வியாபாரமுடன் வர்த்தக உறவுகளை வளர்க்கும் நோக்குடன் சட்டத் திருத்தங்களை அமெரிக்கா கொண்டு வரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- CREDIT LYONAIS உட்பட பல பிரெஞ்சு வங்கிகள் யூதர்கள் வைப்பிலிட்ட சொத்துக்களை திரும்பக் கையளிக்க மறுப்பதாகக் குற்றம் சாட்டி வழக்கொன்று அமெரிக்காவில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

**19.12.97 வெள்ளிக்கிழமை**

- ரஷ்யாவில் சுவீடன் நாட்டு தூதுவராலய ஊழியர் ஒருவரைப் பணயம் வைத்த நபர் சுட்டுக்கொல்லப்பட்டதுடன் பணயக் கைதி ஆபத்தின்றி விடுவிக்கப்பட்டார்.
- ஈராக்கில் 'விநோதமான' இரசாயனப் பொருள் ஒன்றை மீட்டுள்ளதாக அமெரிக்கப் பிரதிநிதியான ஐ.நா ஆணைக்குழுத் தலைவர் BUTLER அறிவித்துள்ளார், பயங்கரமான ஆயுதத் தயாரிப்புக்கு இது பயன்படுத்தக் கூடியதா என்பது பற்றித் தாம் ஆய்வு செய்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.
- ருவண்டாவில் ருட்சி இனத்தவருக்கும் ஹுட்டு இனத்தவருக்கும் இடையே நடைபெறும் இனப்படுகொலையை சர்வதேச மன்னிப்புச் சபை கண்டித்துள்ளது.
- கொங்கோவில் மனித உரிமை மீறப்படுவதாக அமெரிக்காவில் இயங்கும் 'ஹியூமன் ரைட்ஸ் வோச் HRW தெரிவித்துள்ளது.
- அமெரிக்காவிடம் ஐந்து ஜம்போ ஜெட் வகை விமானங்களை கொள்வனவு செய்ய இஸ்ரேலிய விமானக் கம்பனியான EL AL தீர்மானித்துள்ளது. இஸ்ரேலுக்கு வருடாந்தம் 300 கோடி டொலர் பண உதவியை வழங்குவதால் வேறு நாடுகளுடன் ஒப்பந்தங்களை முறிப்பதென இஸ்ரேல் முடிவு செய்துள்ளது.
- சல்மான் ருஷ்டி மீதான தண்டனை அமுலாக்கப்பட மாட்டாது என ஈரானிய கலாச்சாரத் துறை அமைச்சர் அறிவித்துள்ளார்.

**20.12.97 சனிக்கிழமை**

- செனகலில் பிரெஞ்சுப் பிரதமர் சுற்றுப் பயணம்.
- செனகலில் நிலைகொண்டுள்ள பிரெஞ்சுப் படைகள் விலகல் பற்றியும் பிரெஞ்சுப் படைப் பயிற்சி முகாம் நிறுவுவது பற்றியும் அவர் பேச்சு நடாத்தியுள்ளார்.
- பிரான்சில் LYON நகரில் உள்ள பொலிஸ் நிலையத்தில் கைதுக் கைதி ஒருவர் பொலிசார் ஒருவரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இப் பொலிஸ் அதிகாரி ஏற்கனவே இரு தடவைகள் குற்றமிழைத்து சிறு தண்டனைக்கு (18 மாத இடைநிறுத்தம்) உள்ளானவர். வெளிநாட்டவர்கள் மீதும், வறியவர்கள் மீதும் பிரெஞ்சுப் பொலிசார் புரியும் இத்தகைய குற்றம் முழுமையாகக் கண்டிக்கப்படுவதில்லை என BBC தனது செய்தியில் தெரிவித்துள்ளது.
- நீதிபதிகளுக்கு இலஞ்சம் கொடுத்து ஊழல் புரிந்ததாக இத்தாலிய முன்னாள் பிரதமர் பெர்லுஸ்கோனி மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.
- கிரேக்கத்திற்கு அண்மையில் 70 பயணிகளுடன் விபத்துக்குள்ளாகிக் காணாமல் போன உக்ரேனிய விமானம் மலைப்பகுதியில் விபத்துக்குள்ளாகியது உறுதிப்படுத்தப்பட்டு மீட்புப் பணிகள் ஆரம்பம். மீட்புப் பணியில் ஈடுபட்ட உலங்கு வானூர்தியொன்று விழுந்து நொருங்கியதில் மேலும் ஐவர் பலி.

# B.K. Quality Food & Wine



இந்திய, இலங்கை மளிகைப்
பொருட்கள், உடன் மரக்கறி வகைகள்,
பதனிடப்பட்ட தரமான கடல் உணவு
வகைகள், இறைச்சி வகைகள்

HALAL حلال

மற்றும் உங்கள் வீட்டுக்குத்
தேவையான அனைத்தையும் நீங்கள்
மலிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.




# B.K. Quality Food & Wine

உங்களை இன்பமூட்டும் இசை கானங்கள் அடங்கிய
CD, ஓடியோ கசட்டுக்களும் இங்கே பெற்றுக் கொள்ளலாம்.

**236 London Road, West Croydon CR0 2TF.**
**Tel: & Fax: 0181-681 7485**



# காயத்திரி தொலைத்தொடர்பு நிலையம்
## Gayathree Mobile Communication LTD

குறைந்த செலவில் சர்வதேச தொலைபேசி தொடர்புகளுக்கும் மலிவான அழைப்பு
அட்டைகளுக்கும் உங்கள் நினைவில் இருக்கவேண்டியது காயத்திரி தொலை தொடர்பு நிலையம்

NEW



**MOTOROLA MEMPHIS**
இலவசம்
இணைப்பு மட்டும்
**£35**



**NOKIA 1620**
இலவசம்
இணைப்பு மட்டும்
**£35**



**ERICSSON GF768**
**£149.99**
இணைப்பு:
**£25**



**ERICSSON PH388**
**£44.99**
இணைப்பு:
**£20**



**NOKIA 8146**
**£89.99**
இணைப்பு
தற்போது இலவசம்



**STAR TAC MOTOROLA**
**£149.99**
இணைப்பு:
**£25**

### சர்வதேச அழைப்பு கட்டணங்கள்

| | |
|---|---|
| சிறிலங்கா | – 59 p. நிமிடத்திற்கு |
| பாகிஸ்தான் | – 57 p. நிமிடத்திற்கு |
| இந்தியா | – 49 p. நிமிடத்திற்கு |
| பங்களாதேஷ் | – 60 p. நிமிடத்திற்கு |
| அமெரிக்கா | – 20 p. நிமிடத்திற்கு |
| சோமாலியா | – 70 p. நிமிடத்திற்கு |
| ஈகுவடோர் | – 49 p. நிமிடத்திற்கு |
| கொலம்பியா | – 45 p. நிமிடத்திற்கு |

ஏனைய நாடுகளுக்கும்
குறைந்த கட்டணமே

Best call card 20%
First Telecom 20% கழிவு

இணைப்புக்களுடன், இணைப்பு இல்லாமல்!

**GMS & Voda**

**Mobile 0958632428**
**Fax 0181 552 9313**

**One 2 One**

**Leather Case £7.99; - Car Chrger £7.99 - Hand Free set £99.99**

விசேட நத்தார் விலை குறைப்புகளுக்கு தொலைபேசியில் அல்லது நேரில் தொடர்பு கொள்ளவும். (20-ம் திகதி முதல் 30-ம் திகதி வரை மட்டுமே)

*291A High Street North, Manor Park E 12* **Tel: 0181 552 9113**



# ஈழமுரசு

Eelamurasu Weekly

"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

## தேர்தல் திருவிழா

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ளூராட்சித் தேர்தலை நடாத்துவதற்கு சிறீலங்காவின் ஆளும் பொதுசன ஐக்கிய முன்னணி அரசு தீர்மானித்திருப்பதை ஒரு ஜனநாயக அரசு, தன்னுடைய இறைமைக்குட்பட்ட ஒரு பிரதேசத்தில் ஜனநாயக முறையில் தேர்தலை நடத்துவதற்கு மேற்கொண்ட ஒரு தீர்மானமாகப் பார்க்க முடியாது.

ஏனெனில், ஏற்கனவே யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்த தமிழ் மக்களுடைய பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளுடைய சிவில் நிர்வாக அமைப்பை 1995-இல் இராணுவ ஆக்கிரமிப்பின் மூலம் அழித்ததுடன், அங்கே இராணுவ ஆக்கிரமிப்பின் அடையாளமாக சிங்கக்கொடியை ஏற்றி அதை பௌத்த சிங்களவர்களின் வெற்றித் திருநாளாகவும், அந்தக் கொடியை ஏற்றிய சிறீலங்காவின் பிரதிப் பாதுகாப்பு அமைப்பாளர் அனுருத்த ரத்வத்தையை 16-ம் நூற்றாண்டில் தமிழ் மக்களை அடிமை கொண்டு சிங்கள அரச மேலாதிக்கத்தை யாழ்ப்பாணத்தில் நிலைநாட்டிய 'சாபுமல் குமரய' என்பவனின் மறுபிறப்பு என்றும் கூறி கொண்டாடி மகிழ்ந்த சிறீலங்காவின் ஆட்சியாளர்களுக்கு யாழ்ப்பாண மக்களை தங்களுடைய அரசின் இறைமைக்குட்பட்ட மக்கள் என்று சொல்லும் உரிமை கிடையாது.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் வீதிக்கு வீதி, நகரத்துக்கு நகரம், இராணுவ முகாம்களையும் சோதனைச் சாவடிகளையும் வைத்துக்கொண்டு அதாவது யாழ்ப்பாணக்குடாநாட்டை இராணுவ ஆக்கிரமிப்பின் கீழ் வைத்துக்கொண்டு, அங்கே தேர்தல் மூலம் மக்களாட்சியைக் கொண்டுவரப்போகின்றோம். சிவில் நிர்வாக அமைப்பை உருவாக்கப் போகின்றோம் என்று சொல்வது தங்காது இராணுவத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக அரசு மேற்கொள்ளும் ஒரு கபட நாடகமேயாகும்.

உண்மையில் சிறீலங்கா அரசு, யாழ்ப்பாணத்துக்கான தரைப் பாதையைத் திறப்பதாகச் சொல்லிக்கொண்டு வன்னியில் மேற்கொண்டிருக்கும் 'ஜெயசிக்குறுய்' இராணுவ நடவடிக்கையில் விடுதலைப் புலிகளின் பதிலடியால் ஏற்பட்ட இழப்புக்களையும் தோல்விகளையும் ஈடுகட்டுவதற்கு யாழ்ப்பாணத்தை காட்சிப்பொருளாக்கி சர்வதேச அரங்கில் நிதி திரட்டுவதற்கான ஒரு கருவியாகவே இந்தத் தேர்தலை பயன்படுத்த முனைந்திருக்கிறது.

## ஈழநாதம்

### அரச படுகொலை ஒரு நேரடி சாட்சியம்

இவ்வார தலைப்புகள்

நான்கு பிள்ளைகளின் தந்தையான 42 வயதுடைய வைத்தியலிங்கம் திருச்செல்வம் என்பவர் இலக்கம் 113, சந்திபுரம், உருத்திரபுரத்தை வசிப்பிடமாகவும் அண்ணா சிலை வீதி, காட்டம்மன் கோயிலடி, மணியபுரத்திலும் தங்கியிருப்பவர் ஆவார். 24.09.96 அன்று சிறீலங்கா இராணுவம் கிளிநொச்சி மீது முன்னேறியபோது ஏவப்பட்ட எறிகணைத் தாக்குதலினால் சீட் போடப்பட்ட இவரது மண்வீடு சேதமாகியதால் 36 சீட் உட்பட சொத்துக்கள் ஒட்டுமொத்தமாக ஒன்றரை இலட்சம் ரூபாய்க்கு மேல் நஷ்டம் ஏற்பட்டது. தற்போது இடம்பெயர்ந்து ஸ்கந்தபுரத்தில் தங்கியிருக்கும் இவர் கடந்த 31.10.97 அன்று உருத்திரபுரத்தில் உள்ள வளவைப் பார்த்துவர சண்முகசுந்தரம் என்பவருடன் ஒரு துவிச்சக்கர வண்டியில் சென்றுகொண்டிருந்தார். உருத்திரபுரம் சுடலையடிச் சந்தியை இவர்கள் சென்றடைந்த போது வேலியோரத்தில் பதுங்கியிருந்த 50-க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் இவர்களைக் கூப்பிட்டு பின்பக்கமாகக் கைகளைக் கட்டினார்கள். சற்று நேரத்தில் தாங்கள் முன்னும் பின்னுமாகச் செல்ல இவர்களை இடையில் விட்டு அழைத்துக்கொண்டு போய் உருத்திரபுரத்தில் எட்டாம் வாய்க்காலில் ஒரு வீட்டில் இருத்திவிட்டு கறுப்புத் துணியால் கண்களையும் கட்டினார்கள். திரும்ப அங்கிருந்து கூட்டிக்கொண்டு போய் ஓரிடத்தில் விட்டு கண்கட்டைக் கழற்றிவிட்டபோது, உருத்திரபுரம் 7ம் வாய்க்காலில் உள்ள வீடு ஒன்று என்பதை இவர்களால் உணரமுடிந்தது. சாப்பிட்டுவிட்டீர்களா என்று கேட்டுவிட்டு பிஸ்கட்டும் பேரீச்சம் பழமும் கொடுக்கப்பட்டது. இவ்வேளை கைகளின் கட்டும் அவிழ்த்துவிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து சற்றுத் தூரத்தில் உள்ள கல்வீடு ஒன்றின் மலக்கூட்டத்திற்கு கூட்டிச் செல்லப்பட்டனர். மூடியிருந்த அந்த மலக்கூடத்தின் உள்ளே குதிக்கும்படி மிரட்டினார்கள். அந்தக் கிடங்கினுள் குதித்தவர்கள் எங்களை ஒன்றும் செய்யாதீர்கள் என்று கைகளைக் கூப்பிக் கும்பிட்டார்கள். பன்னிரண்டு அடிக்குமேல் ஆழமுள்ள இக் கிடங்கினுள் விட்டு இவர்களை துப்பாக்கியால் சுட்டார்கள்.

இவர்களில் குஞ்சுப் பரந்தனை வசிப்பிடமாகக் கொண்டு தற்போது கொறிக்கடை அம்மன் கோயிலடியில் தங்கியிருந்தவரும் 5 பிள்ளைகளின் தந்தையுமான சிவகுரு சண்முகசுந்தரம் (50) என்பவருக்கு கூடுதலான துப்பாக்கி வேட்டுக்கள் பிடித்ததினால் அவர் திருச்செல்வத்தின் மேல் விழுந்து இறந்துவிட்டார்.

இருவரும் வீழ்ந்ததை அடுத்து இருவரும் இறந்துவிட்டார்கள் என்று நினைத்தோ என்னவோ மலக்குழியை மூடிவிட்டுச் சென்றுவிட்டார்கள். மறுநாள் 01.11.97 பிற்பகல் மயக்கம் தெளிந்து எழுந்த திருச்செல்வம், சண்முகசுந்தரம் இறந்து கிடப்பதையும், இடது கால், இடது கை, தோள் மூட்டு ஆகியவற்றில் பலத்த காயங்களும் உடம்பில் ஏனைய பகுதிகளில் சிறு காயங்கள் ஏற்பட்டிருப்பதையும் உணர்ந்தார். காயங்களின் வேதனை ஒருபுறம், பசிக் கொடுமை மறுபுறம், துர்மணம் இத்தனையையும் சகித்துக்கொண்டு எப்படியாவது தான் வெளியில் வரவேண்டும் என்று திருச்செல்வம் முயற்சித்தார். தனது அறிவினைப் பயன்படுத்தி மலக்குழியில் இருந்த பழைய மலக்கழிவு, சேறு ஆகியவற்றை ஒரு பக்கமாகக் கையினால் அள்ளிக் குவித்துவிட்டு அதன்மேல் சண்முகசுந்தரத்தின் உடலைத் தூக்கிவைத்துவிட்டு, அதன்மேல் ஏறிநின்று தனது சாரத்தை கழற்றி மலக்கூடத்தினுள் நீண்டு நின்ற கழிவு செல்லும் குழாயில் கொழுவினார். தொடர்ந்து குழாயிலுள் கொழுவிய சாரத்தில் காலை வைத்து குழாயைப் பிடித்துக் கொண்டு மேலே உள்ள மலகூட மூடியை தலையினால் அகற்ற முயற்சித்தார். தனது கால் வேதனை, களைப்பு எதனையும் பொருட்படுத்தாமல் கொஞ்சம் கொஞ்சமாக மூடியை அகற்றினார். சனி இரவு தொடங்கியவர் திங்கள் காலை ஒருவாறு தான் வெளியே வரக்கூடியளவு மூடியை அகற்றினார். சண்முகசுந்தரத்தின் உடலைப் பற்றிக்கூடச் சிந்திக்க முடியாது. மறுபடியும் இராணுவத்தில் அகப்படுவேனோ என்று பயந்து மிகவும் சிரமத்துடன் பதுங்கிப் பதுங்கி தெய்வாதீனமாக மீண்டும் வீடு வந்து சேர்ந்தார்.

*குறிப்பு: அம் மலகூடத்தில் ஒரு பெண்ணின் சட்டையும் பழைய மண்டையோடும் இருந்ததாகவும் அறியக்கூடியதாக உள்ளது.*

## எதிரொலிகள்

### தமிழகத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவும்

நான் ஈழமுரசு இதழ்களை தொடர்ந்து படித்து வருபவன். ஈழமுரசு இதழ் மூலமாகவே தமிழ் நாட்டிலுள்ள என்னைப் போன்ற தமிழீழ ஆதரவாளர்கள் ஈழத்தில் நடக்கும் உண்மைச் செய்திகளை அறிந்து கொள்ள முடிகிறது.

ஈழமுரசு இதழில் வெளியாகும் இந்தியச் செய்திகளில், அகில இந்திய (வட இந்திய) செய்திகளை வெளியிடுவதில்தான் அதிக நாட்டம் காட்டுகின்றீர்கள். தமிழ் நாட்டில் நடைபெறும் ஈழ ஆதரவுச் செய்திகளை வெளியிடுவதில்லை. தமிழ் நாட்டின் கிராமங்கள் நகரங்கள் தோறும் கூட்டங்கள், கருத்தரங்குகள் நடத்தும் ஈழ ஆதரவு அமைப்புக்களின் செய்திகளுக்கு தாங்கள் உரிய முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பது என் தாழ்மையான கருத்து.

மா. மு.குமார்
ஈரோடு, தமிழ்நாடு

### இனவாதம் வேண்டாம்

ஈழமுரசில் வரவர இனத்துவேஷம் கலந்த தொனியிலான எழுத்துக்கள் இடம்பெறுவது வருத்தம் தருவதாகவுள்ளது. சடையரின் எழுத்தில் 'சிணாக்கள், சிங்களப் பிள்ளைகள் என்ற மட்டிலிருந்தது, இப்போது முழக்கம் 158-இல் எதுகை மோனையார் பக்கங்களில் 'சிணாக்கள், முழு 'மூ' னாக்கள் என்று பரிணாமமடைந்து இனி முழு முக்கால்கள் என்று எழுதும் நாள் விரைவில் இல்லை என்பதைக் கூறாமல் கூறுகின்றன. ஒட்டுமொத்தச் சிங்களவர்களுமோ, முஸ்லிம்களுமோ எம் எதிரிகளென்ற முடிவுக்கு வந்துவிட்டோமா?

சரியாக விளக்க முயற்சித்தால் இதுவும் இனவாதத்தின் இன்னொரு கூறே. சிங்கள இனவாதிகள் எம்மை 'தக்கன் என்றோ, தோசைகள் என்றோ, பொட்டுக்காரர்கள் என்று கூறுவதற்கும் இதற்கும் என்ன வித்தியாசம்? எங்களின் இருத்தலை உறுதிசெய்யப் போராடுகின்ற நாம், இன்னொரு இனத்தின் இருத்தலில் உள்ள நியாயத்தையும் புரிந்துகொள்ளாதவர்களல்ல.

சின்னத்தனமான எழுத்துக்கள் எமக்கு ஒருபோதும் புகழ் சேர்க்காது. அது தேவையில்லை. சிலவேளைகளில் நூறு வருஷங்களின் பின்னால் ஈழமுரசை ஆராயப்போகும் மாணவன் ஒருவன் அதன் எழுத்துக்களின் கனத்தையும், போக்கையும் வைத்து நாம் நினைத்திருப்பது போலன்றி அது '20-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பாரிசிலிருந்து வெளி வந்த தமிழ் இனவாதப் பத்திரிகை' என்ற முடிவுக்கு வருதல் தவிர்க்க முடியாததாயிருக்கும்.

பொ. கருணாகரமூர்த்தி
பேர்லின்

### பார்வதியின் நாட்டுப்பற்று

ஈழமுரசில் வெளிவந்த 'தர்ம அடி' எனும் சிறுகதையில் வந்த பார்வதி எனும் ஈழத்தாயின் இனப்பற்று, நாட்டுப்பற்று என் நெஞ்சத்தை உருக வைத்துவிட்டது. அந்த பார்வதியின் மகனான சுந்தரம் போல் என்னும் பல சுந்தரர்கள் வெளிநாடுகளில் இருக்கிறார்கள். அவர்களுக்கு இது போன்ற தாயக உணர்வை ஊட்டுகின்ற கருத்துமிக்க கதைகள் கட்டுரைகள் மேலும் வெளிவர வேண்டும். உங்கள் பணிக்கு பாராட்டுக்கள்

'தமிழ் ஈழமே எங்கள் தாயகம்'

ஈழத் தமிழன்
ந.சாந்தன்

### பயனுள்ள பகுதி

ஈழமுரசில் இடம் பெறும் வர்த்தகம் மூலதனப் பகுதி எமக்கு மிகவும் பயனுள்ளதாகவும் பெறுமதி மிக்கதாகவும் இருக்கிறது.

இது போன்ற நம்மவர்களுக்கு புதிதான விடயங்களும், செய்திகளும், கட்டுரைகளும் ஈழமுரசில் தொடர்ந்து வெளியிடவேண்டும்.

ம.சுதர்சன்
பாரிஸ்-18

### தவறான செய்தி

கடந்த உங்களது ஈழமுரசு பதிப்பில் (முழக்கம் 149) விளையாட்டுப் பகுதியில் உலகக் கோப்பை உதைபந்தாட்டம் தொடர்பான செய்தியொன்றில், இதுவரை பதினேழு (17) உலகக்கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் நடந்ததாக குறிப்பிடப்பட்டு இருந்தது.

உண்மையில் சர்வதேசரீதியில் இதுவரை பதினைந்து (15) உலகக்கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிகளே நடந்து இருக்கின்றன. இந்தத் தவறைத் திருத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஈழமுரசு வாசகன்
பா. எழில்

### மாற்றம் தெரிகின்றது

ஈழமுரசின் சமீப இதழ்களில் நல்ல வரவேற்கத்தக்க மாற்றம் தெரிகின்றது. இருந்தாலும், இன்னும் மாற்றங்களைத் தொடர்ந்து செய்வதற்கு முயல வேண்டும். ஈழமுரசில் இடம்பெறும் எழுத்துப் பிழைகள், என்போன்ற தமிழ் அபிமானிகளை வருத்தமடையச் செய்கின்றது. தயவு செய்து எழுத்துப் பிழையை நீக்குவதற்கு முயற்சி எடுங்கள்.

க. அறிவொளி
பினாங், மலேசியா

# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை

## பகுதி II

45

1960—1970 காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில் செயற்பட்ட மூன்றாவது அணியான மொஸ்கோ சார்பு கம்யூனிஸ்ட் கட்சியும், சிறுபான்மைத் தமிழர் மகாசபையும், நா. சண்முகதாசன் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சியும், தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கமும் நடத்திய சாதிக்கும் தீண்டாமைக்கும் எதிரான போராட்டங்களை திசைதிருப்பி, சாதியை தக்க வைத்துக் கொண்டு 'பம்மாத்து' அரசியல் நடத்திவந்த 'தமிழரசுக்கட்சி, தமிழ் காங்கிரஸ் கட்சி' என்ற கனவான்கள் அணியினர் சாதிக்கு எதிரான போராட்டமாகக் காட்டி, தங்களது 'வாக்குச்சீட்டு' அரசியலை தொடர்ந்து நடத்துவதற்கு வழி அமைத்து கொடுத்தனர்.

# யாழ்ப்பாணத்திற்குள் ஊடுருவிய பெளத்த சிங்கள தேசியவாதம்

கம்யூனிஸ்ட் கட்சி என்ற பெயரில் பெளத்த சிங்கள தேசியவாதக் கட்சியான சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் நிழலாக இயங்கிய இவர்கள்; தீண்டாமை ஒழிப்பு, சாதிக்கு எதிரான போராட்டம் எனும் பெயரில் பெளத்த சிங்கள பேரின அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தனர்.

அதாவது இவர்கள் சாதி ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களை பெளத்தர்களாக மாற்றுவதன் மூலம் சாதியை ஒழித்து விடலாம் என்ற புதிய கண்டுபிடிப்பொன்றை கண்டுபிடித்திருந்தார்கள். சாதி குறைந்த பிள்ளைகளை சைவப் பள்ளிக்கூடங்கள் அனுமதிக்க மறுத்தால், பெளத்த சிங்கள பள்ளிக்கூடங்களை உருவாக்கி அவர்களுக்கு கல்வி கற்பிக்கலாம். அதாவது சாதி குறைந்த பிள்ளைகளுக்கு பெளத்த சிங்கள கல்வி கற்பிப்பதன் மூலம், சைவத் தமிழ் கல்வி கற்கும் யாழ்ப்பாண உயர் சாதி பிள்ளைகளைவிட அதிகளவு வேலை வாய்ப்புகளை பெற்றுக்கொள்ள வைக்கலாம் என்றும், அவ்வாறு அவர்கள் அதிக வேலை வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ளும்போது, பொருளாதார அடக்குமுறையிலிருந்து அவர்களது சமூகம் விடுதலையடையும். அதன் மூலம் சாதி ஒழிந்து விடும் என்றும் சாதியை ஒழிப்பதற்கான புதிய சித்தாந்த வரைவிலக்கணம் ஒன்றை உருவாக்கினர்.

உண்மையில் இது அப்பத்தை பங்கிட்டுக்கொள்ள பூனைகள் குரங்கிடம் சென்று ஆலோசனை கேட்ட கதை போன்றது தான். தமிழினத்தை அழிக்க, தமிழர் தாயகத்தை அழிக்க இடையுறாது முயன்று கொண்டிருந்த பெளத்த சிங்கள பேரினவாதிகளுக்கு மொஸ்கோ சார்புக் கம்யூனிஸ்ட் கட்சியினரும், சிறுபான்மைத் தமிழர் மகா சபையினதும் செயற்பாடுகள் அடங்காப் பசி கொண்ட ஓநாய்க்கு கோழிக்கூட்டை திறந்து விட்ட செய்கைக்கு ஒப்பானதாக இருந்தது.

இந்தக் காலகட்டத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பெளத்த விகாரைகளும், பெளத்த சிங்களப் பாடசாலைகளும் அமைக்கப்பட்டன. சாதி ஒழிப்புப் பணி என்ற பெயரில் பெளத்த சிங்கள பேரினவாதத்தை யாழ்ப்பாணக் குடா நாட்டில் வேரூன்ற வைத்து தமிழினத்தை அதன் தாயக மண்ணிலேயே



அழித்துச் சிதைக்கும் வேலையைச் செய்வதற்கு பெளத்த பிக்குகளும், சிங்கள ஆசிரியர்களும் படையெடுத்து வந்தனர்.

உண்மையில் ஒரு அடிமைத்தனத்தை ஒழிப்பதற்கு அதை விடப் பெரிய இன்னொரு அடிமைத்தனத்தை தேர்ந்தெடுத்த மொஸ்கோ சார்பு கம்யூனிஸ்ட் கட்சியினரதும், சிறுபான்மை தமிழர் மகா சபையினதும் முட்டாள்த்தனமான நடவடிக்கையானது. யாழ்ப்பாணக் குடா நாட்டில் சாதியை ஒழிப்பதற்குப் பதிலாக அதை நிரந்தரமாக்கி வைத்திருப்பதற்கே துணை போனது.

நா.சண்முகதாசன் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சியும், தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கமும் நடாத்திய ஆயுதப் போராட்டம் காரணமாகவும் - அதையொட்டி உருவாகிய அரசியல் விழிப்புணர்ச்சி காரணமாகவும் யாழ்ப்பாண சாதி அமைப்பு பெரும் அச்சுறுத்தலுக்குள்ளாகியிருந்தது. சாதி ரீதியாக தம்மால் ஒதுக்கி வைக்கப்பட்டவர்கள் போராடத் தொடங்கிவிட்டார்கள். திருப்பி அடிக்கத் தொடங்கி விட்டார்கள். இனியும் அவர்களை அடக்கி வைத்திருக்க முடியாது என்ற நெருக்கடி சாதியக் கனவான்களுக்கு உருவாக்கப் பட்டிருந்த நேரத்தில் பெளத்த சிங்கள பேரினவாதிகளின் யாழ்ப்பாண வருகை - ஒரு பெரிய எதிர்விளைவை ஏற்படுத்திவிட்டது.

அடிவாங்கிய பாம்பு மூர்க்கமாக சீறி எழுவது போல், சாதியக்கனவான்கள் வீறுகொண்டு எழுந்தனர். சைவப் பாரம்பரிய மண்ணில் பெளத்த விகாரைகளா? சைவமும் தமிழும் வளர்ந்த தேசத்தில் பெளத்தமும் சிங்களமும் வளர்வதா? என்று அவர்கள் குமுறி எழுந்தனர். சாதிக்கும் தீண்டாமைக்கும் எதிரான போராட்டமும் மும்முரமாக நடந்து கொண்டிருந்தபோது, தங்களது வாக்குச் சீட்டு அரசியலுக்கு பங்கம் வந்துவிடும் என்று நினைத்து மதில் மேல் பூனைகளாக இருந்த தமிழரசுக்கட்சியின் அடுத்த தேர்தலுக்கு வாக்குக் கேட்பதற்கு, ஒரு புதிய காரணம் கிடைத்துவிட்ட மகிழ்ச்சியில் களத்தில் இறங்கினர்.

தமிழர்களை ஒன்றுபட விட முடியாமல் பிரித்து வைத்திருப்பது சாதி. அதை ஒழித்து தமிழர்களை ஒன்றுபட வைப்பதன் மூலம்தான், பெளத்த சிங்கள பேரினவாத அடக்குமுறையிலிருந்து தமிழினத்தை விடுவிக்க முடியும், தமிழர் தாயகத்தை மீட்க முடியும். தமிழர்கள் சாதி ரீதியாகவும், பிரதேச ரீதியாகவும் பிரிந்திருப்பதால்தான், பெளத்த சிங்கள பேரினவாதிகள் தமிழர்களை அடக்கி, தமிழர் தாயகத்தை அபகரிக்க நினைக்கின்றார்கள் என்கின்ற அடிப்படை உண்மையை மக்களுக்கு எடுத்துச் சொல்லி சாதியையும், பிரதேசவாதத்தையும் இல்லாதொழிப்பதற்கான போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்குப் பதிலாக மொஸ்கோ சார்பு கம்யூனிஸ்ட் கட்சியினர் செய்த துரோகத்தனத்தோடு தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் போராட்டங்களையும் இணைத்துக் கொச்சைப்படுத்தி, சாதிய மற்றும் தீண்டாமை எதிர்ப்புப் போராட்டங்கள் பெளத்த சிங்கள தேசியவாதத்துக்குத் துணை போனவை. அந்தப் போராட்டங்களை நடத்தியவர்கள் தமிழினத் துரோகிகள் என்று முத்திரை குத்தும்



வேலையை 1970ல் யாழ்ப்பாணத்தில் சாதியக்கனவான்கள் திட்டமிட்டுச் செய்தனர்.

நா.சண்முகதாசன் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சி, இனமுரண்பாட்டை கவனத்தில் எடுக்காத தவறான வர்க்கப் பார்வை காரணமாக யாழ்ப்பாணக் குடா நாட்டில் நிகழ்ந்த பெளத்த சிங்கள பேரினவாத ஊடுருவலை எதிர்த்துப் போராடத்தவறியதும், தமிழ் சிங்கள பாட்டாளி வர்க்கத்தை ஒன்றிணைத்தல் என்ற பெயரில், தென்னிலங்கையில் குடா நாட்டின் சாதிய எதிர்ப்புப் போராட்டம் பற்றி மேற்கொண்ட பிரச்சாரங்களும் அவர்களையும் இனவிரோதிகள் என்று முத்திரை குத்துவதற்கு துணை புரிந்தன.

குறிப்பாக வர்க்க ஒற்றுமை என்ற பெயரில், யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிலவிய சாதிய அடக்குமுறை பற்றித் தென்னிலங்கையில் உள்ள சிங்கள மக்கள் மத்தியில் கம்யூனிஸ்ட் கட்சியினர் (சீன - மொஸ்கோ சார்பு 2 அணிகளும்) செய்த பிரச்சாரங்கள்- தமிழர்கள் ஒரு தேசிய இனமல்ல. அவர்கள் ஒரு சிறுபான்மை இனக்குழுவினரே அவர்களுக்குள்ளேயே மிகக் கொடுமையான அடக்குமுறை இருக்கிறது என்று பெளத்த சிங்கள தேசியவாதிகள் வெளியுலகிற்கு காட்டுவதற்கு வாய்ப்பாக அமைந்தது.

> சாதி ஒழிப்புப் பணி என்ற பெயரில் பெளத்த சிங்கள பேரினவாதத்தை யாழ்ப்பாணக் குடா நாட்டில் வேரூன்ற வைத்து தமிழினத்தை அதன் தாயக மண்ணிலேயே அழித்துச் சிதைக்கும் வேலையைச் செய்வதற்கு பெளத்த பிக்குகளும், சிங்கள ஆசிரியர்களும் படையெடுத்து வந்தனர்.

மறுபுறத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் சாதிய முரண்பாட்டை விட இனமுரண்பாடு கூர்மையாக்கப்பட்டபோது சாதி அமைப்புக்கு எதிராக திரமிக்க ஆயுதப் போராட்டம் நடத்தியவர்கள், அவர்களது கட்சியின் தத்துவார்த்தத் தவறால் நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டனர். சாதியையும் தீண்டாமையையும் ஒழிப்பதற்கு ஆயுத போராட்டம் நடத்திய சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சி வர்க்கப் போராட்டம் என்ற கற்பனாவாத நிலைப்பாட்டில் விடாப்பிடியாக இருந்ததால், தேசிய இன முரண்பாடு கூர்மையடைந்த நிலையில் தமிழ சிங்கள பாட்டாளி மக்களை இணைத்த நாடுதழுவிய வர்க்கப் போராட்டம் சாத்தியமற்றுப் போய்விட, அந்தக் கட்சியின் சார்பில் ஆயுதப் போரில் குதித்தவர்கள் 'வெறும் சாதியப் போராட்டக்காரர்கள்' என்ற குறுகிய வட்டத்துக்குள் தள்ளப்படும் நிலை ஏற்பட்டது. இவர்களால் ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியில் உருவாக்கப்பட்ட ஆயுதப்போராட்ட உணர்வு தொடர்ந்து சரியான முறையில் வழி நடாத்திச் செல்லப்படாததால் ஊர்ச் சண்டியர்களையும், அடியாட்களையும் உருவாக்கும் நிலைக்கு சீரழிந்து போனது.

வெட்டப்படாத சாதியமரம் பழையபடி வேர்விட்டு கிளை விட்டுத் தழைக்க ஆரம்பித்தது. தீண்டாமையின் வேகம் முன்பு போல் இல்லையென்றாலும் சாதி அமைப்பினுடைய அழுத்தங்கள் தொடரவே செய்தன. 1970 இற்குப் பின்பும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு திறந்துவிடப்படாத ஆலயங்கள், அவர்களது பிள்ளைகளைக் கல்வி கற்க அனுமதிக்காத பாடசாலைகள், தனியான மூக்குப்பேணி வைத்து தேநீர் கொடுக்கும் தேநீர்க்கடைகள் யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருக்கவே செய்தன.

ஆயினும் 1960-களில் இருந்த யாழ்ப்பாண சமூகத்திற்கும், 1970-ம் ஆண்டு பிறந்த போது இருந்த யாழ்ப்பாண சமூகத்திற்குமிடையில் கருத்தியல் ரீதியாக பாரிய மாற்றம் ஒன்றைக் காணக்கூடியதாக இருந்தது.

1960-களில் சமூக மாற்றத்திற்கான அடிப்படை உரிமைகளை வென்றெடுப்பதற்கான, போராட்டம் பற்றிய சிந்தனைகளும் எழுச்சியும் ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியிலும் உரிமைப் போராட்டங்களை எப்படி நசுக்குவது, உரிமைப் போர் நடாத்துபவர்களை எப்படி பிரித்தாள்வது என்கின்ற அதிகார வெறித்தனம் சாதியக்கனவான்கள் மத்தியில் இருந்தது. இன விடுதலை என்பது குடாநாட்டு மக்களைப் பொறுத்தவரை இவற்றுக்கு அடுத்தபடியாகத்தான் இருந்தது.

ஆனால் 1970-ம் ஆண்டு பிறந்த போது இனவிடுதலை பற்றிய சிந்தனை முதன்மைப்பட்டு இருந்தது.

**- நக்கீரன்**

சிறு கதை

# ஊழி முதல்வன் உருவம் போல்....

திருச்சிற்றம்பலம்!
'திருச்சிற்றம்பலம்'
தென்னாடுடைய சிவனே போற்றி!
உரக்கச் சொன்னார்
சுப்பிரமணிய பிள்ளை. கோவிலில் கூடியிருந்த பெரியோரும், சிறாரும் எதிரொலிப்போல்
'எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி' என்று கோஷம் செய்தனர். இவ்வொலி கோவில் முழுவதிலும் பட்டு ஒலித்து நிரப்பியது.
சுப்பிரமணியபிள்ளை தொடர்ந்தார்.
'தில்லையில் ஆடும் எம்பிரான் தென்னாட்டுக்கு மட்டும் தெய்வமன்று. அவன் சகல உலகிற்கும் தெய்வம். கரங்கள் கொடுத்ததே அவனை வணங்கத்தான். கண்கள் படைத்ததே அவன் ஆனந்தக் கூத்தை கண்டு களிக்கத்தான். கால்கள் படைத்ததே அவன் அம்பலத்தை நோக்கி நடக்கத்தான்...' என்றவாறு பேசத் தொடங்கினார். குழந்தைகளும், வயதானவர்களும் பாதிதூக்கத்தில் கேட்டுக்கொண்டு இருந்தனர்.

சுப்பிரமணியபிள்ளை கோவில் மணியக்காரர். பாண்டிய அரசர்களால் கட்டுவிக்கப்பட்ட பண்டைய கோவில் அது. சமயக் குரவர் நால்வரும் பாடிய திருத்தலம் அது. இத்தனை புகழ் இருந்தால் தான் அக்கோவிலை புனரமைத்து கட்டி நிறுத்திய திருமலை நாயக்கன் தன் இரு மனைவியருடன் கல்லாய் வாசலில் இன்றும் நிற்கிறான்.

ஒரு காலத்தில் சிறப்பாய் இருந்திருக்க வேண்டும். பெரிய கோவில் என்று பெயர் பெற்றிருக்கிறது! முலை உடைந்த அப்சரசுகளும், கைபெயர்ந்த பூத கணங்களும் பூசிய வர்ணமெல்லாம் போய் வெண் குஷ்டக்காரர்கள் போல் போய் வருவோரை பயமுறுத்திக்கொண்டு நின்றாலும், இன்னமும் அது பெரிய கோவில்தான்.

கோவில் வருமானமெல்லாம் வெகுவாய் குறைந்துவிட்டது. கோவில் நிலங்கள் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாய் பட்டா மாறிக்கொண்டு வருகின்றன. முன்பெல்லாம் உற்சவம் என்று சொன்னாலே காலையிலிருந்து காத்திருக்கும் 'சீர்வாதாங்கி' இளைஞர் கூட்டம் காணாமல் போய்விட்டது. கைலாசத்தைத் தோள் கொடுத்து தூக்க முயலும் இராவண வாகனத்தைச் சுமந்து வீதி வலம் வர குறைந்தது இருபது இளவட்டங்களாவது வேண்டும். உற்சவருக்கு போட்டி போடும் அழகு... இவ்விளைஞர்கள் ஸ்வாமி தூக்கிவரும்போது எம்பிபூரித்து நிற்கும் புஜங்களைப் பார்க்க கண்கள் கொள்ளாது. இப்போது தேடிப் பிடித்தாலும் ஆள் கிடைக்கமாட்டேன் என்கிறார்கள். சுப்பிரமணிய பிள்ளையும் தன் செல்வாக்கை பயன்படுத்தி குடியானவன் வீட்டு இளைஞர்களை கூட்டி வந்து இரண்டு வருடம் உற்சவம் நடத்திப் பார்த்தார். அதற்கு மேல் முடியவில்லை. இப்போது கைலாச -இராவண வாகனம் வெளியே கிளம்புவதே இல்லை. ஏதோ சுமாரான அலங்காரங்களுடன் ஸ்வாமியும் அம்மனும் டயர் சக்கர வண்டியில் வீதி வலம் வருகின்றனர்!

இருந்தாலும் பிள்ளையின் பந்தா ஒரு இம்மி அளவும் குறையவில்லை. அவர் கொடிகட்டிப் பறந்த காலங்கள் மலையேறிவிட்டன என அவர் நம்பத் தயாராய் இல்லை. அதே தோரணம்... அதிகாரம் பேச்சில்! இவர் கண் அசைத்தால்தான் ஓதுவார் 'தோடுடைய செவியனை'ப் பற்றி ஓதுவார். இவருடன் சமரசம் செய்து கொண்டுதான் சிவாச்சாரியார்களான கோவில் குருக்கள் பூஜை பண்ண முடியும். மடப்பள்ளி அய்யரும், அவர் சகாவுந்தான் பிள்ளையிடம் அதிகம் வாங்கிக் கட்டிக் கொள்வார்கள்,

'என்ன மசமசப்பிருங்கிட்டு இருந்தீங்க... ரெண்டு பேரும்.. உச்சிகால பூசைக்கு நேரமாகுதில்ல...' இப்படியான வசவை தினம் கேட்டு, கேட்டு அய்யருக்கும், மண்டபத்தில் நிற்கும் திருமலை நாயக்கர் குடும்பத்துக்கும் பழக்கமாகிப் போய்விட்டது.

மார்கழி மாசம் முழுவதும் சங்கர் 'சவுண்ட் சிஸ்டம்ஸ்' பையன்கள் முறையாக பிள்ளையிடம் வாங்கிக் கட்டிக் கொள்வார்கள், 'தாயோளிப் பசங்களா! அது என்ன தூக்கம்? பொணம் போல...நீ பாட்டு வச்சாத்தானே ஊருல உள்ளவனெல்லாம் உசும்புவான். நீயே மூதேவிபோல தூங்கிட்டு இருந்தா? சவுண்டைப் போடுங்கடா மடப்பய மவன்களா'. அலறிப் புடைத்துக்கொண்டு அரைத் தூக்கத்தில இவர்கள் வைக்க, 'மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால்' என எம்.எல்.வி நாளை ஊரில் துவங்கி வைப்பாள்.

பிள்ளை, 'தேவத்தா, கொம்மா' வென திட்டும்போது அக்கிரஹாரத்து மாமிகள் எதிர்பட்டால், 'சிவ, சிவ' வென காதைப் பொத்திக்கொண்டு சந்நிதிக்குள் ஓடிவிடுவர்.

பிள்ளை யாருக்கும் சட்டை செய்வதில்லை. அவரைப் பொறுத்தவரை அவர் அசைந்தால் அசைய வேண்டும் அந்தக் கோவிலே. இவர் பேச்சுப் பிரகாரம்தான் சிவனே பள்ளி எழுகிறார். இரவில் பள்ளி கொள்கிறார். அறுபத்தி மூன்று நாயன்மார்களும் சுப்பிரமணிய பிள்ளைக்கு பயந்துதான் கைகட்டி, வாய் பொத்தி நிற்கின்றனரோ எனத் தோன்றும்.

உதயகால பூஜையெல்லாம் இப்படி முடிந்த பிறகு வீட்டுக்கு வந்தார் பிள்ளை. மனைவி செண்பகம், 'காப்பி கொண்டாந்து தரவா' எனக் கேட்டாள்.

'சரி, சரி கொடு' என்றார் பிள்ளை, கோவில் காரம் இன்னும் குறையாமல் 'என்ன காப்பி இது? கழனித் தண்ணி மாதிரி! சுந்தரம் காப்பிக் கடையிலே காப்பிக் கொட்டைதான் அரைச்சுத்தரானா இல்லை பருத்திக்கொட்டையை அரைச்சுத் தரானா?' இரைந்தார் பிள்ளை.

'ஏன் இப்படி, ஊரே ரெண்டு படறமாதிரி கத்தறீங்க? காப்பிக் கடைக்காரரும் உங்க உறவுதானே, போய் நேரா சொல்றது?' செண்பகம் எதிர்க் குரல் கொடுத்தாள்.

'அவன்ட்ட எவன் பேசுவான். அவன் நாய்ப்பயல்'என்றார் பிள்ளை.

'அப்படீன்னா, காப்பியும் அப்பிடித்தான் இருக்கும். என்னை குத்தம் சொல்லாதீக!'

காப்பி டம்ளரை எடுத்துக்கொண்டே தொடர்ந்தாள் செண்பகம், 'எதுக்கும் நீங்களே சொல்லி நல்ல காப்பி வாங்கிட்டு வாங்க. ஒங்க பொண்ணு பரீட்சை முடிஞ்சு நாளைக்கு வருது. பட்டணத்துலே படிக்கற புள்ளே.. நல்லகாப்பிய வாய்கேட்கும்!'

'அடடா! கோவில் வேலையிலே அது மறந்தே போச்சு. டேய்..யாரடாவன்... போய் கோனார் வீட்டுத் தென்னங்கொல்லையிலே நாலு நல்ல எளநி பறிச்சுட்டு வாங்கடோய். சுகந்திக்கு பிடிக்கும்.

ஏய்... செம்பகம்... இட்லிக்கு அரைச்சு வச்சிருக்கேல்ல. சட்னிக்கு நல்ல தேங்காய் இருக்கில்லே?

'அடடா, பொண்ணு வரல்லா சொன்னவுடனே எங்களையெல்லாம் வெரட்டுறீங்களாக்கும். எல்லாஞ் சரியாத்தான் இருக்கு. நீங்க சாயங்காலமா போய் காபிப்பொடி வாங்கி வாங்க'

'என்ன பிள்ளைவாள், சுகந்தி நாளைக்கி வராளாமே. கேள்விப்பட்டேன். அதான் வீடே அமளிபடறது. அவளுக்கு நல்ல ஜாதகம் பிள்ளைவாள். புதனோட பார்வை பூர்ணமா இருக்கு. எம்.ஏ.வென்ன பி.எச்.டி என்ன... மகத்துலே பிறந்த குழந்தையாச்சே ஜெகத்தை ஆளப் போறா...' பாருமே நீர்... அவ வெளி நாடெல்லாம் போய் ஜமாய்க்கப் போறா... ஜோஸ்யர்

'டேய் கிட்டு! உங்கிட்ட எத்தன தரம் சொல்றது இந்த அழுக்கு வேட்டியை கட்டிக்கிட்டு அலையாதேன்னு. உங்க அழுக்கைப் பாத்தா பிரசாதத்தை எவன் சாப்பிடுவான்.'

கிட்டு ஒன்றும் பேசாமல் நின்றான்.

கிச்சய்யர் இறுக்கத்தை உடைக்க, 'ஏண்டா அம்பி, அவர்தான் சொல்றார் ரொம்பவோ, தோய்ச்ச வேஷ்டியக் கட்டிக்க வேண்டியதுதானே' என்றார்.

இப்போது கிட்டு கொஞ்சம் தைர்யம் வந்து பேசினான்.

'இல்ல மாமா. இது நேத்து தோய்ச்ச வேட்டிதான். மடப்பள்ளிலே வேல செய்யறப்போ எப்படியோ அழுக்கு வந்து ஒட்டிண்டுடறது. நா என்ன செய்ய.'

இந்த பாரு, நம்ம மேல குத்தம் சொல்றான். மடப்பள்ளிக்கு என்னடா, எல்லாஞ் சுத்தமாதான் இருக்கு' என்று ஜவாப்பு சொன்னார் பிள்ளை.

இதற்கிடையில் செண்பகம் பிரசாதத்தை வாங்கிக்கொண்டே, 'ஆமா நீங்கதான் மெச்சிக்கணும். மடப்பள்ளி பூரா ஒரே இருட்டா இருக்கு. பெரிய விளக்கை வாங்கிப் போடுங்க. அவரு மிளகைப் போடறாரா, கரப்பா பூச்சியைப் போடறாரான்னு அவருக்கே தெரியறது இல்ல'

அப்படியெல்லாம் இல்லம்மா... என்று நெளிந்தான் கிட்டு. இதைச் சாக்காக வைத்து பிள்ளை அய்யரிடம் வேண்டுகோள் விடுத்தார். 'எவ்வளவோ உபகாரம் பண்ண நீங்க, உங்க உபயமா மடப்பள்ளிக்கு ஒரு ட்யூப் லைட்டு வாங்கிப் போடுங்களேன்' என்றார்.

'போஷா! போட்டுட்டாப் போச்சு. நா என்ன கொடுக்கிறது அவன்னா வாங்கிக்கிறா. அவதானே நம்ம எல்லாருக்கும் படியளக்கிறா' என்றார் வெத்தலையை கொதப்பிக்கொண்டே கிச்சய்யர்.

அடடா... அப்புறம் என்றாள் செண்பகம் அதிசயத்துடன். 'அப்புறமென்ன. அவர் ஜோஸ்யத்தை சக்கரவர்த்தியாச்சே. அவர் சொன்ன வேளையைப் பாத்தே சேதுபதி விளையாடறார்னு புரிஞ்சு போச்சு'. 'என்ன சேதுபதி கன்னுக்குட்டிக்கெல்லாம் ஜாதகம் குறிக்கச் சொல்றீர் என்று கேட்டிருக்கிறார், சேதுபதி ரொம்ப ஆச்சர்யப்பட்டு போய்ட்டாராம்.

வெற்றிலையை மென்று கொண்டே, அட ஜோஸ்யத்திலே இல்லாதது என்னென்னவோ? என்றார் கிச்சய்யர்.



கிச்சய்யர் பேசிக் கொண்டே ஊஞ்சலில் வந்து உட்கார்ந்தார். 'வாங்க சாமி' என்று செண்பகம் வரவேற்றாள். 'அவுக இப்பதான் காப்பி குடிச்சாங்க. உங்களுக்கும் கலக்கட்டா' என்று ஒரு மரியாதைக்குக் கேட்டாள்.

பிள்ளைக்குத் தெரியும் அய்யர் குடிக்க மாட்டார் என்று. பெருந்தனக்காரரான கிருஷ்ண அய்யர் ஜோஸ்யத்தை பொழப்பாக நடத்தாமல் பொழுது போக்காக நடத்துபவர். ஒரு காலத்தில் வேத பாடசாலையெல்லாம் நடத்தியவர்கள். இப்படி செம்பகம் அசட்டுத்தனமாக நடந்து கொள்கிறாளேயென நினைத்து அய்யர் பேசுவதற்குள் விரைந்தார்...

'ஆமா பெரிய காப்பி. ஒங்காப்பிய அவர் குடிக்கணும்னு அலைருக்கென்ன தலையெழுத்தா. நல்ல காப்பிப் பொடி வாங்கியாரேன் அதுக்கப்புறம் கேளு. என்ன சொல்றீங்க அய்யரு.

அதெனலவென்ன இப்ப காபி குடிச்சாத்தான் ஆச்சா. ஒருவாய் வெத்தலை போட்டுண்டா போறது. உங்க கொடிக்கால் வெத்தலையைப் பத்திதான் ஊரே பேசறதே' என்று சிரித்தார் கிருஷ்ணய்யர் என்ற கிச்சய்யர்.

'உங்களுக்கில்லாமலா. போடுங்க என்று வெத்திலைப் பெட்டியை நீட்டினார் பிள்ளை.

அப்போது அங்கு வந்து சேர்ந்தான். கிட்டு என்ற மடப்பள்ளி பையன். அவன் கையில் பெரிய தாம்பாளமும் அதிலிருக்கும் வெண் பொங்கல் பிரசாதத்தை மூடிக் கொண்டு பெரிய மூடியும் இருந்தது. ஓரமாக வந்து நின்றான்

அவனைப் பார்த்ததும் பிள்ளைக்கு தன் அதிகார ஆணவம் தலைதூக்கியது.

செண்பகம் மறக்காமல் கேட்டாள் 'அதென்ன வந்தவுடனேயே சொன்னீகளே. சுகந்தி மேல படிக்க வெளிநாடெல்லாம் போவானது...... அதெல்லாமா தெரியுது சாதகத்திலே' ரொம்ப ஆச்சர்யத்துடன் கேட்டாள்.

'என்ன அப்படி கேட்டுட்ட.... என்னொட குருநாதரோட தாத்தா சேதுபதி சமஸ்தானத்துலே ஆஸ்தான ஜோஸ்யர். சேதுபதி ஒருநா இவரோட திறமைய சோதிக்க அன்னைக்கி காலேலே பெறந்த ஒரு கன்றுக்குட்டியோட பிறந்த நாழிகை குறிச்சு வைச்சுட்டு ஜோஸ்யர் வந்தவுடனே ஜாதகம் கணிக்கச் சொல்லி இருக்கிறார்.'

பிள்ளைவாள் வாய் திறந்தார். வெளிநாட்டுக்கென்ன இப்ப 'அவசரம் ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணுன்னு வளர்ந்த பொண்ணு கால, காலத்திலே நல்ல வரனாப் பாத்து கல்யாணத்தை முடிக்கிற விட்டுப்புட்டு' வியாழ நோக்கு எப்படி இருக்குன்னு பாருங்க. சாமி மொதல்ல'.

'நீர் ரொம்ப அவசரப்படுறீர். வியாழ நோக்கு ஓங்குட்டிக்கு இன்னும் வரலே. அவ படிக்கனும்ன்னுதான் ஜாதகம் சொல்றுது. நா என்ன பண்ண!' என்றார் அய்யர்

'சாதகத்திலே அப்படியிருந்தா, பொறவு நாமதான் என்ன செய்ய?' என்றாள் செண்பகம்.

பிள்ளைக்கு இந்த ஐடியாவே பிடிக்கவில்லை.

'நீ என்ன எல்லார் வாயையும் பாத்துக்கிட்டு. நீ போய் ஒன் ஜோலியைப் பாரேன்.' என்று கிட்டுவிடம் தன் ஆத்திரத்தை காட்டினார் பிள்ளை.

அவன் தன் விதியை நொந்து கொண்டு பிரசாதத்தட்டை தூக்கிய வண்ணம் வெளியேறினான்.

'போறான் பாவம் தாயில்லாப்பிள்ளை' என்றார் ஐயர். சுகந்தி காரில் வந்து இறங்கினாள். சல்வார் கம்மீஸ் தவழ இறங்கிய அவளை வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றது ஒருசிட்டு. சுகந்திக்கு வீட்டுக்கு வருவதென்றால் சந்தோஷமும், சங்கடமும். தாய் தந்தையரை பார்க்கும் சந்தோஷம், தோட்டத்து பம்பு செட்டில் குளிக்கும் குதூகலம், இளநி சாப்பிடும் ஆசை, இதெல்லாம் சந்தோஷமான விஷயங்கள். சங்கடமாகவே வெறிக்க, வெறிக்க பார்க்கும் ஜனங்கள் இவள் வருவது ஏதோ மந்திரி வருவது போல படும் அமர்க்களம். அப்புறம் கட்டுபட்டியான 'பின் போக்கான' பேச்சு. இரவில் வாங்கிய சுதந்திரம், விடியவே இல்லை... என்பது இவர்களுக்குத்தான் பொருந்தும். இவர்களை எப்போது விடுதலிப்பது?

'வாடி என் ராசாத்தி என்றாள் மூலையிலுள்ள ஆச்சி. அப்பாவுக்கு அத்தை அவளிடம் பாருக்கும் ஒட்டுதல் கிடையாது.

வாம்மா ரெயில் சரியான நேரத்துக்கு வந்துச்சா என்றார் பிள்ளை.

'அதெல்லா ஒண்ணும் பிரச்சிலை இல்லை என்று சொல்லிக் கொண்டே அம்மாவை போய் கட்டிக்கொண்டாள்.

'வந்தியாம்மா' பரீட்சையெல்லாம் நல்லா எழுதினியா? ஏன் உடம்பு இளச்சிருக்கு. ஒழுங்கா சாப்பிடறது இல்லையா?' என்றாள் செண்பகம் வாஞ்சையுடன்.

'பரீட்சையெல்லாம் கஷ்டமே இல்லம்மா. கார்னெல் யுனிவர்சிடிக்குக் கூட அப்ளை பண்ணியிருக்கேன். 'டோ ஃபல் எக்ஸாம்' எல்லாம் எழுதியாச்சு'

(மிகுதி அடுத்த வாரம்)

**நா.கண்ணன்**

இவ் வாரம் தமது பிறந்த தினத்தைக் கொண்டாடும் **செல்வன் குணாளன் லடேஸ்கரன், செல்வி ரவிதா ரவீந்திரன் ஆகியோரை** பல்கலையும் கற்று சிறப்புடன் வாழ்கவென குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.

## இவ்வாரக் கைவண்ணங்கள்



**செல்வி லக்ஷிகா ஸ்ரீ**

வயது – 06

இடம்:
அன்னை பூபதிக் கலைக்கூடம்,
ஒஸ்லோ, நோர்வே.






**செல்வி
எஸ்.கௌசல்யா**


இடம்:
பெசன்ட் நகர்,
தமிழ்நாடு.

## கவிதை பாடுவோம்

### குயிலக்கா

*அக்கா அக்கா குயிலக்கா*
*அழகாய் நீயும் பாடக்கா!*
*சுகமாய் தம்பி தூங்கிடவே*
*நன்றாய் நீயும் பாடக்கா!*
*பாரதி பாடிய குயிலக்கா –நீ*
*பாட்டுப் பாடி மகிழ்விப்பாய்*
*பாட்டைக் கேட்ட மகிழ்ச்சியிலே–நானும்*
*பாடம் யாவும் படித்திடுவேன்!*
*பள்ளி விட்டு வந்ததுமே–நான்*
*பாட்டும் மகிழ்வாய் பாடிடுவேன்*
*நாளும் கேட்கும் உன் குரலோசை*
*நாளைய உலகை வாழ்த்தட்டும்*

குட்டி அண்ணன், தமிழ்நாடு




## குட்டிக்கதை படிப்போம்

### அரசனும் புலவனும்




முன்னொரு காலத்தில் ஒரு அரசனிடம் ஒரு புலவர் பாடுவதற்கு வந்தார். புலவர் பாட ஆரம்பித்தவுடன் அவரின் முன்னே ஒரு பெரிய தாம்பாளத்தட்டை கொண்டுவந்து வைக்கும்படி அரசன் தனது உதவியாளர்களிடம் கூறினான்.

புலவர் முதல் ராகம் பாடி முடிந்தவுடன் அவரின் முன்னால் இருந்த தாம்பாளத்தில் இரண்டு கைநிறைய பொன்னை அள்ளிப்போட்டான் அரசன். புலவன் பூரித்துப் போனான்.

இரண்டாவது ராகத்தைத் தொடங்கி மேலும் சிறப்பாகப் பாடினான் புலவன். அரசனும் மெய் மறந்து ஆகா... அடடா... என்று சொல்லி இசையை அனுபவித்தான். அந்த ராகத்தை புலவன் பாடி முடித்ததும் மேலும் இரண்டு கை பொன்னை அள்ளி தாம்பாளத்தில் குவித்தான்.

புலவன் மேலும் மகிழ்ச்சிகொண்டு மூன்றாவதது பாடலை ஒரு அபிநயம் செய்து படித்தார். அரசனும் நிறை சந்தோஷப்பட்டு ரசித்துக் கேட்டான். ராகம் முடிந்ததும் இன்னும் இரண்டு கை பொன்னை அள்ளி தாம்பாளத்தில் போட்டான். இப்படியாக ஆசையினால் புலவன் தொடர்ந்து பாடி இறுதியில் அலுத்துப்போய் பாடுவதை நிறுத்தினார். தாம்பாளமும் பொன்னால் நிறைந்துவிட்டது.



இறுதியாக அரசன் சொன்னான் 'நீர் பாடிப் பாடி என்னை மகிழ்வித்தீர். அதைப் போலவே நானும் உம் எதிரே பொன்னைக் குவித்துக் குவித்து உம்மை மகிழ்வித்தேன். இரண்டு மகிழ்ச்சிகளும் ஒன்றுக்கொன்று சரியாய்ப் போய்விட்டது. இப்போது யாருக்கு யாரும் ஒன்றும் தரவேண்டியதில்லை. நீர் போய்விட்டு வாரும் என்று சொல்லி தாம்பாளத்தை எடுத்து வீட்டுக்குள் வைக்கும்படி தனது உதவியாளனிடம் அரசன் கட்டளையிட்டான்.

*(தமிழ்நாட்டுக் கிராமியக் கதைகள்)*

## கெட்டிக்காரக் குஞ்சுகள்

### குற்றம் குற்றமே!



### பிழையை எதிர்த்தார்

இந்தியாவின் தமிழக மாநிலத்தில் ஒரு உயர் நிலைப் பாடசாலையில் 8-ம் வகுப்பில் கல்வி பயின்று கொண்டிருந்த ஆர். சுகன்யா என்ற 12 வயதுச் சிறுமி. 1995 இல் தமிழகப் பாடசாலைகளின் 6-ம் வகுப்பு தமிழ் பாடநூல் புத்தகமொன்றில் உவமைப் பிழையொன்றைக் கண்டுபிடித்து அதனை அரசு திருத்திக் கொள்ளவும் வழிசெய்தார். மு.கோவிந்தராசன் என்பவர் எழுதிய கவிதையொன்றிலே

*'தொழுநோய் கொண்ட மாந்தரையே*
*தூரவிரட்டி நிற்றல் போல*
*அழுகும் சாதி வெறியினையே*
*அடியோடு அடித்து விரட்டிடுவீர்'*

என்ற வரிகளிலே தொழுநோயாளர்கள் இழிவாக கொள்ளப்பட்டதைக் கண்டே சிறுமி சுகன்யா கொதித்தார். தொழுநோயை இல்லாமல் செய்து அதனால் பாதிக்கப்பட்டவர்களையும் காப்பாற்றுவதற்கு அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வரும் வேளையில் அந்த நோயாளர்களை இழிவு படுத்தும் வகையில் பாடப்புத்தகத்தில் ஒரு பாடல் அமைய முடியுமா? எனக் கேள்வி எழுப்பினார். அவரது நியாயமான கேள்வி எங்கும் எதிரொலித்தது. தமிழக அரசின் காதுகளையும் அது தட்டியது. அதன் பின் 1996-ம் ஆண்டு அப் புத்தகத்தில் அந்த வரிகள் நீக்கப்பட்டு அப்புத்தகம் மறுபதிப்பு செய்யப்பட்டது. யாராக இருந்தாலும் பிழை விட்டால் அது குற்றம் குற்றமே எனச் சுட்டிக்காட்டி அதில் வெற்றியும் அடைந்த சுகன்யாவை நாங்களும் பாராட்டுவோம்.


தகவல்: வள்ளியம்மை
-தமிழகம்-

## அறிந்து கொள்ளுங்கள்

### விசித்திர எறும்புத்தின்னி

ANT EATER என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் 'எறும்புத்தின்னி' ஒரு விசித்திரமான விலங்காகும். இது பெரிய பெரிய எறும்புப் புற்றுகளை உடைத்து அங்கு வாழும் சர்க்கரை எறும்புகள் எனப்படும் வெள்ளை நிற எறும்புகளையும் அவற்றின் முட்டைகளையும் ருசித்துச் சாப்பிடும்.

எப்படித் தெரியுமா? இதற்கு கொக்குக்கு இருப்பது போல நீண்ட கூரான வாய் உண்டு. இதனுடைய நாக்கின் நீளம் 30 செ.மீற்றர்கள். இந்த நீளமாக நாக்கை நீட்டியே தப்பித்து ஓடும் எறும்புகளையும் பிடித்துச் சாப்பிட்டுவிடும் இந்த விலங்கு. இதன் நாக்கிலே சுரக்கும் ஒரு பசை போன்ற திரவம் ஓடும் எறும்புகளில் ஒட்டிப்பிடித்துவிடும். பின்னர் இழுத்து வாய்க்குள் போடவேண்டியதுதான்.



இந்த விலங்கின் இன்னொரு சிறப்பு என்ன தெரியுமா? புற்றுகளில் எறும்புகள் கிடைக்காவிட்டால் சுமார் 3 நாட்கள் வரை பட்டினி கிடந்து எறும்புகளைத் தேடும் வேட்டையில் ஈடுபடும்.

இவ் எறும்புத்தின்னி விலங்குகளில் மூன்றுவகை உண்டு. 'ஜெயன்ட்' எனப்படும் இராட்சத எறும்புத்தின்னி 2 மீற்றர் நீளமுடையது. அடுத்து 'டாமான்டுவா' என்னும் நடுத்தர எறும்புத்தின்னி 1 மீற்றர் நீளமுடையது. மிகச் சிறிய எறும்புத்தின்னி 50 செ.மீற்றர் நீளமுடைய 'சில்க்கி' என்பதாகும்.



# சந்திரிகாவின் அரசியல் சூதிற்கு தமிழ்ப் பெண்கள் என்ன பகடைக்காயா?

இலங்கையின் சிங்கள இராணுவக் குண்டர்களால் தமிழ்ப் பெண்களிற்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் ஏராளம். அதில புதிதொரு வகையாக தமிழ்ப் பெண்களை இராணுவத்திற்கு ஆட்சேர்ப்புக்கு அழைப்பது இன்னுமொரு அவலத்தின் அறிகுறியே. நீதியின் வழியில் நடாத்தப்படும் எம் போராட்டத்தை ஏதோ ஒரு வகையில மாசுபடுத்தி தமிழினம் தனித்துவமானதல்ல என்பதை வெளியுலகத்திற்குக் காட்டவே இராணுவமும் அதனைச் சேர்ந்தவர்களும் தொடர்ச்சியாக முயற்சிக்கின்றனர். அதன் அடிப்படையில்தான் பல பாலியல் பலாத்காரங்கள் நடந்தன. ஏன் இன்றும் மறைவில் நடந்து வருகிறது. அது மட்டுமல்லாது, கட்டாயத் திருமணத்திற்கு தமிழ்ப் பெண்களை வற்புறுத்துவதும் இதன் நோக்கமதான். ஆனால், இவர்களின் இத்திட்டம் பலித்ததா என்றால், இல்லை. காரணம் உயிரை விட மானத்தையே பெரிதாக நேசித்து தம் தாய் மண்ணிற்காக களத்திலே சமராடும் பல வேங்கைகள் பிறந்த தமிழ் மண்ணில் எவ்வாறு இது சாத்தியம்?

ஆகவே, பிறிதொரு வழியில் சிங்கள அரசு எம் பெண்களைத் தம் தந்திரமான திட்டத்திற்கு பயன்படுத்தும் விதமாகவே இன்று இவ் ஆட்சேர்ப்பு அழைப்பை விடுத்திருக்கிறது. இது வெற்றி பெற்றால் சர்வ தேசத்திற்குத் தம்பட்டம் போடலாம். இதோ நாம தமிழருக்கு எதிராக யுத்தம் செய்யவில்லை. புலிகளைத்தான் கொல்கிறோம். இதற்கு ஆதாரமாக தமிழ்ப் பெண்களே எம் படையில்



இணைந்து போராடுகிறார்கள் என்று துணிச்சலாகப் பிரச்சாரம் செய்யலாம். அது மட்டுமா இன்று வலிகாமத்தில் புலிகளின் ஆதிக்கம் மீண்டும் அதிகரித்து வருகிறது. இதனால் நாளை தாம் இழக்கப்போகும் உயிர் இழப்பைத் தடுக்கவும் இது உதவலாம. அல்லது இவர்களே நாளை தாம் பயன்படுத்தப் போகும் மனிதக் கேடயமாகவும் இருக்கலாம். ஆனால், இவை யாவும் நிகழப்படாத ஒன்று. ஆகையால், சிலவேளைகளில் கட்டாயத் திட்டமாகக் கொண்டுவந்தாலும் சந்தேகப்படுவதிற்கில்லை. ஆகவே, இதை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டிய பொறுப்பு இராணுவத்தின் பிடியிலுள்ள பெண்களிடமும், புலம்பெயர்ந்த எம்மிடமும்தான் இருக்கிறது. ஆனால், நாலாபுறமும் இராணுவக் காவல நிறைந்த வலிகாமப் பிரதேசத்தில் இப்போராட்டம் நிகழ்த்துவது மிக மிக கடினமானது. இருப்பினும் அண்மையில் காணமற் போனவர்களுக்காக அன்னையர் முன்னணியால் நடாத்தப்பட்ட உண்ணாவிரதப் போராட்டம் சிங்கள இராணுவத்தின் அச்சுறுத்தலிற்கு ஒரு சவால்தான். ஏனெனில், 'பருந்து தன குஞ்சைக் கொத்தும்போதுதான் உயரப் பறக்காத கோழியும் வீரத்துடன் தொடர்ந்து பறந்து சண்டை போடுகிறது'. அதுபோல் இது எம் மானத்தின் பிரச்சினை.

இங்கு பயத்தை எதிர்கொண்டு துணிவுடன் போராட வேண்டிய தேவை எல்லோருக்கும் உண்டு. அப்படி இல்லையேல் இன்னும் பல கிருஷாந்தியும, ராஜினியும், கோணேஸ்வரிகளையும் உருவாக்கிக் கொண்டே போவதற்கு நாமும் ஆதரித்தது போல அமைந்துவிடும். அது மட்டுமல்லாது இராணுவத்திற்கும் தாம எம்மேல் நினைத்த படியெல்லாம் எதுவும் செய்யலாம் என்ற துணிவும் வளர்ந்துவிடும.

## பெண்கள் பக்கம்

### துணிவு

பெண்ணே
நீ
விழித்து எழுவதற்கு
எது முட்டுக்கட்டை
நீ
உன்னை உயர்த்துவதற்கு
எது தடை
நீ
உன் ஆற்றலை
வளர்ப்பதற்கு
எது முட்கம்பி
ஓட்டு மொத்தமாக
நீ
வெளியே வராமல்
இருப்பதற்கு
உனக்கு எதைக்காட்டி
பயமுறுத்துகிறார்கள்
ஓ..............
புரிந்து கொள்கின்றேன்
பெண்ணே புரிந்து
கொள்கின்றேன்!
உனக்கு எதைக்காட்டி
பயமுறுத்துகிறார்கள் என்று
கல்யாணம் பெண்ணே!
கல்யாணம்!
கல்யாணத்தைக் காட்டி.
கட்டிப் போடுகிறார்கள் –
உன்னை
கடுமையான இருளில்!
பெண்ணே
நீ துணிந்தால் -- உன்னை
வெளிச்சத்தைப் பார்க்க
முடியும்
நீ துணிந்தால்
தூணாக உயர்ந்து
உன்னாற்றலை வளர்க்க
முடியும்!
பெண்ணே
சமூகம் க(ா)ட்டும்
கல்யாணம்
கண்ணைக் கட்டி
காட்டில் விடும் வித்தை!
விஷமான வித்தைக்கு
பலியாக்காதே உன்னை...
உன்னால் புரிந்து
கொண்டவனை
உன்னை முழுமையாக
நேசிப்பவனை
உன் விருப்பு வெறுப்புக்களை
புரிந்து கொண்டவனை
புத்திசாலித் தனமாக
புருஷனாக ஏற்றுக்கொள்..
கன்னியமான கல்யாணம்
இதுதான் பெண்ணே!
பெண்ணே – நீ
துணிந்து நின்றால் — உன்
எதிர்காலம்
கருங்கல் தூணாகும்
பெண்ணே!
துணிந்தபின்
துயில் கொள்ளாதே!

- ஸ்ரீகலா

# கேரளாவில் இந்துக் கோவிலில் அமைதியாக ஒருபுதுமை

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

இந்தியாவில் படித்தவர்கள் அதிகமுள்ள கேரளமாநிலத்தில் அமைதியாக ஒரு புதுமை நடந்து வருகின்றது. அது கேராளாவின் தென் பகுதியில் உள்ள இரு பிரதான கோயில்களில் பெண்கள் அர்ச்சகராகவுள்ளமை தான். கடந்த மூன்று வாரங்களாக இக் கோயில்களில் பெண் புரோகிதர்களே மூலஸ்தானம் வரை சென்று மந்திரங்களை ஓதி பூசைகளைச் செய்து வருகின்றனர். இக்கோயில்களில் ஒன்று கேரளாவின் தலைநகர் திருவனந்தபுரத்திலும், மற்றையது திருச்சூரிலுள்ள கோடங்களூரிலும் அமைந்துள்ளது.

இக்கோயில்களில் பூசை செய்யும் பெண்கள் ஆன்மீகத் தலைவியை 'மாதா அமிர்தானந்த மாயி' என்றே அழைக்கப் படுகின்றது. இவர்கள் மிக மிகப் படித்தவர்களாகவும் சமஸ்கிருதத்தில் பூரண பாண்டித்தியம் உள்ளவர்களாகவுமே இருக்கின்றனர். கோடங்களூரின் கோயிலின் பிரமஸ்தான அர்ச்சகராக கடமையாற்றும் பவித்திராமித்ரா, சத்தியானியா என்ற பெண்கள் வர்த்தகத் துறையில் M.com என்ற பட்டத்தை பெற்றுள்ளனர். அதை விட துணைப்பேராசிரியராவ தனது தொழிலையும் கைகழுவி விட்டு 10 வருடங்களுக்கு முன் ஆச்சிரமத்தில் இணைந்து முழுமையாகப் பயிற்றுவிக்கப்பட்டே இன்று இவ் நிலைக்கு வந்துள்ளனர்.


இதைப் பற்றி சத்தியானியா சொல்கிறார், நான் மூலஸ்தானம் செல்ல ஒருதடையும் விதிக்கப் படவில்லை. ஆனால் ஆரம்பத்தில் நிர்வாகசபை பெண்களை நியமிப்பதையிட்டு பயந்து போய்த் தான் இருந்தது. காரணம் பக்தர்களால் எதிர்ப்பு வரும் என்றுதான். ஆனால் அதற்கு நேர் எதிர்மாறாக இன்று ஏராளமானவர்கள் கோயிலிற்கு வருகை தருவதோடு பூசையும் சிறப்பாக நடைபெறுவதாக சொல்கிறார்கள். இவருக்கு அடுத்த படியுள்ள 'பிந்து' என அழைக்கப்படும் சாதாரண பெண் அர்ச்சகர்களும் மந்திரங்கள் ஓதி மலரும் தூவி புஸ்பாஞ்சலி செய்து வருகின்றார்கள். இத்தோடு ஆண் அர்ச்சகர்களே வெளியே நிற்கும் பக்தர்களுக்கு பிரசாதத்தை வழங்கிக்கொள்கிறார்கள். இனம் பெண்கள் புரோகிதர்களாக வர திருமணம் செய்யும் முன்பு 3 வருடம் சமஸ்கிருதத்தையும் பூசைவிதிகளையும் படிக்க வேண்டும். பின் திருவனந்தபுரத்திலுள்ள 'கைமனம் ஆச்சிரமத்தின் தலைவி சுவாமி தயானமித்திரா, சத்தியானியா அவர்களால் பாரபட்சம அற்ற முறையில் அர்ச்சகர்களாக அமர்த்தப்படுகின்றார்கள்.

# இந்தியாவில் விபச்சாரம் சட்டரீதியாக்கப்படுமா?

இந்தியாவின் சுகாதாரம், குடும்பக்கட்டுப்பாடு என்பவற்றின் மந்திரி ரேணுகா சௌத்திரி விபச்சாரத்தை சட்டரீதியாக்கினால் என்ன என்ற கேள்வியை அரசாங்கத்திடையே எழுப்பியுள்ளார். இதற்கு காரணம் HIV / AIDS நோயால் நாடே முழுமையாக இன்று ஆக்கிரமிக்கப்பட்டு வருகிறது. இத்தொழிலை சட்டரீதியாக்கினால் இந்நோயைக் கட்டுப்படுத்தலாம் என்பதே இவர் நோக்கம். இது சரியான அளவில் அமுலாகும் பட்சத்தில் குறிப்பாக 2 நன்மைகள் கிட்டலாம். ஒன்று பலவந்தமாக பெண்களை பாலியல் ரீதியில் துன்புறுத்துவதைத் தடை செய்யலாம். இரண்டாவது இளம் பெண்களை வைத்துக் கொண்டுதரகர் தொழில் செய்வோரையும் வாடிக்கையாளர்களையும் கட்டுப்படுத்தலாம் என்பதாகும். அண்மையில் கல்கத்தாவில் 23 மில்லியன் விபச்சாரத் தொழிலில் ஈடுபடுத்துவோர் கூடி தம் தொழிலை சட்டரீதியாக்கக் கோரி போராட்டம் நடத்தினர். இதில் நாலு பேரில் ஒன்று 18 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகள் என்பது குறிப்பிட வேண்டிய ஒன்றாகும். அண்மையில் பாரிசில் Unaids இன் அறிக்கையின் படி உலகிலுள்ள எயிட்ஸ் நோயாளர்கள் இந்தியாவிலேயே அதிகம் என்றும், இதன் தொகை 3 - 5 மில்லியன் வரையாகும் என்ற அதிர்ச்சியான தகவலை வெளியிட்டுள்ளது.

## டயானா மியூசியம்

இளவரசி டயானா நினைவாக ஒரு அருட்காட்சியகம் விரைவில் அமைக்கப்படவுள்ளது. இதை அமைப்பது வேறுயாருமல்ல, ராணி எலிசபெத்தான்! இதற்காக தனது தங்கை மார்க்ரெட்டு வசித்துவந்த 'கெங்சிங்டன்' என்ற அரண்மனையைக் காலி செய்து கொடுத்துள்ளார். இவ் அருங்காட்சியகத்தில் டயானா பாவித்த அனைத்து பொருட்களும் பார்வைக்கு வைக்கப்படும் அதுமட்டுமல்லாது மற்ற அரண்மனையில் சேதிக் கிடக்கும் வேறு பல ஓவியங்களும் இங்கே சேர்க்கப்படவுள்ளன. இதை இலண்டனுக்கு வருகை தரும் உல்லாசப் பயணிகள் பார்வையிட அனுமதிக்கப்படுமாம்.



***சராசரி ரசிகர்களுக்கு உளவியல் விசயம் புரியாது என்பது சரிதான். அதே சமயம் அவர்களின் ரசனையில் இருந்து விலகிப்போகவும் நான் நினைக்கவில்லை. நான் எடுத்துக் கொண்ட கதைக்குத் தேவையான வகையில் திரைக்கதை பண்ணினேன். வெளிப்படையாகச் சொல்லணும்னா ரசிகர்கள் உயரத்தில் இருக்கிறார்கள் என நம்பி மேலே போனேன். அங்கே அவர்கள் இல்லை. எப்போதும் போல் கீழே தான் இருக்கிறார்கள். அதனால் நாலும் மறுபடி கீழே வரப்போகிறேன்.***

– அகத்தியன் / நியூபிலிமாலயா / டிசம்பர் 1997



பாலியல் ரீதியாக நிறைய மனத்தடைகளும் அறியாமையும் கொண்ட சமூகம் எங்களுடையது. எங்களது பாலுறவு மதிப்பீடுகளில் மதமும் அறிவியல் நெறிகளும் தான் எமது மனத்தையும் நம்பிக்கைகளையும் உருவாக்குவதில் பெரும் பங்கு வகிக்கிறது. மருத்துவ ரீதியான உடலியல் ரீதியான புரிதல்களுக்கு அங்கு கொஞ்சமே இடமுண்டு. போதாதற்கு எமது அறியாமையை புனித நெறிகளால் நியாயப்படுத்திக் கொள்ளவும் செய்வதுண்டு. பாலியல் ரீதியான பிரச்சினைகளை உடலியல் ரீதியான விஞ்ஞான அணுகுமுறை கொண்டோ, புறநிலை ரீதியான சமூக மனோவியல் . பகுப்பாய்வுடனோ பார்ப்பதில்லை. பாலியல் ரீதியான தடைகளைக் காப்பதற்கு மருத்துவ ரீதியானதும் மனோவியல் ரீதியானதுமான பகுப்பாய்வு மிக மிக அவசியம்.

ஒரு மிக முக்கியமான பாலியல் சிக்கலை எடுத்துக் கொண்ட அகத்தியன், அந்தச் சிக்கலில்

ஒரு மனநல மருத்துவர். அவரது மேஜரான மகள்; மேஜர் என்பதற்கு இங்கு சமூக நிறுவனங்கள் ஏற்படுத்தி வைத்த ஒரு சட்டகம். அப்பெண் மனோரீதியில் முதிர்ச்சியடைந்த பெண்ணாகவே இருக்கிறாள். தன்நம்பிக்கை கொண்டவராகவும் அசட்டுத்தனங்கள் அற்றவராகவுமே சித்தரிக்கப்படுகிறாள்.

மனநல மருத்துவர் மத்தியதர வயதில் மரணமெய்துகிறார். மகள் ஆர்ப்பாட்டமாக அழுது புரண்டு தன் துக்கத்தை வெளிப்படுத்தவில்லை. அவளுக்கு அப்பா மாதிரியான ஆணின் துணை தேவைப்படுகிறது. ஏற்கனவே ஏற்பாடாகின படியால் இராணுவத்திலிருந்து சுயவிருப்பில் வெளியேறிவரும் 41 வயது மத்தியதர வயதினரானவர் அங்கு குடியேறுகிறார். பெண்ணுக்கும்

பாலும் ஐரோப்பியர் கூடும் இடங்கள். ஐரோப்பியர்கள் இவர்களின் உறவை சகஜமாக, சாதாரணமாக ஆண் பெண் உறவாக விமர்சனமற்று 'தலை நுழைக்காது' இயல்பாக ஒப்புக் கொள்கிறார்கள்.

சிற்சில காட்சிகளில் மணி

## சினிமா

வண்ணன் தமிழ் மனிதர்களின் இரட்டை மதிப்பீடுகளை நையாண்டி செய்யவும் செய்கிறார். காத்தியினுடைய புத்தனுடைய வாழ்க்கை வரலாற்றை படித்தபடி அடுத்தவனின் தல

கொஞ்சநஞ்சமும் திரைக்கதையில் இல்லை.

இங்கு இயலாமை மனரீதியானது என்பதற்கான மத ரீதியான, அறிவியல் ரீதியான, சமூக ரீதியான காரணங்கள் என்ன?

இதைப்பற்றிய தீவிரமான விசாரணைகளும் திரைக்கதையில் இல்லை.

பிற்பாடு திரைக்கதையில் தீர்க்கப்பட முடியாத மையமான பிரச்சினையாக இன்று இருப்பது என்ன?

லவத்தியர்கள் தேர்வதும் இது தான். நாயகன் நாயகி தேர்ந்து கொள்வதும் இதுதான்.

அகத்தியன் புலனடக்கத்தை வலியுறுத்தி வாழ்ந்த இந்தியத் துறவிகளை அறுதியாக நிறுத்துகிறார்.

ராமகிருஷ்ணர் பரமகம்ஸர், சாரதாதேவி, விவேகானந்தர், திரேசா என அவரது பட்டியல் நீள்கிறது.

(நியூபிலிமாலயா - டிசம்பர் 97: அகத்தியன் நேர்முகம்)

திரைக்கதையைப் பற்றிச் சொல்லவரும் அகத்தியன் டைரக்டராகவோ கதாசிரியராகவோ திரைக்கதையில்தான் எங்கேயோ தவறுவிட்டுவிட்டதாகக் குறிப்பிடுகிறார்.

அவர் விட்ட தவறு இது தான் என்று சொல்லத்தோன்றுகின்றது:

பாலுறவு சம்பந்தமான அறியாமைகளும பிரமைகளும் மூடுண்ட பிரதேசங்களும் தமிழ் சமூகத்தில் மலிந்து இருக்கின்றன. இந்த இருப்பை விலக்க விஞ்ஞான ரீதியான உளவியல் / மனோவியல் பகுப்பாய்வுகளே வழிகாட்டும். மத ரீதியான சரணடைதல்கள் வழிகாட்டாது. ஏனெனில் பிரச்சினை பூமியில் கால்பரவி நிற்கின்ற நிஜம்.

இன்று இலமணியிலும் பல்வேறு நாளிதழ்களிலும் புலம்பெயர் நாடுகளிலும் வரும் ஆசிய இதழ்களிலும் பார்த்தால் தெரியும். விதவைகள், மனைவியை இழந்தவர்கள், விவாகரத்தானவர்கள், தனியே வாழுபவர்கள், பல்வேறு காரணங்களால் இப்பொழுதுதான் மணமுடிக்க நேர்ந்தவர்கள் என இன்றைய திருமண விளம்பரங்களைப் பார்க்க முடியும். இவர்கள் மத்தியதர வயதினர்கள் தான். இந்திய வைத்திய மரபில் பிரித்து வைக்கப்பட்ட 16-20,

# அகத்தியனின் விடுகதை

இராணுவத்துக்காரனுக்கும் நட்பும் புரிதலும் ஈர்ப்பும் ஏற்படுகிறது. இருவருமே இந்த உறவை மரணமுற்ற தகப்பனுக்கு பதிலான புனித வரவாகவே புரிந்து கொள்கிறார்கள். 'சிக்மண்ட் பிராய்டன்' தந்தை மகள் / தாய் / மகன் உறவை அகத்தியன் தனது வழியில் புரிந்தபடி இப்படத்தில் சொல்ல முயன்றிருக்கிறார். இவர்களின் இந்த சம்சாரமான மதிப்பீடுகளை சுற்றிலும் உள்ள சமூகத்தவர் மேலும் இறுக்குகிறார்கள் கல்லூரிப் பேராசிரியர்கள் சக மாணவ மாணவிகள், நகைக்கடையில் எதிர்ப்படும் பெண் போன்றோர்கள் இவர்களின் உறவு தகப்பன் / மகள் உறவாகவே இருக்கத்தக்கது என்பதை வலியுறுத்துகிறார்கள்.

காட்சியமைப்புகளில் ஆண் பெண் உறவு தொடர்பான

திய காசுக்கு ஆசைப்படும் மனிதர்கள் காணபிக்கப்படுகிறார்கள்.

ஒரு வகையில் காட்சிகள் தமிழ்ச்சமூகத்தின் போலி நிலைப்பாடுகளைக் காண்பிக்கவே செய்கிறது. பாலுறவு குறித்த மேற்கத்தியர்களின் விஞ்ஞான பூர்வமான அணுகுமுறைகளைச் சிலாகிக்கவும் செய்கிறது. ஆனால் மனத்தளவில் திரைக்கதை மனிதர்கள் தம் மனத்தடையை தாண்டிவராதது போலவே இயக்குநர் அகத்தியனும் தனது மனத்தடையைத் தாண்டிவர வில்லை.

சிக்கல் வந்துவிட்டது. பிரச்சினையை எத்திசை நோக்கிக் கொண்டு செல்வது?

மத்தியதர வயசுக்கார முதலாளி விஜயனால் பாலுறவு ரீதியில் தனது மனைவியைத் திருப்திப்படுத்த முடியாததால், மனைவி இளவயதுக்காரனைத் தேடிப் போகிறாள். இராணுவத்துக்காரர் பிரகாஷ்ராஜூம் தனது இளம் மனைவிக்கு இப்படியொரு வாய்ப்பை உருவாக்கித் தருகிறார். திரைக்கதையில் மூன்று சந்தர்ப்பங்களில் மத்தியதர வயதுக்காரர்களின் பாலுறவுச் செயல்பாடு சம்பந்தமான இக்குறிப்பு வருகிறது. விஜயனோடும் இராணுவத்துக்காரர் தன் இயலாமையை வெளிப்படுத்துகிறார். தனது மனைவியிடமும் வெளிப்படுத்துகிறார். விஜயனும் வெளிப்படுத்துகிறார்.

இங்கு இயலாமை என்பது தான் என்ன? இயலாமை மனோ ரீதியானதா? உடல் ரீதியானதா? இயலாமை உடல ரீதியானது எனில் மருத்துவ ரீதியான நிருபணங்கள் ஆதாரங்கள் என்ன?

அகத்தியனிடம் இத்தகைய ஆய்வுகளுக்கான ஆதாரங்கள்

செக்ஸே வாழ்க்கையா! செக்ஸே வாழ்க்கையின் முழுமையா? செக்ஸ் வாழ்க்கையின் பகுதியா? செக்ஸே இல்லாமல் வாழ முடியாதா? எங்கேயாவது விடுகதை நாயகன் நாயகி



மாதிரி 'எக்ஸ்ரெம் பிராப்ளம்' இருக்குமே - அவர்களுக்கான தீர்வுதான் படத்தின் தீர்வு என்கிறார் அகத்தியன். (நியூபிலிமாலயா - டிசம்பர் 97: அகத்தியன் நேர்முகம்)

இதற்கான தீர்வு என்ன? இதற்கான தீர்வாக மூன்று வழிகள்தான் உண்டு.

1. **மருத்துவ ரீதியிலான, உடலியல் ரீதியிலான விஞ்ஞான அணுகல்முறை.**
2. **மனோவியல் ரீதியான மனத்தடைகளை உடைக்கும் பகுப்பாய்வு.**

(உதாரணம்: கோவூர், சேது மாதவனின் படமான புனர் ஜென்மம் மலையாளப்படம். தமிழில்: மறுபிறவி)

3. **மதரீதியான புனிதப்பிரதிமைகளில் சரணடையும் மரபுரீதியான சட்டகம்.**

அகத்தியன் தேர்ந்து கொள்வது மூன்றாவது வழியைத்தான். படத்தில வரும் மனோவியல்

20-30, 30-45, 45-60 அப்புறம் சாவு என்ற பிரிவினை. இவர்களுக்குப் பொருந்தாது. இதற்கான காரணங்களைத் தீர்வுகளை கடவுளிடம் தேட முடியாது. மதங்களும தீர்வு சொல்லாது. அன்பும் சகமனித நேசமும் நம்பிக்கையும் நிறைந்த விஞ்ஞான அணுகல் முறையும் மனோவியல் பகுப்பாய்வுமே தீர்வு சொல்லமுடியும்.

அதற்கு முதல்படியாக பாலியல் தொடர்பான அறியாமையையும் மதரீதியான நமது மனத்தடைகளையும் தாண்டி வரவேண்டும். அகத்தியனின் சிந்தனை அமைப்பில் திரைக்கதையில் அந்தத் தடமே இல்லை. முதலில் இயக்குனர் சரியான சிந்தனையைத் தெரிந்து கொள்ளவேண்டும். பிற்பாடு அவர் படைப்பு மனிதர்கள் கதையையொட்டி தமது சுதந்திரத்தைத் தேர்ந்து கொள்வார்கள். இத்தகைய விவாதத்தையேனும் தூண்டிவிட்டது எனும் அளவில் 'விடுகதை' படம் முக்கியமான தமிழ்ப் படம் தான் என்று சொல்ல முடியும்.

**யமுனா ராஜேந்திரன்**

> ஒரு வகையில் காட்சிகள் தமிழ் சமூகத்தின் போலி நிலைப்பாடுகளைக் காண்பிக்கவே செய்கிறது. பாலுறவு குறித்த மேற்கத்தியர்களின் விஞ்ஞான பூர்வமான அணுகுமுறைகளைச் சிலாகிக்கவும் செய்கிறது. ஆனால் மனத்தளவில் திரைக்கதை மனிதர்கள் தம் மனத்தடையை தாண்டிவராதது போலவே இயக்குநர் அகத்தியனும் தனது மனத்தடையைத் தாண்டிவரவில்லை.

பொதிந்திருக்கின்ற மருத்துவப் பிரச்சினைகளையோ, மனோவியல் தடைகளையோ முற்றிலும் கணக்கெடுத்துக் கொள்ளாதது மட்டுமல்ல, இந்திய சமூகத்தின் மனத்தடைகளுக்கிடையில் அவரே இடறி விழுந்திருக்கிறார் என்பதைத்தான் படத்தின் திரைக்கதை சொல்கிறது.

படத்தின் திரைக்கதை எடுத்துக்கொள்ளும் பிரச்சினைதான் என்ன?

இரு வேறு அணுகுமுறைகள் காண்பிக்கப்படுகிறது.

(i) தமிழ்ச் சமூக மனிதர்கள் எல்லோருமே 'அடுத்தவன் வாழ்வில் தலைநுழைத்து' மதிப்பீடுகளை உருவாக்குகிறவர்களாகவே இருக்கிறார்கள். அடுத்த மனிதனுக்கான தீர்வை இவர்கள் கையில் வைத்திருக்கிறார்கள்.

(ii) தம்பதிகள் மணமுடித்த புதிதில் செல்லுமிடங்கள் பெரும்

# வீடு

கதை: 2

# வீட்ட போவம்...

'வா...அம்மா...சீல.. உடு...வீட்ட போவம்'

ஆனந்தன் அந்த இடத்திற்கு வந்து சுமார் பத்து நிமிட இடைவெளிக்குள் நான்கு அல்லது ஐந்து தடவை இந்தச் சொற்களைக் கேட்க நேர்ந்திருந்தது.

இம்முறை சற்றுப் பலமான சிணுங்கலுடன் 'வா அம்மா வீட்ட போவம் சீல உடு' எனக்கேட்ட பொழுது ஆனந்தன் தன் பார்வையைத் திருப்பினான். வயது மூன்று அல்லது நான்கு இருக்கக்கூடும். ஒரு சிறுவன், நடுத்தர வயதுப் பெண் ஒருத்தியிடம் சிணுங்கிக்கொண்டிருந்தான். சிறுவனின் குரலுக்கு நேரடிப் பதிலாக எதையும் கூறாமலே 'அங்க அண்ணாச்சியவையோட போய் விளையாடுங்கோ' என்றாள்.

நீண்ட கயிறு ஒன்றை அணிந்திருந்த அப்பெண், தாலிச்சரடு நூலில் தொங்கிக்கொண்டிருக்க -வசதியாக வாழ்ந்திருக்கக்கூடியவள் என்பதைக் காட்டும் வசீகரமான முகத் தோற்றத்தில் வாட்டம் கோடிட்டு இருந்தது. ஒரு வித சோகம் அப்பியிருந்தது.

'இல்லை...நா மாட்டன்...வா அம்மா ...வீட்ட போவம்' என்றான் சிறுவன், மீண்டும்.

'இங்க பார் லைமிற் இருக்கு...பெரிய வீடு.... அன்னாச்சியவை...சில்லு பவா எல்லாம் இருக்கு' பராக்குக் காட்டினாள்.

'என்ர வீட்ட போவம்...எங்கட வீட்ட போவம்..இது வேண்டாம். எங்கட வீடு அச்சா வீடு...வாம்மா போவம்' என்ற சிறுவனின் சிணுங்கல் அழுகையாக மாறத் தொடங்கியது.

'சரி..சரி.. அழாதையுங்கோ. அப்பா வந்த பிறகு போவம்' இசைவாகினாள்.

'அப்பா எப்ப வருவார்' அடுத்த கேள்விக்கு தாவினான் சிறுவன்.

'பின்னேரம் வந்திடுவார். இப்ப..இந்தாங்க இதைச் சாப்பிடுங்க' என்றாள் அவள் ரொட்டியை கையில் வழங்கியபடி.

'எப்ப நாங்கள் வீட்ட போறது.' என்றான் சிறுவன் ரொட்டியைக் கையில் வாங்கியபடி.

'அப்பா வந்தவுடன் அவரிட்டக் கேட்பம் என்ன.'

'எப்ப போறது சொல்லு...' சிணுங்கினான் மீண்டும்.

'அழப்படாது.. எல்லே, சொல்லுறன்.'

'எப்ப...வீட்ட போறது.

'சரி, நாளைக்குப் போவம்... இப்ப அழாமல் இந்த ரொட்டியைச் சாப்பிடுங்கோ.'

'இல்லை... இண்டைக்குப் போவம்... இப்ப போவம்...வா...சீல உடு....வீட்ட போவம்.'

இந்த உரையாடலுக்கு இதுவரை பொறுமையா செவிகொடுத்த ஆனந்தன், வேப்பமர நிழலில் நின்ற அப்பெண்மணியை அணுகிப் பேச்சுக் கொடுத்தான்.

'அக்கா உங்களுக்கு எந்த ஊர்' -இது ஆனந்தன்.

'திருகோணமலையில் சாதாவீதி. ஏன் தம்பி கேட்கிறீர்' என்றாள் அவள்.

'இல்ல இவ்வளவு நேரமும் பிள்ளை சிணுங்கு பிடிக்கிறதைப் பார்த்துக்கொண்டு நின்றனான். அதுதான் கேட்டனான்.'

'ஓமோம்... இரவிரவாச் சாமத்தில் அந்தரப்பட்டு வெளிக்கிட்டு வந்திட்டம். பிள்ளைக்கு தாங்கேலாமக்கிடக்கு... எப்பவும் வா, அம்மா வீட்ட போவம் எண்டபடிதான். நித்திரையிலகூட இப்படித்தான் வாய் புலம்புகிறான்' எனக் கூறியபோது அவளுக்கு கிட்டத்தட்ட அழுகையே வந்துவிடும் போலிருந்தது. கண்கள் கலங்கின.

அவளை ஆறுதல் படுத்தவேண்டும் எனக் கருதியதாலோ...என்னவோ ஆனந்தன், தொடர்ந்தும் அவளிடம் பேசினான்.

'எப்ப அக்கா வீட்டை விட்டு வெளிக்கிட்டனியள்.'

அவளது கண்களில் நீர் முட்டித் தேங்கியது. ஆனந்தன் விறைத்து நின்றான்.

நள்ளிரவு நேரம். திருகோணமலை நகரம் அதிர்ந்தது. எங்கும் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் காதைக் கிழித்தது. 'சொய்' என்ற இரைச்சல். உயிரைக் குடிக்கும் ஆவேசத்துடன் சன்னங்கள் பறப்பதை உணர்த்தியது.

பட்...பட்...படப்...படர்...படப்பட- என்ற ஒலியலைகள் அனைவரது உறக்கத்தையும் கலைத்தது.

ஆரவாரமும், பேச்சுக் குரல்களும், சனங்கள் திக்குக்கு ஒருவராய் ஓடுவதை உணர்த்தியது. திடுக்கிட்டெழுந்த கோபாலன் மின் விளக்கை ஏற்றினான்.

சரசாவும், கண்களை விழித்து 'என்னப்பா... என்ன ஒரே அல்லோல கல்லோலமாய்க் கிடக்கு.' எனக் கேட்டாள்.

'என்ன நடக்குது...எந்தப் பக்கம் போறாய்.' என்றொரு குரல் தெருவில் பலமாகக் கேட்டது.

'சண்டை தொடங்கிவிட்டுது... ஆமியும்...நேவியும் கட்டுக்கொண்டு வாறானுவன்.' என்று ஆரோ ஓட்டமும் நடையுமாக செல்லும் வேகத்திலேயே பதில் சொல்லிக்கொண்டு போனார்.

'இங்க பாரும்', பக்கத்து வீட்டு சாம்பசிவத்தின் குரல் தெளிவாகக் கேட்டது. சட்டென கதவைத் திறந்து தெருவை எட்டிப் பார்த்த கோபாலன் ஒரு கணம் திடுக்கிட்டுப் போனான்.

அயலவர்கள், அடுத்த தெருவில் இருப்பவர்கள், மற்றும் அநேகர் கைகளில் எதை, எதையோ காவியபடி ஓடிக்கொண்டிருந்தனர். அசாதிலியில் சனக்கூட்டம் நகர்ந்துகொண்டிருந்தது. வாசற்புறத்தடியில் இருந்தபடியே 'சரசா! கெதியா வெளிக்கிடும். சனமெல்லாம் ஓடுது... நாங்களும் போவம்.' எனக் குரல் கொடுத்தான். கோபாலன்.



'தம்பி! நீங்கள் இன்னும் வெளிக்கிடேல்லையே', கோபாலனின் குரல் கேட்ட சாம்பசிவம் கேள்வி எழுப்பினார்.

'இல்லையண்ணா.. இப்பதான் கண் முழிச்சது... எந்தப் பக்கம் போனால் நல்லது... சண்டை எந்தப் பக்கத்தில் நடக்குது?' கோபாலன் கேட்டான்.

'தம்பி! எனக்கு ஒண்டும் சரியா சொல்லத் தெரியேல்ல... ஆனா சனமெல்லாம் உவர்மலையைக் கடந்து... அன்புவழிபுரப் பக்கமாய்த்தான் ஓடுது. ஓடுற சனத்தோட ஓடுவம். தப்பியோட்டிவிருந்தால் பிறகு ஏதோ எல்லாத்தையும் பாப்பம்.' சாம்பசிவம் பரபரத்தார்.

கண்களைக் கசக்கி நித்திரைச் சோம்பலை முறித்துக்கொண்டு சாம்பசிவத்தின் மகன் - ஏழு அல்லது எட்டு வயது இருக்கக்கூடும் - வசந்தன் தடுங்கியபடி அவ்விடம் வந்து சேரவும், சாம்பசிவத்தின் மனைவி இரண்டு பெரிய சூட்கேசுகள் -ஒரு பெரிய ட்ரவலிங் பாக் மற்றுமொருபாக் என்பவற்றை வெளியே தள்ளி கதவுகளைப் பூட்டும் சத்தம் கேட்கவும் சரியாக இருந்தது.

'தம்பி, இனி பிலக்கேடு ஏலாது... நீங்களும் கறுக்கா வந்து சேருங்கோ' என்று கூறிவிட்டு சாம்பசிவம் வேகமாக நடந்தார்.

திரும்பி வீட்டைப் பார்த்த கோபாலன், 'அவ்வளவு லைவிற்றுகள் எரியுது' என்றான்.

'இனி, ஆர் கதவைத் திறந்து லைற் நூர்க்கிறதில மினக்கெடுகிறது. அது கிடக்கட்டும். நீர் கெதியா நடவும்' சாம்பசிவம் மனைவிக்கு கூறுவது கோபாலனுக்கு தெளிவாகக் கேட்டது. அதனால் அவனுக்குள் மேலதிகமாக ஒருவித பதற்றம் மேலெழுந்தது.

'இஞ்ச சரசா,.... என்ன செய்யிறீர்... இன்னும் வெளிக்கிடேல்லையே. சனமெல்லாம் போட்டுது.' எனக் கூறிக்கொண்டு வீட்டுக்குள் புகுந்தான் கோபாலன்.

'நான் ரெடியப்பா.... பிள்ளையையும் வெளிக்கிடுத்திப் போட்டன். ஆனா வீட்டுச் சாமான்களைத்தான் எதை எடுக்கிறது.. எதை விடுகிறது... எண்டு தெரியேல்லை.' சரசா பதிலளித்தாள்.

'இப்ப உதுகளை யோசிக்கிறதில பிரயோசனமில்லை சரசா! முதலில் உயிரைக் காப்பாற்ற வேணும். ஆனபடியா கையில் பொறுக்கக்கூடிய உடுப்புக்களை மட்டும் எடுத்துக்கொண்டு போவம் பிறகு மிச்சத்தைப் பாப்பம்' -கோபாலன் பரபரத்தான்.

'சண்டை தொடங்கினது உங்களுக்கு தெரியாதே அக்கா'ஏதோ கேட்க வேண்டும் என்பதற்காக ஆனந்தன் கேட்டான்.

'இல்லைத் தம்பி, இரண்டு மூன்று நாளுக்கு முதலே மட்டக்களப்பு பக்கத்தில ஏதோ பிரச்சினை எண்டெல்லாம் கதையள் அடிபட்டதுதான் ஆனால் திடீரென இப்படிப் பெரிய சண்டையா வருமெண்டு ஆருக்குத்தெரியும்' சரசா கூறினாள்.

'அங்கிருந்து எப்படி இங்க யாழ்ப்பாணம் வரைக்கும் வந்து சேர்ந்தியள்?'

'ஓட்டமும் நடையுமாய் நடந்து நிலாவெளிக்கு வந்து சேரவே விடிஞ்சு போச்சு. நிலாவெளியில் பள்ளிக்கூடம், கோயில், மற்றும், மரநிழல்கள் வெட்ட வெளிகள் எல்லாம் மறைவிலிருந்து ஓடிவந்த சனங்களால நிறைஞ்சு போய்க்கிடந்தது.

இங்கன இருக்கலாம், கொஞ்ச நாளையில் எல்லாம் சரிவந்திடும்தானே. பிறகு திரும்பிப் போகலாம். அப்பிடி எண்டுதான் அப்பவும் சனங்கள் நினைச்சதுகள்.

'மத்தியானச் சாப்பாட்டுக்காவது ஏதாவது அடுக்குப் பாப்பம்' என்டு சொல்லிப்போட்டு போன இவர், கொஞ்ச நேரத்தில 'ஆறாம் கட்டைச் சென்றியையும் ஆமி உடைக்கப்போட்டுதாம்'என்று அரக்கப்பரக்க வந்து சேர்ந்தார்

'ஆறாம் கட்டைச் சென்றியையும் ஆமி உடைக்கப் போட்டுதாம்' என்ற செய்தி பரவத் தொடங்கியதும், சனமெல்லாம் பெட்டி படுக்கையோட மற்றும் மூட்டை முடிச்சுகளோட மீண்டும் வேகமாக நகரத் தொடங்கிவிட்டுதுகள்,

'எங்கையப்பா போறது' இது சரசாவின் கேள்வி.

'எங்கையெண்டு இல்ல போற சனத்தோட போவம் பிறகு பாப்பம்' கோபாலனின் பதில்.

இதுக்கிடையில்...டாம் டோம் . என்று பெரிய சத்தங்கள் மிகச் சமீபமாக ஷெல்கள் விழுந்து வெடிப்பதை உணர்த்தியது.

பள்ளிக்கூடத் தரையில நித்திரையா கிடந்த பிள்ளை சத்தங்களோட திடுக்கிட்டெழும்ப -தோளில் தூக்கிப் போட்டுக்கொண்டு நடக்கத்தொடங்கினம்.

அம்மா எங்க போறம் என்றான் முதல் கேள்வியாக. இதுக்கு என்ன பதில் செல்லுறது என்டு யோசிக்க முன்னமே, அவன் 'அம்மா! வீட்ட போவம்'எனச் சிணுங்கத் தொடங்கிவிட்டான்.

'ஓமோம், வீட்டதான் போறம் நீங்கள் நித்தாக்கொள்ளுங்கோ' அவள் செல்லமாக் கெஞ்சினாள். ஆனால் அவனோ தொடர்ந்து சிணுங்கினான். கோபாலன், மகனைத் தனது தோளுக்கு மாற்றிக் கொண்டான். அவளது வேகமான நடைக்கு ஈடுகொடுக்க முடியாமல் அவள் தடுமாறினாள். நிலாவெளியிலிருந்து புறப்பட்டு கும்புறுப்பிட்டிப் பாலத்தை ஆற்றுக்கு குறுக்காக கடந்து - குச்சவெளிக்காட்டுக்குள்ளால போய் கல்லம்பத்தையைத் தாண்டி -திரியாய்க்கு வந்து சேரவே ஒருநாள் பொழுது சரி. திரியாயில ஒரு இரவு தங்கினம். அந்தச் சனம்தான் இரவுச் சாப்பாடு தந்ததுகள். எல்லாமாய் இருநூறு குடும்பத்துக்கும் மேல வரும் - திரியாயில வந்து தங்கின சனம் மட்டும். மலையிலிருந்து வந்த அவ்வளவு சனமும், திரியாயில தங்குகிறது எண்டால் ஏலாதகாரியம். அதால அடுத்தநாள் பொழுது கிளம்பினதோடவே திரும்பவும் வெளிக்கிட்டம்.

எங்களோட வந்த சனத்தில கொஞ்சப்பேர் - எப்பன் வசதியான ஆக்கள் - புடவைகட்டுக்குப் போய் அங்கிருந்து கடலால முல்லைத்தீவுக்கு போகப் போறதெண்டு போனவையள். நாங்கள் திரும்பவும் கால்நடையாய் வெளிக்கிட்டு ஜான்ஷயாவைக் கடக்கிறதுக்கிடையில் 'சீ.... என்டு போச்சு இதல்லடா சீரழிஞ்ச சீவியம்' 'இப்படியும் சீவிக்க வேணுமோ' எண்டெல்லாம் கூட அந்த நேரங்களில் யோசிச்சதுண்டு. எண்டாலும் அப்பப்ப பிள்ளையைத் திருப்பிப் பார்த்தவுடன் 'இந்தச் சீவனைத் தவிக்கவிடப்படாது. இதுக்காக எண்டாலும் எவ்வளவு கஷ்டப்பட்டு எண்டாலும் சீவனைக் காப்பாத்த வேணும்' எண்ட நினைவு வரும். -

அதுக்கிடையில் 'அங்க ஆனை கத்துற சத்தம் மாதிரிக் கிடக்கு' 'பண்டி மூசுறது போல கிடக்குது' 'பாம்புகள் இந்தச் சருகுகளுக்குள்ள கிடக்கும் கவனம்' என்டெல்லாம் கூட வந்த ஆக்கள் சொல்லச் சொல்ல நெஞ்சுக் கூட்டுக்குள் பயம் பரவும். இதைவிட கல்லிறவு முகாமில இருக்கிற ஆமி காட்டுக்க எங்கயும் நிற்கிறாங்களோ தெரியாது எண்ட பீதிவேற. கொக்குளாய் பக்கத்தில சிங்களச் சனங்கள் இருக்கினம்... அவையும் ஏதும் செய்வினமோ எண்ட பயம் வேற... இப்படியே பயந்து...பயந்து.. செம்மலைக்கு வந்து சேரும் வரையும் உயிர் எங்கடைகையுக்கை இல்லையெண்டுதான் சொல்ல வேணும். அந்த நாலு நாளும் சாப்பாடு தண்ணிகூட இல்லாமல் பட்டபாடு... என்ரையப்பா...' என்று கூறி பெருமூச்செறிந்தாள் சரசா.

'செம்மலையில் இருந்து இங்கால... என்ன மாதிரியக்கா வந்தனியள்'

'டிரக்டரில புதுக்குடியிருப்பு மட்டும் வந்து இஞ்சால பஸ்சில வந்தனாங்கள்.'

இவ்வளவு நேரமும இந்தக் கதையளுக்கு காது குடுத்ததாலோ, என்னவோ அமைதியாக இருந்த சிறுவன் மீண்டும் 'அம்மா... வாம்மா வீட்ட போவம்' எனச் சிணுங்கத் தொடங்கினான்.

'தம்பி...இங்க வாங்கோ...நான் பிள்ளைய வீட்ட கூட்டிப் போறன்.' என்று கூறி சிறுவனிடம் நெருங்கிச் சென்றான் ஆனந்தன். ஒருவிதமான விறைத்த பார்வையுடன் நின்றான் அவன்.

'தம்பிக்கு என்ன பேர்'

'பிரதீபன்' என்றது மழலைக் குரல்.

'உங்கட வீடு எங்க இருக்கு'

'அங்க மலையில இருக்கு'

'உங்கட அப்பா எங்கே?' என்ற ஆனந்தனின் கேள்விக்கு சிறுவன் பதில் அளிக்கும் முன்பே, 'இதில விதானையாரிட்ட நிவாரணத்திற்கு பதியப் போனவர்' என்றாள் அவள்.

'நானும் இந்த முகாமிலதான் தொண்டராக வேலை செய்யுறன். ஏதும் தேவையெண்டா கேளுங்கோ' எனக் கூறிய ஆனந்தன், பிரதீபனைப் பார்த்து 'அப்பாட்டை போவமோ' எனக் கேட்டான்.

'வீட்ட போவம்' என்றான் அவன் பதிலாக.

'சரி வீட்ட போவம்... எங்கட வீட்ட போய் மாமா சேட், காற்சட்டை போட்டு வெளிக்கிட்டுக்கொண்டுவாறன். தம்பியிட வீட்ட போவம் என்ன?'

'இல்ல எங்கடை வீட்டை போவம்'

'சரி! தம்பியிட வீட்ட போவம்..அங்க என்ன இருக்கு'

'எங்கட வீட்ட போவம்...அச்சா வீடு...எங்கட வீடு'

அதையே அவன் திரும்பவும் சொன்னான்.

மீண்டும், ஒரு நாள் அவன், தன் வீட்டுக்கு செல்லும்நாள் வரும் என்று மட்டும் ஆனந்தன் உறுதியாக நம்பிக்கை கொண்டிருக்கிறான்.

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

Siege Social
19 à 26, Rue Perdonnet,
75010 Paris.
RCS PARIS
B 399 673 110 (95B01491)
Directeur de la publication:
P. Velupillai
Redacteur:
P. Sivaguru
Impression:
IMPRIMERIE MEAULLE
நிர்வாகி:
ப. வேலுப்பிள்ளை
நிர்வாக ஆசிரியர்:
அமரர் க. கஜேந்திரன்
ஆசிரியர்:
பி.சிவகுரு

தபால் - தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris, France
E.Mail-eelamurasu@aol.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:
பாரிஸ்:
TeL: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64
ஜேர்மனி:
போ. சிறீஸ்கந்தராஜா
Tel: 03 04 35 29 23
அருந்தவராஜா:
Tel / Fax: 02 151 39 73 83
டென்மார்க்:
G.R. திருச்செல்வம்
Stadion Alee - 30, 1th
7430 Ikast, Denmark.
Tel + Fax: 75310546
சுவிஸ்: மக்கள் கடை
Verlag: People Shop
Hunrich Str-75, 8005 Zurich.
Druckerei: Frankreich.
Tel: 01-271 7374
லண்டன்:
ஜெயந்தன்: - Tel: 0956908145
குணம்: - Tel: 0956277718
இத்தாலி:
மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056
நோர்வே:
JAFFNA FOOD -
Tel: 22425527
நெதர்லாந்து:
தவயோகம்
Tel: 076 5425804

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## கூட்டணிக்குள்...

ஈடுபடுவதன் மூலம் தமிழ் மக்களின் அதிருப்தியையும், விடுதலைப் புலிகளின் பகைமையுமே சம்பாதிக்க முடியுமென விசனம் தெரிவித்துள்ளனர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## தமிழ் அரச...

பொறுப்பாளர் திருநாவுகரசின் பகிரங்க வேண்டுகோளையடுத்து தமிழ் அரச அதிகாரிகள் சிங்கள அரசின் தேர்தல் நாடகத்தில் பங்கேற்க மறுத்துவிட்டனர் என அங்கிருந்து வரும் செய்திகள் விபரம் தருகின்றன.

இதேவேளை சிறிலங்கா அரசின் தேர்தல் பணிகளில் பங்கேற்க யாழ். கனரகவாகன உரிமையாளர்கள் சங்கம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## யாழ்.குடா...

னுவ ஆதரவுக் குழுவினர் தமக்குள் இரண்டாகப் பிளவுபட்டு மனுக்களை தாக்கல் செய்துள்ளனர். டக்ளஸ் தேவானந்தாவிற்கு எதிரான குழுவினர், புளொட் மாணிக்கதாசன் குழுவினரின் பாதுகாவலில் தமது மனுக்களை தாக்கல் செய்ததுடன், தமது வேட்பாளர்களின் பெயர் விபரங்களை பத்திரிகைகளுக்குத் தெரிவிக்க மறுத்துவிட்டனர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## ஆதரவாளர்கள்...

அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள அவரது இல்லத்தில் வைத்து அவருடன் தொடர்பு கொண்டு கேட்ட போது, நாங்கள் இந்தத் தேர்தலை பின்போட வேண்டும் என்றுதான் அரசாங்கத்தை வற்புறுத்திக் கேட்டோம். இன்றைய சூழ்நிலையில் சுமுகமான முறையில் நேர்மையான முறையில் தேர்தல் நடக்காது என்று அரசாங்கத்துக்குத் தெரிவித்தோம். அரசாங்கம் அதற்குச் செவிசாய்க்கவில்லை. மற்றைய குழுக்கள் போட்டியிடாவிட்டால் நாங்களும் போட்டியிடுவதில்லை என்றுதான் நினைத்திருந்தோம். ஆனால் மற்றக் குழுக்கள் எல்லாம் போட்டியிட முன்வந்து விட்டன. இந்த நிலையில் நாங்கள் போட்டியிடாவிட்டால் எங்கள் ஆதரவாளர்கள் ஏமாற்றமடைந்து விடுவார்கள் என்பதற்காகவே போட்டியிடுகின்றோம் என்று அவர் ஈழமுரசுக்குத் தெரிவித்தார்.

*(விபரமான பேட்டி உள்ளே)*

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## சந்திரிகாவிடம்...

அறிவித்துள்ளது. தமது போட்டிக் குழுவான டகளஸ் குழுவின் நடவடிக்கைகள் குறித்து அச்சம் தெரிவித்த இவ் ரமேஸ்வரன், ராமமூர்த்தி குழுவினர் சிறீலங்கா தேர்தல் ஆணையாளர் ஒரு நேர்மையான தேர்தலை நடாத்த வேண்டும என வேண்டுகோள் விடுத்துள்ளனர். இம் மாநாட்டில் மூன்று பத்திரிகையாளர்கள் கலந்துகொண்டனர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## தமிழர் உரிமை...

குறிப்பிட்டுள்ளது.

நடைபெறும் போரினால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்புகள் பற்றி நான் அறிவேன். தமிழ் சமூகத்தின் உரிமைக்கு எனது ஆதரவு என்றுமேயுண்டு. கடந்த 40 வருடங்களாக தமிழர்கள் மீது ஒடுக்குமுறை பிரயோகிக்கப்பட்டு வருவதையும் நான் அறிவேன்.

தென்னாபிரிக்க அரசு ஏனைய நாடுகளில் ஏற்பட்டுள்ள சில பிரச்சினைகளுக்கு மத்தியஸ்தும் செய்ததைப்போல, தமிழர்களுக்கும் ஒரு சமாதானம் கிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளுமென நான் நம்புகிறேன் எனவும் அவரது அறிக்கையில தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேராயர் டெஸ்மன் ருடுவை வணபிதா கலாநிதி. எஸ்.கே. இமானுவேல் அடிகளார் அண்மையில் சந்தித்து தமிழ் மக்களின் போராட்டத்தின் நியாயத்தினையும், சிறிலங்கா அரசின் இராணுவ நடவடிக்கைகளின் கொடூரத்தையும் எடுத்துக் கூறியமை குறிப்பிடத்தக்கது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## சிறீலங்கா...

சுற்றிவளைப்பு தேடுதல் மற்றும் அச்சுறுத்தல் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். யாழ். நகர்ப் பகுதிகளிலும், இராணுவ முகாங்களை சூழ உள்ள பகுதிகளிலும் இந் நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன.

தேர்தல் இடம்பெற உள்ள யாழ்குடாப் பகுதிக்கு இரண்டாயிரம் தேர்தல் அதிகாரிகளும், ஐந்நூறு கனரக வாகனங்களும் தேவைப்படுகின்றன. ஆயினும் தமிழ் அரச அதிகாரிகளினதும், தமிழ் வாகன உரிமையாளர்களினதும் பகிஷ்கரிப்பு சிறீலங்கா அரசிற்கு பாரிய நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளது. மறுபுறம் எண்பது வீதமான யாழ். குடா வாக்குச்சாவடிகள் இராணுவத்தின் நகர்ப்புற அரண்களிற்கு அப்பால் அமைந்துள்ளனதானது இராணுவத்திற்கு பாரிய சிக்கலைத் தோற்றுவித்துள்ளது. தமது துணைப் படைகளான தமிழ் ஆயுதக் குழுக்களிடையே ஏற்பட்டுள்ள பதவிச் சண்டையும், முரண்பாடுகளும் சிறீலங்கா அரசினை மேலும் பலவீனப்படுத்தியுள்ளது.

இதேவேளை பருத்தித்துறை நகரசபைப் பகுதிகள், வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபைப் பகுதிகள் என்பன விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் போன்று செயற்படுவதால் அப் பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகள் குறைந்து காணப்படுகின்றன. வதிரி, அல்வாய் ஆகிய பகுதிகளில் விடுதலைப் புலிகளின் சிறப்புப் படையணிகள் தினசரி இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதேவேளை மிருசுவில், வரணி, கச்சாய், உசன் ஆகிய தென்மராட்சிப் பகுதிகளில் விடுதலைப் புலிகள் பல தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். வலிகாமம் மேற்குப் பகுதிகளிலும், வடமேற்குப் பகுதிகளிலும் விடுதலைப் புலிகளின் இராணுவ அணிகள் நகர்வுகளை மேற்கொள்கின்றன. இதேபோன்று நல்லூரர் பிரதேசசபைப் பகுதிகள் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைத் தளங்களாக உள்ளன.

இவ்வாறான சூழ்நிலையில் சிறிலங்கா அரசினால் தாம் எதிர்பார்த்த தேர்தல் நாடகத்தை சுமுகமாக நடாத்த முடியாது என கொழும்பு ஆய்வாளர்கள் கருதுகின்றனர்

சிறீலங்கா அரசின் தேர்தல் நடவடிக்கைகள் பற்றி தமிழீழ விடுதலைப் புலிகள் எதுவித உத்தியோகபூர்வ அறிவிப்புக்களையும் மக்களுக்கு விடுவிக்கவில்லை ஆயினும், விடுதலைப் புலிகளின் யாழ். அரசியல் பீடம் சந்திரிகா அரசின் சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதற்கான இத் தேர்தல் பற்றிய மக்கள் விழிப்புணர்வை குடாநாட்டின் மூலைமுடுக்கெங்கும் ஏற்படுத்திவருகின்றனர்.

எனினும் விடுதலைப் புலிகளின் அடுத்தகட்ட பதிலடி நடவடிக்கை என்ன என்பதை அனைத்துத் தரப்பினரும் எதிர்பார்த்துள்ளனர்.


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்கள்

**திரு. சரவணமுத்து பரராஜசிங்கம்**

(இளைப்பாறிய தொலைத் தொடர்பாளர்)

அன்னையின் மடியில்: 04.09.1941 - இறைவனடியில்: 25.12.1995

**திருமதி சிவஇன்பநாயகி பரராஜசிங்கம்**

அன்னையின் மடியில்: 04.12.1941 - இறைவனடியில்: 04.11.1995

அன்பின் உருவாய் பண்பின் உறைவிடமாய் பாசமுள்ள பெற்றோராய், கடமை மிகு தாய் தந்தையாய் எமை வாழ வைத்த தெய்வங்களே, நீங்கள் விண்ணுலகம் தனில் ஒருவர் பின் ஒருவராய் விரைந்ததேனோ!

ஆண்டு இரண்டு ஓடி மறைந்திடினும் அப்பா அம்மா உங்கள் அன்பும் பண்பும் சிரிப்பும் என்றென்றும் மனதைவிட்டு நீங்காது.

*இதயக் கூடுகளின் உள்ளே மணம் செய்யப்பட்ட உங்கள் நினைவுகளை மறைத்தல் எப்படி சாத்தியம் முடியும் சொல்லுங்கள்...!*

*பிள்ளைகள்: ரதி, கண்ணன், தீபன்*

- பபரந்தாமன், W.C. Vegen -87, 9014 TROMSO, Norway.
Phone : 77 67 67 42/ 91E 87 519

## வாடகைக்கு

M°: Porte de St.Ouen அல்லது Garibaldi இல்,
சமயலறை, W.C. ஆகியவற்றுடன் கூடிய நல்ல நிலையில்
18M² கொண்ட ஸ்ருடியோ வாடகைக்கு உண்டு.
**வாடகை 2000Frs மட்டுமே.**
தொடர்புகட்கு: மபன் - **01 49 45 04 73**
(பிற்பகல் 3.00 மணிக்கு முன் அல்லது 'றெப்போந்தரில்' விபரத்தை தெரிவிக்கலாம்)

லாச் சப்பலில் குறைந்த செலவில் நிறைந்த பிரயாணச் சேவை

**ERRANCES TRAVELS**

Tel: 01 42 09 70 00
Fax: 01 42 09 53 39 - Li: 075 95 01 37
55, Rue Louis Blanc, 75010 Paris.
M°: La Chapelle *ou* Louis Blanc

*à partir de*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Bombay | - | 3,900Frs | Londres | - | 790Frs |
| Delhi | - | 3,900Frs | New york | - | 2,600Frs |
| Bangkok | - | 3,400Frs | Montreal | - | 2,800Frs |
| Colombo | - | 3,950Frs | Oslo | - | 2,010Frs |
| Singapour | - | 3,900Frs | Toronto | - | 2,800Frs |
| Madras | - | 4,300Frs | Nepal | - | 4,820Frs |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது




## தேடியவை

பங்காரப்பா... பங்காரப்பா... வந்து தேர்தலிலே நின்றாரப்பா!... சொன்னாரப்பா.... சொன்னாரப்பா!!

பல...வாக்குறுதிகளை சொன்னாரப்பா!!

திரை இசை பாடலொன்றினை தனது எண்ணம் போல மாற்றிப்பாடி... ஆடிக் கொண்டு வந்த திருவைகோ எவ்வளவு ஒருவிதமாகப் பார்த்தவாறே இந்திய... வாழ்ப்பான தேர்தலை முன்னிட்டு இந்தப்பாடலை[!?] எடுத்து விட்டே ....னை...யா! என்று சமாளித்துக் கொண்டார். அவர் சமாளித்துக்கொண்டாலும் நான் உங்களை சமாளிக்கலாமோ?

அசோகச் சக்கர வீட்டுக்காரர்கள் மீண்டுமொரு பொதுத்தேர்தலை சந்திக்கப் போகிறார்களல்லவா? வழமை போலவே 'அ' னா வாதிகளின் வாய் சவுடால்களும் அ'னா' அரங்கிலே எகிறிக் குதித்தவண்ணமுள்ளன.

காந்திக் குல்லாய்க்காரர்களின் கைங்கரிய உபயத்திலே ஐக்கிய முன்னணியின் ஆட்சி மண்டையைப் போட்டதாலேயே இந்தத் தேர்தல் தி..டீ..ரென வந்த... ஒரு தேர்தலில் போட்டியிட வழிவருமென கைத்தடி வத்தையரிடம் இரங்கற் பதிகம் பாடி வருகின்றனர்.

இதனால் ஆத்திரமடைந்த [!?] தெமிழ் குழுவினர் வன்னி நிலைமையைப்பற்றி ஆராயவென வைத்தடி வத்தையரால் கூட்டப்பட்ட கூட்டமொன்றில் ஒரு கட்டத்தில் கூட்டணி 'சிவமான சிதம்பரத்திற்கு' நல்ல நேரடி மங்களம் குடுத்ததுடன், வாயை பொத்திக்கொண்டு இரும், என எச்சரிக்கையும் விடுத்தனராம்.

வாங்கிக் கட்டிய சிதம்பரமனைவரோ அப்படி நான் என்ன பிழையாக சொல்லிவிட்டேன்? வன்னியில் உள்ள மக்களுக்கு நிவாரண உதவிகளுடன் கொஞ்ச கருத்தடை சாதனங்களையும் கூடவே அனுப்பி வையுங்கள் மக்களுக்கு அவை பெரிதும் உபயோகமாயிருக்கும் என்று தானே 'வத்தையரிடம்' கேட்டேன்..அது தவறா? என ஏனைய கூட்டணி தோழர்களிடம் புலம்பித்திரிகின்றாராம். கைத்தடி வத்தையரின் பரிவாரங்கள் தமிழரை அழிப்பது காணாதென்று இந்தத் தெமிழர்களும் தமிழினத்தின் பெருக்கத்திற்குத் தடை விதிக்க சாதனங்களை அனுப்பும்படி கேட்டுத் திரியும் கொடுமையைப் பாருங்கள் கண்மணிகளே!

[தேர்தல் புதினங்களை எழுதுகிறேன் என்று கூறிக் கொண்டு அரசியல்வாதிகளின் அடாவடி அறுவையைப்போல ஒரு விசயத்தை தந்துவிட்டீரே நீராவது இந்தப் பிறப்பில் திருந்துவதாவது]

* * *

சிறீலங்காவிற்கான நோர்வே நாட்டின் தூதர் அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து அங்குள்ள மக்களின் இன்னல்களைக் கண்டறிந்துவிட்டு கொழும்பு திரும்பியிருந்தாரல்லவா?

அவர் தனது யாழ் வி'ஜ'யத்தின்போது, குருநகரிலுள்ள சீ-நோர் மீன்பிடி நிறுவனத்தைப் பற்றி கொஞ்சம் கூடுதல் கரிசனை எடுத்துள்ளமை தொடர்பாக மோனையார் புதினம் தேடிய போது சிக்கியவை இவை, சீ நோர் நிறுவனத்தின் கட்டடத் தொகுதிகளில் தற்போது சிறீலங்கா இராணுவத்தினர் முகாமிட்டுள்ளமை குறித்து தூதருக்கு பெரிய துக்கமாம். இலங்கையின் மீன் பிடித்துறை சார்ந்த நடவடிக்கைகளுக்கு உதவுமுகமாகத் தான் தனது நாடு பெருமளவு நிதி உதவி செய்து சீ-நோர் என்றொரு நிறுவனத்தினை உருவாக்கியது. ஆனால் அந்த நோக்கம் நிறைவேறாதது மட்டுமல்ல இந் நிறுவனங்கள் [காரைநகர்,குருநகர்] இராணுவ நோக்கங்களுக்காக வேறு பயன் படுத்தப்படுவது நியாயமே இல்லை! எனவும் தன்னைச் சந்திக்க வந்தவர்களிடம் தூதர் வேதனையாகக் கூறியுள்ளாராம்.

சீ நோர் நிறுவனம் சிறீலங்கா அரசுகளினால் பிழையாக வழிநடாத்தப்படுகின்றதென்பதையும் தூதர் அவ்வேளையில் பூடகமாகவும் தெரிவித்துள்ளாராம்.

ஐக்கியத்திற்கும் தேசியத்திற்குமான பச்சைக் கட்சி ஆட்சிக் காலத்திலிருந்தே சீ-நோர் நிறுவனம் சுரண்டப்பட்டு பலரது சட்டைப் பைகள் நிரப்பப்பட்டு வருகிறது.

ஐ.தே.க. இன் பொற்கால ஆட்சியின்போது சீ-நோர் நிறுவனத்திற்கு சொந்தமாக ஐந்து ஆசனங்களைக் கொண்ட சிறிய விமானமொன்று இருந்தது. அந்த விமானத்தின் மீது சீ-நோர் நிறுவனத்தில் பணிப்பாளர்களாக இருந்த நான்கு கழுகுகளின் கண்கள் விழுந்துவிட்டமையால் [மூன்று 'சி'வப்பு கழுகுகளுடன் ஒரு வெள்ளை கழுகும்] அந்த விமானம் இரகசியமாக விற்பனை செய்யப்பட்டுவிட்டது. பணத்தையும் சுருட்டிக் கொண்டு பணிப்பாளர்கள் கனடாவிற்கு தப்பியும் சென்றுவிட்டனர். இது மட்டுமல்ல, சீ-நோர் நிறுவனத்திற்கு கிடைத்த கோடிக்கணக்கான ரூபாய் நிதியுதவிகளும் மாயமாக மறைந்துவிட்டன.

இந்த நிதியுதவிகளுக்கு என்ன நடந்ததென்பது பற்றி நோர்வே நாட்டு அதிகாரிகள் மண்டையை குழப்பிக்கொண்டதுதான் கண்ட மிச்சம்.

சிறீலங்காவின் மக்கள் வங்கிப் பெரிசுகளும் தம்பங்கிற்கு, நிதியுதவிகள் இப்படி தாராளமாக கிடைத்தபோது எதற்காக எம்மிடமிருந்து சீ-நோர் நிறுவனம் ஒரு கோடி ரூபாவை கடனாகப் பெற்றது. அது இப்போது வட்டி குட்டி போட்டு இரண்டு கோடியாகிவிட்டதே! அதை யாரிடமிருந்து அறவிடுவது!! என எண்ணி தம் மண்டைகளை குழப்பிக்கொள்கிறார்கள்.

இந்த ஒழிப்பு... மறைப்புகள் யாவும் தற்போது நோர்வே நாட்டுக்கு 'பளிச்' ஆகிவிட்டதால் இனிமேல் 'சி'றீ லங்காவிற்கு நிதியுதவி வழங்கும் விசயத்தில் வெகு அவதானமாக நடக்கும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது. இதற்கிடையில் யாழ்ப்பாணத்தில் மீன்பிடித்துறையினை வளர்ச்சியடையச் செய்ய ஏதாவது தாருங்கள் என 'சி' னா தரப்பு நோர்வேயிடம் கேட்கிறதாம். இன்னும் யார் யாருக்கு 'சுருட்டல் நல்வாய்ப்பு' இருக்கிறதோ யாரறிவார்..

## குல்லாய்களும் சோனியாவும் தூதரின் துக்கம்

[இந்தப் பழைய கதையெல்லாம் எங்களுக்குத் தெரியுமைய...யா! புதிதாக ஏதாவது இருந்தால் செ[ா]ல்லும் இல்லையேல் எம்மை விட்டுவிடுமையா]

சரி..சரி..புதிதாக... ஏதாவது... ஆங்... ஆங்... கடந்த வாரத்திற்கு முந்திய வாரம் போர்பேஸ் பீரங்கி ஊழல் புகழ் 'ஜீவ்' இன் விதவை மனைவியின் பிறந்த நாள் கொண்டாட்டம் நடைபெற்றபோது, சோனியா ஜீயாவது காங்கிரசுக் கட்..சீ..யின் தலைமையினை ஏற்று எம்மை ஆண்டு அருள்பாலிக்க வேண்டுமென 'குல்லாய்' பெரிசுகள் பலர் துதிபாடினர். ஆனாலும்... அந்தோ... அம்மணியார் மவுனம் கலையவில்லையாம்.

'ரோசாப்பூ மாமாவின்' குடும்பத்திலேயிருந்து யாராவது வந்தால்தான் மக்களிடமிருந்து வாக்குகளை இம்முறை கறந்து கொள்ளலாம் என்பதில் குல்லாய்க்காரர்கள் பெரும் நம்பி[க்]கை கொண்டுள்ளார்கள். ஆகையால் தான் 'யாதுமாகி நின்றாயே சோனியாவே' என்ற பல்லவியை திரும்பத் திரும்ப பாடுகின்றார்கள்.

ஆனால் அம்மணியாரோ அல்லது அவரது இரண்டு வாரிசுகளோ இதுவரை ஏதும் திருவாய் மலரவில்லை. குல்லாய்க்கார பெரிசுகளுக்கு பெரும் சப்..சப் என்றாலும் அதை வெளியே காட்டிக்கொள்ளாமல், தொடர்ந்து துதி பாடிக்கொண்டேயிருக்கிறார்கள். அன்னார்தான் இப்படி சாதகமான 'அறிகுறி' ஏதும் கொடுக்காத போதும்.. வாரிசுப் பிள்ளைகள் தானும் கட்...சீக்குள் வரக்கூடிய கூடிய அறிகுறிகளைக் காட்டவில்லையாம்.

புத்திரனார் ராகுல் தற்போது 'இங்கி'[ருக்கும்] 'லாந்து' சீமை நாட்டிலிருந்தாலும் அரசியலில் பெரிதான நாட்டம் எதுவுமில்லை. பிரியங்கமான மகளோ இந்தியாவும் வேண்டாம்... அரசியலும் வேண்டாம். கண் - அவருடன், இத்தாலியில் குடியேறிவிடலாமா என சிந்தித்துக்கொண்டிருக்கின்றார். கறுப்புப் பூனைகளின் [பாது] காப்பில் தற்போது இருக்கும் பிரியங்கமான வருக்கு குடியிருக்க வீடொன்று அரச செலவில் வழங்கப்பட்ட 'விசயத்தில்' எதிர்க்கட்சிகள் ஒரு 'பிடி பிடித்ததால்' தான் பிரியங்கமானவருக்கு 'அரசியலில்' இருந்த பிடிப்பு அகன்றுவிட்டது என்ற கிசுகிசுவும் டெல்லியில் உண்டு.

எது எப்படியோ... குல்லாய்க்காரர்களின் 'வேண்டுதல்களின்' பலாபலன்கள் எப்படியும் கொஞ்ச நாட்களுக்குள் தெரியத்தானே வேண்டும். அப்போது மிகுதியைப் பார்ப்போம்.

அது..சரி..யாழ்ப்பாணத்தில் ஊழலாட்சி [உள்ளூராட்சி] சபைகளுக்கு தேர்தல் நடாத்த சிங்கக் கொடியோர் அறிவிப்பு விடுத்தாலும் விடுத்தார்கள். தெமிழ் குழு பையன்கள் எல்லாம் மாறி மாறி தங்களுக்குள் கடிபட்டுக்கொள்கிறார்களாம். வயது போன கிழட்டுக் கு[கூ]ட்டணியினரோ, தெமிழ் குழு பையன்களிடமிருந்து ஆயுதங்களைக் கொஞ்ச நாட்களுக்கேனும் களைந்தால்தான் சுதந்திரமான [அ....ஐ..ஆ..ஐ....நறா]

# உள்நாட்டுக்கான திட்டமும் வெளிநாட்டுக்கான திட்டமும்

உளதாக் கட்சிக்காரர் சின்ன அம்மணியை வைத்து ஆட்சியைப் பிடிக்கக் கனவு கண்டு கொண்டிருந்தபோது நீலக் கட்சிக்காரர்கள் அம்மா மூலமாக அம்மணியைத் தங்கள் ஆட்சிக்கு இழுக்க முயற்சி செய்தனர்.

சின்ன அம்மணிக்கு எப்போதும் அம்மா மேல் பாசம் உண்டு. அதுபோல தன்னைப் போல் சிறு வயதில் கணவனை இழந்துவிட்ட அம்மணி மீதும் அம்மாவுக்கு இரக்கம் அதிகம். இந்த உணர்வுபூர்வமான அம்மா மகள் பாசம் அம்மாவிற்குப் பின் நீலக் கட்சித் தலைமை தனக்குக் கிடைக்கும் என்று எதிர் பார்த்திருந்த 'அனுர'வான மகனின் நிலையை இலவுகாத்த கிளியின் நிலைக்குத் தள்ளிவிட்டது.

அம்மாவின் ரத்த உறவுச் சகோதரர் சின்ன அம்மணியை அதாவது தனது அருமை மருமகளை ஆட்சிபீடமேற்றுவதற்கு தன் அருமைச் சகோதரி விட்டுக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டதோடு ஆட்சியைப் பிடிக்க வேண்டுமானால் அம்மா பிள்ளைப் பாசத்தைத் துறக்க வேண்டும் என்றும் வற்புறுத்தினார்.

சின்ன அம்மணியின் குடும்ப நண்பரான நீலக் கனவான் அம்

> **அம்மணி ஆட்சி பீடமேற வேண்டுமானால் சமாதானக் கோசம் போட வேண்டும் என்றும் நாங்கள் பதவிக்கு வந்தால் விடுதலைப் புலிகளுடன் பேசுவோம்; யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவோம் என்பதை தேர்தலின் போது மேடை மேடையாக முழங்க வேண்டும் என்று ஆலோசனை வழங்கினார்.**

மணி ஆட்சி பீடமேற வேண்டுமானால் சமாதானக் கோசம் போட வேண்டும் என்றும் நாங்கள் பதவிக்கு வந்தால் விடுதலைப் புலிகளுடன் பேசுவோம்; யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவோம் என்பதை தேர்தலின் போது மேடை மேடையாக முழங்க வேண்டும் என்று ஆலோசனை வழங்கினார்.

எல்லோரும் எதிர்பார்த்த படி சின்ன அம்மணி பாராளுமன்றத் தேர்தலிலும் ஜனாதிபதி தேர்தலிலும் அமோக வெற்றி அடைந்துவிட்டார். நீலக் கட்சியினரின் நீண்ட நாள் ஆசை நிறைவேறிவிட்டது. பச்சைக் கட்சிப் பெரியவரால் பழிவாங்கப்பட்ட அம்மாவை கௌரவிக்கும் முகமாக அவருக்கு பிரதமர் பதவி வழங்கப்பட்டது. தேர்தலுக்கு முன் போட்ட சமாதான வேடத்தை இனித் தொடர வேண்டியதில்லை என்று நீலக்கட்சிக் கனவான் தன் அபிப்பிராயப்பட்டனர்.

ஆனால் சின்ன அம்மணியின் ஆலோசகரான நீலக் கனவான் இனிமேலதான் அதை இன்னும் உரத்துச் சொல்ல வேண்டும் என்றும் ஒரு தமி

> **இரத்த உறவான அருமை மாமா நீ சமாதானம் சமாதானம் என்று பேசிக் கொண்டிரு; நான் இன்னும் இரண்டு வருடத்தில் புலிகளை ஒழித்துக்கட்டுகிறேன் என்று தைரியமூட்டினார்.**

ழரை அமைச்சராக்கி விடுதலைப் புலிகளுக்கு எதிராக சர்வதேச ரீதியில் பிரச்சார யுத்தம் ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்றும் உள்நாட்டில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண ஒரு திட்டம் தயாரிக்கப்போவதாகச் சொல்லிக்கொண்டே விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தும் அதேநேரத்தில் அவர்களை அழிப்பதற்கான யுத்தத்தை முன்னெடுப்பதற்கான தயாரிப்பு வேலைகளை அரசாங்கம் செய்ய வேண்டும் என்று ஆலோசனை சொன்னார்.

விடுதலைப் புலிகள் பலமான சக்தியாக இருக்கும்வரை தெற்கில் அம்மணி ஆட்சியை சுமூகமாகத் தொடர முடியாது என்றும் அந்தப் பிரமுகர் சொல்லியிருந்தார். அவருடைய கனவெல்லாம் ஏதாவதொரு வகையில் வெளிவிவகார அமைச்சர் பதவி தனக்குக் கிடைக்கும் என்பதே.

அம்மணியைப் பொறுத்த வரையில் நீலக்கனவானின் இந்த ஆலோசனை பெறுமதி மிக்கதொன்றாக இருந்தது. அவர் நீலக்கட்சிக்காரர்களுடன் இது

## தீர்வுப் பொதி பிறந்த கதை 11

பற்றிக் கலந்துரையாடிய போது அம்மாவின் குடும்ப நண்பரான கதிர்காமக் கந்தருக்கு வெளிவிவகார அமைச்சர் பதவி கொடுக்கலாம் என்றும் அவர்கள் சொல்லிவிட்டனர். இரத்த உறவான அருமை மாமா நீ சமாதானம் சமாதானம் என்று பேசிக் கொண்டிரு, நான் இன்னும் இரண்டு வருடத்தில் புலிகளை ஒழித்துக்கட்டுகிறேன் என்று தைரியமூட்டினார்.

மொத்தத்தில் விடுதலைப் புலிகளை எவ்வாறு அழிப்பது, தமிழர் தாயகத்தை எவ்வாறு பிரிப்பது — தமிழர் தாயகம் எங்கும் எவ்வாறு சிங்கக் கொடியை பறக்க விடலாம் என்கின்ற அடிப்படை இராணுவ அரசியல் நோக்கங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டதே இப்போதுள்ள தீர்வுப் பொதி.

**காண்டீபன்**

மேற்கு லண்டன் மாநகரில்

# துவாரகா

## Cash & Carry

இல்லை என்பது
இங்கில்லை

N°: 199, The BROADWAY, Southall, Middx.
**T.P: 0181 / 813 9126**



நத்தார் – புதுவருடத்தை மகிழ்வோடு
கொண்டாடும் உங்களுக்கு...

# ஆர்த்தி

TELECOM
ITINERIS
SFR
OLA

## TELEPHONE PORTABLES

SONY, ERICSSON, MOTOROLA, STARTAC, PANASONIC, MITSUBISHI, SAGEM, NOKIA

மற்றும் அனைத்துத் தொலைபேசிகளையும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள

## ஆர்த்தி

எங்களிடம் Abonnement செய்வதற்கு Cheque அல்லது Domicile தேவையில்லை!

ERICSSON
190F
SFR

நத்தார் – புத்தாண்டு மற்றும் பண்டிகையை முன்னிட்டு
-Itineris Telephone Mobile = 1F*
(Itineris Declic Abonnement)
- SFR இரண்டு மாதம் "10 மணி நேரம்" இலவசம்
OLA Itineris Telephone இலவசம்
உடனே முந்துங்கள் கையிருப்பு உள்ளவரை மட்டுமே!

## ஆர்த்தி ஸ்ருடியோ

**15 RUE CAIL, 75010 PARIS.**
**M°: GARE DU NORD - LA CHAPELLE**
**Tel: 01 40 34 20 90**

இலண்டனில்

**நகைத் தெரிவுகளுக்கு**

# ராஜஸ்ரீ பட்னி அன் சன்

# PATTNI HOUSE

58-60 EALING ROAD WEMBLEY, MIDDX HA0 4TQ
TEL: 0181-903 6677 / 2859, 0181-902 0577
FAX: 0181- 903 4887

Tamileelam Archive

# சங்கர் அன் கோ


# மாபெரும் மலிவு விற்பனை

டிசம்பர் முதலாம் திகதி முதல் ஜனவரி 14 ஆம் திகதி வரை

GRAND SALE







**Tamil, Hindi, Punjabi & Sinhala**

* Films Songs
* Devotional songs
* Classical Vocal & Intruments
* Christian Songs

**CDs from.................... .99P**
**Audio cassetts from. .50P**
**Video cds from..........£6.00**
**Videos from...............£1.99**

தமிழ், ஹிந்தி, பஞ்சாபி, சிங்களம்
ஆகிய மொழிகளில்

சினிமாப் பாடல்கள், பக்திப் பாடல்கள்,
சாஸ்திரிய சங்கீதம்,
– வாய்ப்பாடு
– வாத்தியங்கள்
கிறிஸ்தவப் பாடல்கள்

## SHANKAR & CO

231, NORTHOLT ROAD
SOUTH HARROW
MIDDLESEX
HA2 8HN
Tel: 0181 - 42 68 960
Fax: 0181 - 86 15 248

**ALL SRILANKAN PRODUCTS AT WHOLE SALE PRICES**





# அரங்கேறிய சின்னஞ்சிறு கிளி

ஏந்த ஒரு கலை வடிவமும் மக்களுடன் இசைவுத் தன்மையை கொண்டிருக்காவிடின் அது தோல்வியடைந்து விடும். அந்த வகையில் பரதநாட்டியம் எனப்படும் ஒரு கலைவடிவம் இன்றும் எம் மக்களால் இரசிக்கப்படுவதற்கு அல்லது ஏற்கப்படுவதற்கு அதில் பொதிந்துள்ள சர்படுத் தன்மையே காரணம் எனலாம்.



கடந்த 07.12.97-ல் பாரிஸில் அரங்கேறிய செல்வி. ஜெயெதாவின் பரத நாட்டியமும் மண்டபத்தில் கூடியிருந்தோரை சர்ப்படைவச் செய்தது என்றால் மிகையாகாது. சிறப்பான பக்கவாத்தியக் குழுவுடன் அரங்கேறிய செல்வி ஜெயெதா தனக்கே உரிய அபிநயச் சிறப்புடன் அந்தக் கலை வடிவத்தினைப் படைத்து தனது குருவான நாட்டிய கலாரத்தினா செல்வி ஜீவா திருநாவுக்கரசு அவர்களுக்கும், விடா முயற்சியுடன் தனக்கு இந்தக் கலையினை ஊக்குவித்த தனது பெற்றோர்களுக்கும், மண்டபத்தை நிறைத்திருந்த இரசிகர்களையும் கலை ஏமாற்றம் ஒன்றுக்கும் உட்படுத்தாது செவ்வையாக செய்தேகியுள்ளார்.



குறிப்பாக 'பாஞ்சாலி சபதத்தில்' எல்லாப் பாத்திரங்களையும் தான் ஏற்று அதற்கேற்ற இசையமைப்புடன் தனது கலை சபதத்தினை முடித்துக் கொண்டதும் பாரதியின் சின்னஞ்சிறு கிளியுடன் விளையாடியதும் பார்வையாளர்களின் பாராட்டினைப் பெற்றதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

பக்கவாத்தியக் கலைஞர்கள் வரிசையில் தமிழக கலைஞர்களுடன் நமது உள்ளூர் கலைஞர்களும் செவ்வையான ஒரு பணியினைச் செய்துள்ளார்கள். பாடல்களை பாடிய திருமதி ரங்கநாயகி ராஜன், செல்வி சத்தியதேவி திருநாவுக்கரசு, மிருதங்கத்தினை வாசித்த திரு. கிரிதார், வயலினிசையினை திரு. தேவராஜா மயில்வாகனம், மோர்சிங்கை பாலவெங்கடேஸ், கெஞ்சிரா குருவிஜய குருமூர்த்தி, கடம் திரு.அருண் சுகுமார், புல்லாங்குழல் திரு பாலாசங்கர் ஆகியோர் இசைத்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. நாட்டியத்திற்கான நெறியாழகையினை தனது முதலாவது அரங்கேற்றத்தினூடாக செவ்வையாக முடித்த செல்வி. ஜீவா திருநாவுக்கரசு நிச்சயம் பாராட்டப்பட வேண்டியவர் தான்.

அரங்கேற்ற நிகழ்வு என்பது பரதக்கலையினை பயில்பவருக்கு ஒரு முடிவான அத்தியாயமில்லை. அது பரதத்தின் நுணுக்கங்களையும், சிறப்பினையும் பெற்றுக்கொண்டதற்காக அளிக்கப்படும் ஒரு அங்கீகாரம் என்பதனை செல்வி. ஜெயெதா அவர்கள் உணர்ந்து இந்தக் கலையில் மென்மேலும் பல புதிய வடிவங்களை தனக்கே உரியதாக்கவேண்டுமென்பதே கலை ரசிகர்களின் பெருவிருப்பாகும்.

அதேவேளை நடன ஆசிரியர்களும் தமிழீழ விடுதலைக்கு உறுதுணையான நடன வடிவங்களையும், தமிழீழ மக்களின் துன்ப துயரங்களை வெளிப்படுத்தும் நடன அமைப்புக்களை எம் சேர்த்துக் கொள்வது மிகவும் அவசியமானது.

# புகலிட நிகழ்வுகள்

## தமிழீழ கலைஞர் ஒன்றியம் கடற்புலிகள் நிதியத்திற்கு நிதியளிப்பு

பாரிஸ் - தமிழீழ கலைஞர் ஒன்றியத்தினர் தாம் நடாத்திய கலை முரசு நிகழ்ச்சியின் மூலம் கிடைத்த நிதியை கடற்புலிகள் நிதியத்திடம் கையளித்துள்ளனர்.

பாரிசில் வைத்துப் படுகொலை செய்யப்பட்ட ஈழமுரசு ஆசிரியர் கப்டன் கஜன் நினைவாக பாரிஸ் கலை முரசு என்ற நிகழ்ச்சியினை தமிழீழக் கலைஞர் ஒன்றியம் நடாத்தியிருந்தது.

இந்த நிகழ்ச்சியின் மூலம் கிடைத்த நிதியை - தமிழீழக் கலைஞர் ஒன்றியம் பிரதிநிதிகள் சமீபத்தில் கடற்புலிகள் நிதியத்திற்கு பொறுப்பாளவர்களிடம் உத்தியோகபூர்வமாக கையளிப்புச் செய்தனர்.

தமிழீழக் கலைஞர் ஒன்றியத்தை உருவாக்குவதில் ஈழமுரசு ஆசிரியர் கப்டன் கஜன் முன்னின்று செயற்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.


கலைபண்பாட்டுக் கழகம்

விடுதலைப் புலிகள்- ஜேர்மனிப்பணியகம் நடாத்தும்

## கேணல் கிட்டு நினைவு ஓவியப் போட்டி 1998

விடுதலைப் புலிகளின் ஜேர்மனிப் பணியகக் கலைபண்பாட்டுக் கழகம் வருடா வருடம் நடாத்திவரும் கேணல் கிட்டு நினைவு ஓவியப் போட்டியின் 1998-ம் ஆண்டுக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

*கலைபாண்பாட்டுக் கழகம்*
*விடுதலைப் புலிகளின் — ஜேர்மனிப்பணியகம்*
*நடாத்தும்*

**கேணல் கிட்டு நினைவு ஓவியப்போட்டி 1998**

**விண்ணப்பப்படிவம்**

1. விண்ணாப்பதாரரின் முழுப்பெயர் ..................
2. பெற்றோர் அல்லது பாதுகாவலர் பெயர் ..................
3. முகவரி..................
..................
4. தொலைபேசி இல ..................
5. விண்ணப்பதாரரின் பிறந்தநாள்: நாள்......... மாதம்......... ஆண்டு..................
6. பங்குபற்றும் பிரிவு கீழ்ப்பிரிவு / நடுப்பிரிவு / மேற்பிரிவு / அதிமேற்பிரிவு

மேலே குறிப்பிட்டுள்ள பெயருடைய விண்ணப்பதாரராகிய நான், கேணல் கிட்டு நினைவு ஓவியப்போட்டி - 1998 இற் பங்கேற்க விரும்புகிறேன் என்றும், நடுவர் தீர்ப்பை முழுமனதுடன் ஏற்பேன் என்றும் உறுதி கூறுகின்றேன்.

பெற்றோர் அல்லது பாதுகாவலரின் கையொப்பம் | விண்ணப்பதாரரின் கையொப்பம்

### ஓவியப் போட்டிக்கான விதிகள்

1. போட்டியிற் பங்குபற்றுவோர் ஓவியங்களை வரைந்து, வரையப்பட்ட ஓவியத்தின் பின் பக்கத்தில் கையொப்பமிட்டு, பெயரையும் முகவரியையும் குறித்து, விண்ணப்பத்துடன் இணைத்து, கீழே குறிப்பிட்டுள்ள தொடர்பு முகவரிக்கு 05.01.98 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கவேண்டும். தெரிவு செய்யப்படும் போட்டியாளர், பின்னொரு நாளில் இறுதிப் போட்டிக்கு அழைக்கப்படுவார்.
2. ஓவியங்கள், போட்டியாளரின் சுதந்திரமான - சுயமான கற்பனையில் வரையப்படல் வேண்டும்.
3. பிரிவுகளும் வயதெல்லையும்
   **கீழ்ப்பிரிவு:** 01.01.1988 அன்றும் அதற்குப் பின்னரும் பிறந்தவர்கள்
   **நடுப்பிரிவு:** 31.12.1982 இற்கும் 01.01.1988 இற்கும் இடையில் பிறந்தவர்கள்
   **மேற்பிரிவு:** 31.12.1978 இற்கும் 01.01.1983 இற்கும் இடையில் பிறந்தவர்கள்.
   **அதிமேற்பிரிவு:** 31.12.1978 அன்றும் அதற்கு முன்னரும் பிறந்தவர்கள்
4. கீழ்ப்பிரிவினரும் நடுப்பிரிவினரும் வரையவேண்டிய ஓவியத்தின் அளவு 24.செ.மீ 34 செ.மீ பயன்படுத்தக் கூடிய வர்ணம்.
   வர்ணக்கட்டி (Farbkriede), மெழுகுவர்ணம் (wachsmalstift), வர்ண எழுதி (bundstift), வரைவு வர்ணம் (tuchfarbe), வர்ண இழைத்தடி (filzstift) நீர்வர்ணம் (wasserfarbe)
   மேற்பிரிவினரும் அதிமேற்பிரிவினரும் வரையவேண்டிய ஓவியத்தின் அளவு 30செ.மீ. 40செ.மீ. பயன்படுத்தக்கூடிய வர்ணம் நீர்வர்ணம் (wasserfarbe) மட்டுமே.
5. ஓவியத்தின் தலைப்பு: **கீழ்ப்பிரிவு:** போட்டியாளரின் விருப்பத்திற்கமைய தலைப்பிடலாம்.
   **நடுப்பிரிவு:** நம் மண்ணின் சுவாசம்
   **மேற்பிரிவு:** முகம் காட்டாத நல்முத்துக்கள்
   **அதிமேற்பிரிவு:** சும்மா கிட்டுமா சுதந்திரம்
6. போட்டிக்காக அனுப்பி வைக்கப்படும் ஓவியங்களைத் திரும்பப் பெற விரும்பும் போட்டியாளர், நினைவு நாள் அன்று நிகழ்ச்சி மண்டபத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
7. பரிசுக்குரியவராக தெரிவு செய்யப்படும் பட்சத்தில் வயதை உறுதிப்படுத்த அத்தாட்சிப் பத்திரம் அல்லது அடையாள அட்டை கேட்கப்படுவர்.
8. விண்ணப்பம் செய்வதற்கான **இறுதிநாள்: 05.01.98**
9. விண்ணப்பங்களும் ஓவியங்களும் அனுப்பவேண்டிய முகவரி

**K.T.O.**
**Post fach: 1160, 37441 Bad Sachsa.**

**ஆர்வமுள்ள அனைவரையும் பங்குபற்றும்படி அழைக்கின்றோம்.**

*கலைபண்பாட்டுக்கழகம்*
*தமிழீழ விடுதலைப் புலிகள் ஜேர்மனிப் பணியகம்*
**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

# பிரான்ஸ் - செவ்றோனில் மாவீரர்நாள் 97

1997ம் ஆண்டுக்கான மாவீரர் நாள் கொண்டாட்டம் கார்த்திகை மாதம் 23-ம் நாள் செவ்றோன் வாழ் தமிழ் மக்களால் செவ்றோன் நகரமண்டபத்தில் கொண்டாடப்பட்டது.

மாவீரர்நாள் முதல் நிகழ்வான மங்கல விழக்கேற்றலுடன் ஆரம்பிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து மாவீரருக்கான மெழுகுவர்த்தி ஏற்றப்பட்டது. அதன்பின் அமைதி வணக்கமும் மலர் வணக்கமும் மக்களால் மாவீரருக்கு செலுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் பிரெஞ்சுப் பணியகப் பொறுப்பாளர் திரு. நடராசா இளங்கோ விடுதலை போராட்டத்தின் இன்றைய நிலைபற்றியும் வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்கள் எப்படியான வகையில் எமது போராட்டத்தை சாலதேசமயப்படுத்தலாம் என்பது பற்றியும் சிறப்புரை வழங்கினார். அதைத் தொடர்ந்து செல்வி வானதி பேடினஸ், செல்வன் பேடினற் மிதுரன் செல்வன் றொபேனே திபுசியன், செல்வன் ஈழமன் கரிகாலன் கேதீஸ்வரன் ஆகியோர் மாவீரர் பற்றி உரையாற்றினார்கள். அதனைத் தொடர்ந்து சார்சல் தமிழ்ச்சோலை ஆசிரியை திருமதி புண்ணியமூர்த்தி அவர்களின் நெறியாள்கையில் உருவான சம்பாஷனை நிகழ்ச்சியை செல்விகள் அன்ரன சோபியா, ஜெயராஜசிங்கம் தனியா அவர்களும் இணைந்து வழங்கினார்கள். அவர்களுக்குப் பின் செவ்றோன் கினேஷ் அவர்களும் செல்வன் பாலேந்திரராஜா சுதாகரன் அவர்களும் முறையே மாவீரர்கள் பற்றி மிக அருமையான கவிதைகளை வழங்கினார்கள்.

இதைத் தொடர்ந்து செவ்றோன் தமிழ்ச்சோலை நடன ஆசிரியை செல்வி தனுஜா ராஜரட்ணம் அவர்களின் நெறியாள்கை உருவான 8 நடனங்களும் பார்வையாளர்களால்



பாராட்டப்பட்டன. இவரிடம் இன்னும் எதிர்பார்க்கிறோம.

இவர்களுடன் இலண்டனிலிருந்து வருகைதந்த செல்வி யூலானி சித்ரா முருகையா அவர்களும் மாவீரர்நாள் நிகழ்ச்சியில் ஒரு நடனம் வழங்கினார். நிகழ்வின் இறுதி நிகழ்ச்சியாக ஒரு கலைபண்பாட்டுக் கழகத்தினர் இரண்டு நாடகங்களை வழங்கினார்கள். முதல் நாடகமான 'மனம் திரும்புங்கள்' சபையோரின் கரகோஷத்தை பெற்றது. அதில் சுதிராக நடித்த சிறி அவர்களின் நடிப்பு அனைவரையும் கவர்ந்தது. இரண்டாவது நாடகமான 'விழிப்பு' என்னும் நாடகம் நடாத்தப்பட்டது. இதில் வெளிநாடுகளில் வாழும் மக்கள் எண்ணப்பாட்டை துல்லியமாக எடுத்துக்காட்டப்பட்டது கவனிக்கத்தக்கது. இதன் முடிவில் கதாபாத்திரங்கள் மனம் திரும்பி விடுதலைக்காக நிதி சேர்த்து கடற்புலிகள் நிதிக்காக 2050 பிராங்குகளை விடுதலைப் புலிகளின் பிரதிநிதியிடம் வழங்கினார்கள். நிகழ்ச்சியை திரு.அருள்மொழி தேவன் தொகுத்து வழங்கினார். நிகழ்ச்சிகள் யாவும் அமைதியாக நடந்து முடிந்தன.

*93 கலைபண்பாட்டுக் கழகம், சீ.பேடினன்ட்*

# இத்தாலியில் தேசிய மாவீரர்நாள் 1997

இத்தாலி பியோமொந்தே மாகாணம் வாழ் தமிழ் மக்களால் 30.11.1997 ஞாயிற்றுக்கிழமை தேசிய மாவீரர்நாள் மாலை 4.00 மணியளவில் பொன் சோனே பறோக்கியோ சுத்தோலிக்க தேவாலய மண்டபத்தில் தமிழீழத் தாயக மண்ணுக்காகவும் தமிழ் மக்களின் விடிவுக்காகவும் தமது உயிரைத் தியாகம் செய்த மாவீரர்களுக்கு ஈகைச் சுடர் ஏற்றி விழா ஆரம்பிக்கப்பட்டது.

ஈகைச்சுடரினை மாவீரர் கப்டன் ரூபனின் சகோதரியும் மாவீரன் வில்சனின் தாயாரும் ஏற்றி வைத்தனர். அதனைத் தொடர்ந்து மண்ணுக்காக மரணித்த மாவீரரின் தியாகத்தை உள்ளம் உருகநினைவு கூர்ந்து மௌன வணக்கம் அனுஷ்டிக்கப்பட்டு, தமிழீழத் தேசியகீதம் இசைக்கப்பட்டது. சகல தமிழ் மக்களும் உணர்ச்சி பூர்வமாக மாவீரரை மலர்களால் அர்ச்சித்தனர்.

இவ்விழாவின் சிறப்பு நிகழ்ச்சியாக தேசிய மாவீரர்நாள் 1997 நவம்பர் 27. தமிழீழ தேசியத் தலைவர் திரு.வே. பிரபாகரன் அவர்களால் உலகத்தமிழ் மக்களுக்காக ஆற்றப்பட்ட தேசிய மாவீரர்நாள் உறுதி உரை ஒலிபரப்பப்பட்டது.

இவ்விழாவில் பேச்சுக்கள், பாடல்கள், கவிதைகள் என்பன இடம்பெற்றன. தொடர்ந்து விக்னேஸ்வரர் தமிழ்பாடசாலை



மாணவர்களால் தமிழீழத்தில் தமிழ் மக்கள் அனுபவிக்கும் துன்ப வாழ்க்கையையும் அதனை நிவர்த்தி செய்யும் வழிவகையினையும் சித்தரிக்கும் முகமாக 'தீர்வோதீர்வு' என்ற நாடகம் வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பியோமொந்தே தமிழ கலை பண்பாட்டுக் கழகத்தினரால் சுதந்திரத்துக்குப்பின் இலங்கையின் அரசியல் வரலாற்றுத் திருப்பங்களையும், அதன் விளைவாக தமிழின மக்களிடையே உணர்ச்சி பூர்வமாகக் கிளர்ந்தெழுந்த புரட்சி வடிவத்தினையும் படம்பிடித்துக் காட்டும் வகையில் 'நாம் பட்ட துயர்' எனும வில்லிசை வழங்கப்பட்டது.

இறுதியாக 1997 தேசிய மாவீரர்நாள் ஞாபகார்த்தமாக எமது மூத்த பரம்பரையினரின் வாழ்க்கை மரபினையும் பாரம்பரியத்தையும் நினைவுக்குக் கொணரும் வகையில வர்ண ஓவிய நூல்கள் தமிழ்ப்பள்ளிச் சிறார்களுக்கு வழங்கப்பட்டன.

# திருப்பூர் கலை இலக்கியப் பேரவையின் இலக்கியப் போட்டிகள்

தமிழ்நாடு திருப்பூர் கலை இலக்கியப் பேரவை இலக்கியப் போட்டி ஒன்றை நடாத்தவுள்ளது. இந்த போட்டிக்கு புலம்பெயர்ந்த ஈழத்து எழுத்தாளர்களிடமிருந்தும் அது ஆக்கங்களை எதிர்பார்க்கின்றது.

**போட்டிகள்...**

★ கையெழுத்துப் பிரதியிலான நாவல்கள்
★ கையெழுத்துப் பிரதியிலான சிறுகதைகள்
★ கையெழுத்துப் பிரதியிலான கவிதைகள் - (மரபுக் - புதுக்கவிதைகள்)

என மூன்று பிரிவாக நடைபெறும். போட்டிக்கு அனுப்பி வைக்கப்படும் படைப்புகள் சமூக அக்கறையுடனும், நவீன வாழ்க்கையின் சிக்கலை மையமாக்கியும் இருத்தல் வேண்டும். பக்க அளவு இல்லை.

படைப்புகள் அனுப்புவோர் அதன் பிரதி தம்வசம் வைத்திருக்க வேண்டும் படைப்புகள் போய்ச் சேர வேண்டிய கடைசித் திகதி 31.01.98.

**படைப்புகள் அனுப்பவேண்டிய முகவரி:**
**திருப்பூர் கலை இலக்கியப் பேரவை**
**10 ஸ்டேன்ஸ் இரண்டாம் வீதி,**
**திருப்பூர் - 641602.**

# 'திரான்சி'யில் பொங்கல் விழா

பிரான்சின் செயின் - சென் டெனிஸ் மாவட்டத்திலுள்ள திரான்சி (Drancy) பாரிஸ் தமிழர் இல்லம், தனது 16-வது பொங்கல் விழாவை முதல் முறையாகக் கொண்டாடவுள்ளது

Espace Culturel Du Parc
Avenue Marceau,
93700 Drancy என்னும் முகவரியில் 17.01.97 சனிக்கிழமை பிற்பகல் 15.00 மணிக்கு நடைபெறும் இப்பொங்கல் விழாவில், திருக்குறள் போட்டி, பாடல், பரதநாட்டியம் உட்பட பல் வேறு நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.


தாயகத்தில் பெற்றோர்களை இழந்த
இளம் தளிர்களின் மறு தளிர்ப்புக்காக...
உங்கள் ஆதரவுடன்

வவுனியா எவர்கிறீன் விளையாட்டுக்கழகம்
நடாத்தும்

**கலைமாலை - 97**

இடம்: **81, Rue de la Plaine, 75020 Paris**
**Métro: Maraichers**
காலம்: **28.12.1997 ஞாயிற்றுக்கிழமை**
நேரம்: **மாலை 4.00 மணி - 9 மணி வரை**
மேலதிக விபரங்களுக்கு: நடவராஜ் 01 43 48 42 96

குறிப்பு: மண்டப நேரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையால் நிகழ்ச்சிகள் யாவும் குறித்த நேரத்தில் ஆரம்பிக்கப்படும்.



**ஒளி விழா**



*கிறிஸ்து பிறப்பையொட்டித் திருப்பலியும் அதைத்தொடர்ந்து ஒளிவிழாவும் பெர்லின் மாநகரில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.*

காலம்: 26.12.1997 வெள்ளிக்கிழமை
நேரம்: திருப்பலி 15.30 மணி
ஒளி விழா: 17.00 மணி
இடம்: **Evangelische Auen Kirche**
**Wilhelmsauer 118 A,10715 Berlin.**
(U- Bhf Blisscstr, Linie 7: Ausgang - Uhland Srt...)



# லாசப்பல் தலைப்புச் செய்தி சீட்டுச் சண்டையள்

கண்டுபிடிக்கிறதில எங்கட சனங்கள் வலு கெட்டிக்காரர்தான் பிள்ளையள்! எத்தனை விதமான 'சீட்டு'க்களை கண்டுபிடிச்சிருக்கினம். குலுக்கல்சீட்டு, கழிவுச்சீட்டு, பவுண்சீட்டு.... இதுகள் மட்டுமே.....? இன்னும் எத்தனையை புதுசுபுதுசா கண்டுபிடிக்கப்போகினமோ ஆர் கண்டது.

துரியோதனனோட சூதாடி ஆண்டியாப்போன பாண்டவர் மாதிரி உந்தச் சீட்டாலையே துண்டுக் கோவணத்துக்கு அலைஞ்ச இலட்சாதிபதியளும் இருக்கினம். அதேநேரம் கோடீஸ்வரரான சில 'பெரியவை'யளும் இருக்கத்தான் செய்யினம். முன்னம்முன்னம் 'தாச்சிக்காரர்'தான் அடிக்கடி காணாமல் போறவை. இப்ப தாச்சிக்காரர் இருக்க சீட்டை எடுத்தவையெல்லோ எங்கையெண்டு பொழுதுபோக்காப் போச்சு. இத்தனைக்கும் அவையளின்ர புருசன்மார் ரெண்டுபேரும் ஒண்டாயிருந்து சிரிச்சுக்கதைச்சு பியாவில கல்லை வாத்துக் கொண்டிருப்பினம்.

இப்பிடி காசைக் குடுக்கிறதும் பிடுங்குப்படுறதும் சாதாரண நிலைமையாப் போச்சு. 'கடன்பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன்' எண்டு பழமொழியளும் சொல்லுறவை. இப்ப அதுவும் சரிவராது பிள்ளையள். எங்க கடன்பட்டவை இப்ப கலங்கிக் கொண்டிருக்கினம்? கடனை குடுத்தவையெல்லோ முதலும்போய் வட்டியும் போய் என்ன செய்யிறதெண்டு தெரியாமல் முளிச்சுக் கொண்டிருக்கினம். இப்பிடித்தான் அண்டைக்கொருத்தனை சந்திக்கேக்க சொன்னான். தெரிஞ்ச ஒருத்தனுக்கு அவசரமெண்டு தன்ர சீட்டை அரைகுறைக் கழிவோட எடுத்து வட்டியுமில்லாமல் குடுத்தது. இப்ப அவன் ஏமாத்திக்கொண்டு திரியிறதால தான் வேறையொரு இடத்தில வட்டிக்கெடுத்திருக்கிறாராம். காசையும் குடுத்து வட்டியும் கட்டுற நிலையில தன்னைப்போல ஒருத்தரும் இருக்காயினம் எண்டு சொல்லிக் கவலைப்படுறான்.

அவன் சொல்லுறது உண்மைதான் தெரியாமல் துலைஞ்சு போகினம். அவையளைத் தேடிப்பிடிக்கிறதெண்டா சர்வதேச அளவிலதான் முயற்சி செய்யவேணும்! அப்பிடி முயற்சி செய்தாலும் முடியுமோ எண்டது கேள்விக்குறிதான் பிள்ளையள்.

எங்கட சனங்களும் விரலுக்கேத்த வீக்கம் மாதிரி எதையும் செய்ய நினைக்கிறேலை. பதினெட்டு பேர், இருபது பேரெண்டு பெரும் எடுப்பில தொடங்கிறது. பிறகங்கை அவை எதிர்பாத்த அளவில ஆக்கள் சேராயினம் எண்டவுடன இருக்கிற 'சத்துமாத்துக்களையும்' தூக்கிப்போடுறது. அவை ரெண்டொரு மாசத்தில தங்கட கைவரிசையைக் காட்டிப்போடுவினம். பிறகென்ன ஆப்பிழுத்த குரங்காட்டம் என்ன செய்யிறதெண்டு தெரியாமல் வெட்டுப்பாடும் குத்துப்பாடும் தொடங்கிவிடும். உதுகளால இஞ்சத்தை பொலிசுக்காரருக்குகூட தமிழற்ற சீட்டைப்பற்றி நல்லாவே தெரியும் கண்டியளோ. எதாவது வேற அலுவலா போனாக்கூட அவையள் கேக்கிற முதல் கேள்வி "என்ன சீட்டுப் பிரச்சினையோ" எண்டதாய்த்தான் இருக்குதெண்டாப் பாருங்கோவன்...

அதோட இவ்வளவு நாளும் உந்த சீட்டுப் பிரச்சினையால றோட்டுவழிய நிண்டும் பிடுங்குப்படுறதும் குத்துப்படுறதும் ஆம்பிளையள் தானெண்டு நான் நினைச்சுக் கொண்டிருந்தனான். இப்ப பொம்பிளையளும் எல்லோ வீதியில இறங்கிவிட்டினம்! அதுவும் எங்கட சனங்களும்.. வெளிச்சனங்களும் எக்கச்சக்கமா புளங்கிற பாரிஸ் லாசப்பல் றோட்டில எல்லோ பிடுங்குப்பாடு நடக்குது. அவையள் கதைச்ச கதையிருக்கே சுத்த செந்தமிழ்தான். 'செந்தமிழ் என்னும் போதினிலே தேன் வந்து பாயுது காதினிலே' எண்டு பாரதி பாடின செந்தமிழ் இல்லை இது பிள்ளையள். இது வேற...... சிலபேருக்கு கதைக்க வெளிக்கிட்டா சுத்திவர என்ன நடக்குது எண்டதை பற்றியெல்லாம் கவலையில்லை. மெய்மறந்து அதுக்குள்ளையே உள்ளட்டுவிடுவினம். தீயவற்றை கேளாதே எண்ட கணக்கா எதுக்கும் நாங்க காதைப் பொத்திக்கொள்ளுறதுதான் நல்லது.

இவையளின்ர சண்டையைப் பாக்க, முந்தி நீர்கொழும்பில நான் இருக்கேக்க ஒருக்கா இப்பிடித்தான் சீட்டுப் பிரச்சினையெண்டு அயல்வீட்டுப் பொம்பிளையள் ரெண்டுபேருக்கிடையில பெரிய யுத்தமே தொடங்கிவிட்டுது. அவவின்ர புருசனைப் பற்றி இவ தரக்குறைவா பேசுறதையும், இவவின்ர புருசனைப் பற்றி அவ தரக்குறைவா பேசுறதையும் கேக்க காது கூசும். அப்பப்பா.... எங்கையிருந்துதான் இவ்வளவு சொல்லுகளை கண்டுபிடிச்சினமோ தெரியாது! அயலட்டையளுக்கு இவையளின்ர பொன்மொழியளைக் கேக்கிறதுதான் பிள்ளையள், எங்கட ஆக்கள் சிலபேர் இருக்கினம் மற்றவையளை சுத்துறதெண்டா அவையளை மிஞ்ச ஒருத்தரும் இருக்க முடியாது. செத்த மீன் துடிக்குதெண்டு சொல்லியே அடிச்சுக்கொண்டு போயிடுவினம். இவையும் துடிக்கும் துடிக்கும் எண்டு பாத்துக்கொண்டிருக்கிறது. அதெங்கை......

எங்க கடன்பட்டவை இப்ப கலங்கிக் கொண்டிருக்கினம்? கடனை குடுத்தவையெல்லோ முதலும்போய் வட்டியும் போய் என்ன செய்யிறதெண்டு தெரியாமல் முளிச்சுக் கொண்டிருக்கினம். இப்பிடித்தான் அண்டைக்கொருத்தனை சந்திக்கேக்க சொன்னான். தெரிஞ்ச ஒருத்தனுக்கு அவசரமெண்டு தன்ர சீட்டை அரைகுறைக் கழிவோட எடுத்து வட்டியுமில்லாமல் குடுத்தது இப்ப அவன் ஏமாத்திக்கொண்டு திரியிறதால தான் வேறையொரு இடத்தில் வட்டிக்கெடுத்திருக்கிறாராம்.

அதுக்கிடையில அவை முக்காலபோய் வாயால வந்திடுவினம். இப்பிடி யமனுக்கே ஓலை குடுக்கக்கூடிய ஆக்கள் இவை! இவையளின்ர விளையாட்டுக்களை சிலவற்றை உங்கின கடையள் வழிய போய்பாத்தா எல்லோ தெரியும். கடைக்காரர் இவையளை நம்பி 'விசா'வும் வேண்டிப்பாக்காம விடுறதால எத்தனை 'செக்கு'கள் திரும்பித்திரும்பி வந்திருக்குதெண்டு.

நாங்களும் என்ன செய்யிறது. உழைச்சதை(!?) மிச்சம் பிடிக்கிறதுக்கு உதுகளையும் விட்டா எங்களுக்கு வேற வழியிருக்கே? இவ்வளவு சனங்கள் அள்ளுப்பட்டு இங்கின வரவும் எத்தனையோ குமருகளை கரைசேர்க்கவும்(?) இந்தச்சீட்டிருந்ததாலதான் முடிஞ்சுது. அதை ஒழுங்காச் செய்தா பிரச்சினையில்லையெண்டு சொல்லுறவையும் இருக்கினம். எது எப்பிடியோ நம்பிக்கையாயும், நாணயமாயும் நடக்காதவரைக்கும் எங்களுக்கு எல்லாமே பிரச்சினைதான் பிள்ளையள்.

**அருமைத்தம்பி**




ம.கஜன் -
பேர்லின், ஜேர்மனி.

- தொடர்ச்சியாக கேள்வி கேட்பவர்களை எப்படி அழைக்கலாம்?
- நவீன விக்கிரமாதித்தர்கள்

கே.நாகேஸ் -
பாரிஸ் 18, பிரான்ஸ்.

- கலைஞர் கருணாநிதி எப்போது ஈழத் தமிழருக்கு முழு ஆதரவு தருவார்?
- ஈழத் தமிழர்களின் தியாகத்தை முதலீடாக வைத்து வாக்குக் கேட்டால்தான் தமிழக மக்கள் வாக்களிப்பார்கள் என்ற நிலை வரும்போது!

த.நாதன் -
கட்டிங்கன், ஜேர்மனி.

- குழாய் நீர் அருந்திலால் சிறுநீரகக்கோளாறு வருமா?
- நிச்சயமாக சொல்லமுடியாது. ஆனால், தொடர்ச்சியாக குழாய் நீரை அருந்துவதால் உடல் நலப் பாதிப்புக்குள்ளாகக் கூடிய வாய்ப்புகள் உண்டு.

க.சங்கர் -
ஒஸ்லோ, நோர்வே.

- ஜெயலலிதா அம்மையாருக்குப் பின் அடுத்த பிரதமராக வரப்போவது யார் குப்தா?
- அதற்கான ஓட்டப்பந்தயம் நடந்து கொண்டிருக்கிறது. வத்தையார், காமர், பொதிமாத்தையா என்று பலர் ஓடிக் கொண்டிருக்கிறார்கள். யார் வெல்லுவார் என்பதனை இப்போது சொல்லமுடியாது.

கோ.பாண்டியன் -
ரூட்டிங், இலண்டன்.

- கவலையில் இருக்கும்போது எனக்கு மனது சரியில்லை என்று சொல்வதா? மூளை சரியில்லை என்று சொல்வதா விஞ்ஞான பூர்வமானது
- மூளை சரியில்லை என்று சொல்வதுதான் விஞ்ஞான அடிப்படையைக்கொண்டது. மனிதர்களது உணர்வுகளை கட்டுப்படுத்தும், நெறிப்படுத்தும் கருவியாக இருப்பது மூளையே.

ச.ராணி -
வல்துவாஸ், பிரான்ஸ்

- பிரான்சில் கடை வைத்திருக்கும தம்மவர்களில் எத்தனைபேர் வியாபார ரீதியாக இலாபம் அடைகிறார்கள்.
- சொற்ப இலாபமடைபவர்கள் என்றால் நிறையப்பேர், ஆனால் வியாபார ரீதியாக இலாபம் என்று சொல்கின்றபோது யாராவது இருக்கிறார்களா என்று தேடித்தான் பார்க்கவேண்டும்.

சி.சுதா -
ஸ்ராஸ்பேக், பிரான்ஸ்

- திருமணமாகாத பெண் வீட்டில் இருக்கிறாள் என்று சொல்பவர்கள் ஏன் திருமணமாகாத ஆண் வீட்டில் உள்ளான் என்று சொல்வதில்லை?
- பெண்கள் விலைபேசி (சீதனம்) விற்கப்படும் பொருட்கள் என்கின்ற அடிமை மனோபாவம் தான் அதற்குக் காரணம.


## கிருஷ்ணா அச்சகம்

விலைகள் குறைவு! குறித்த தவணை!! தரமான வேலை!!!

London Models திருமணஅழைப்பிதழ்கள்!

உங்கள் தேர்வுக்காக 200க்கும் மேற்பட்ட மாதிரிகள்...

சகலவிதமான அச்சுப்பதிப்பு வேலைகளுக்கும், மொழிபெயர்ப்புத் தேவைகளுக்கும்...

Imprimerie KRISHNA

73, Rue Doudeauville, 75018 Paris.

M°: Marcadet Poissonniers / Château Rouge

மொழிபெயர்க்கப்பட்ட உங்கள் ஆவணங்கள் மீளப்பெறும் வகையில், ஐந்து வருடங்கள் வரை எங்கள் கொம்பியூட்டர்களில் பாதுகாத்து வைக்கப்படுகின்றன..

உங்கள் வண்ணக்கலர் வேலைகளுக்காக எங்கள் நவீன அச்சு இயந்திரங்கள்...



வெளிநாடுகளிலிருந்து அச்சுப்பதிப்பு வேலைகளை எம்மிடம் செய்துகொள்ளவிரும்புவாகள் தபாற்போதி மூலமும் பெறலாம்!

Tél : 01 42 51 29 92

Fax. : 01. 42. 51. 35. 25

## சாளரம்

## ஐம்பெருங்காப்பியங்கள்:

### சீவகசிந்தாமணி:

ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றாகத் திகழும் சீவகசிந்தாமணி சீவகனின் வரலாற்றை விளக்குவதுடன், ஒரு சமண சமயக் காவியமாகவும் விளங்குகிறது. இதனை இயற்றிய ஆசிரியர் திருத்தக்கதேவர் என்னும் சமண முனிவராவார். காப்பியங்கள் ஐந்தினுள் முந்தியதாக இக் காப்பியம் கருதப்படுகிறது. இந்நூல் 'சீவகன்'என்னும் ஓர் அரசிளங்குமரன் பிறந்து வளர்ந்து வீடுபேறு எய்திய வரலாற்று நிகழ்ச்சியினை வரன்முறையாகக் கூறுகிறது. இந்நூல் 'மூவா முதலா உலகம் ஒரு மூன்றும் ஏத்த' என்னும் கடவுள் வாழ்த்தினோடு தொடங்குகிறது. முன்னர்க் கடவுள் வாழ்த்தும் அடுத்துக் கதையைத் தொகுத்துக்கூறும் பதிகத்தினையும் பெற்று நாமகள் இலம்பகம் கோவிந்தையார் இலம்பகம், காந்தருவதத்தையார் இலம்பகம், குணமாலையார் இலம்பகம், பதுமையாரிலம்பகம், கேமசரியார் இலம்பகம் கனகமாலையாரிலம்பகம், விமலையாரிலம்பகம், சுரமஞ்சரியார் இலம்பகம், மண்மகள் இலம்பகம், பூமகள் இலம்பகம், இலக்கணையார் இலம்பகம், முத்தியிலம்பகம் ஆகிய பதின்மூன்று இலம்பகப் பிரிவுகளைத் தன்னகத்தே பெற்று ஒளிர்கிறது. சமண சமயச் சான்றோர்கள் 'சத்திர சூடாமணி' என்னும் நூலே இதற்கு முதல்நூல் என்று கூறுகின்றனர். 'சிந்தாமணிமாலை' என்ற பெயரில் தமிழில் ஒரு நூல் நிலவுகிறது. அந்நூல் போற்றுதற்குரிய நல்ல தமிழ் நடையில் அமையவில்லை. அந்நூலின் பிரிவுகள் 'இலம்பகம்' என்ற பெயரால் அமைந்து சிலம்பு மணிமேகலையின் காதையினோடு ஒத்து விளங்குகின்றன. இக்காப்பியம் 3145 விருத்தப்பாக்களால் ஆனது. அவற்றுள் 2700 செய்யுட்களே சமண சமயப் புலவராகிய திருத்தக்கதேவர் இயற்றியது எனப்படும், மற்றவையெல்லாம் பிறரால் செய்யப்பட்டுச் சேர்க்கப்பட்டன என்பதும் கூறப்படுகின்றன. இக்கூற்று 'மூந்நீர் வலம்புரி' என்னும் செய்யுட்கு உரை வகுக்குங்கால், நச்சினார்க்கினியரால் உறுதி செய்யப்படுகிறது.

இந்நூல் விருத்தப்பாக்களால் சிறந்த சொல் நயம் பொருள்நயம் மிக்க கவிதைகளால் ஆக்கப் பெற்றது. திருத்தக்கதேவர் காலம் கி.பி. 9—ம் நூற்றாண்டு என்று அறிஞர் கூறுகின்றனர். இக் காவியத்தில் உள்ள அணிநலம் சொல்லாட்சி கவிதையமைப்பு, பொருளாட்சி முதலியன இவருக்குப் பின்னர்த் தோன்றிய கவிஞர்களால் தத்தம் நூல்களில் எடுத்தாளப்பட்டுள்ளமை இந்நூலுக்குப் பெருமைகூட்டும் செய்தியாகும். 'விருத்தம் என்னும் ஒண்பாவில் உயர் கம்பன்'என்று பாராட்டப்பட்ட கவிச்சக்கரவர்த்தி கம்பரே இச் சிந்தாமணியினை அடியொற்றிப் பாடித் தம் காவியத்தைச் சிறக்கச் செய்தார் என்று புலவர்கள் கூறுவர். 'சிந்தாமணி அமுதில் ஓர் அகப்பை கம்பர் முகந்து கொண்டார்' என்ற முதுமொழியும் இதனால் எழுந்தது.

சீவக சிந்தாமணி இயற்றிய திருத்தக்க தேவர் சமணத் துறவியாக விளங்கியதால் அவருக்கு இன்பியல் சுவையினை அடிப்படையாக வைத்து நூல் எழுத இயலாது எனவும், துறவியர் நிலைமையினையும், துறக்க இன்பத்தினையும் மட்டுமே பாடும் ஆற்றல் உடையவர் எனவுங்கூறிப் புலவர்கள் ஒருசமயம் இகழ்ந்தபோது தம்மால் இத்தகு அகத்துறை அடிப்படையில் காமச் சுவை கலந்த காப்பியம் பாடமுடியும் எனத் தம் திறமையினைப் விளக்கிக்காட்ட இச் சீவக சிந்தாமணியினைப் பாடிக் காட்டினார் என்று கூறுவார்கள். இந்நூலில் சீவக மன்னன் காந்தருவதத்தையார் முதலாகிய எண்மரை மணந்ததாலும் அம்மண நிகழ்ச்சிகளை விளக்கிக் கூறுவதாலும் இந்நூல் 'மணநூல்' என்ற பெயரையும் பெற்றுள்ளது. தம்மால் இத்தகைய அகப்பொருட்சுவை தோன்றும் காவியம் இயற்றிக் காட்ட இயலும் எனச் சுட்டி அத்தகைய காவியம் இயற்றத் தம் ஆசிரியர்பால் திருத்தக்கதேவர் அனுமதி வேண்டியபோது, அவ்வமயம் அவண் ஓடிய நரியினைச் சுட்டிக்காட்டிப் 'பாடுக' என ஆசான் பணிக்க அதனையே பாடு பொருளாக அமைத்து யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை பற்றி அழகாக 'நரிவிருத்தம்' என்ற பெயருடன் நூல் ஒன்றினை இயற்றித் தம் ஆசானிடம் அளித்தாராம். இவரது கவியியற்றும் பேராற்றலை உணர்ந்த ஆசிரியர் பின்னரே இந்நூலை பாட அனுமதித்தார் என்றும் கூறுகிற செவி வழிச் செய்தி ஆய்தற்குரியதாகும்.

இவ்வாறு அகச்சுவை கலந்த இந்நூலை இயற்றிப் பாண்டியன் அவையில் அரங்கேற்றியபோது அத்துறவியின் துறவு வாழ்வில் மன்னவர் ஐயங்கொண்டார் எனவும், தாம் இளந் துறவியே—மாசற்றவர் எனப் பழுக்கக் காய்ச்சிய இரும்புத் துண்டைத் தம் கரத்தால் பற்றி எட்டுணையும் இடருறாது இருந்து தம் தூய துறவுத் தன்மையினை விளக்கிக் காட்டினார் எனவும் கூறப்படும் செய்தி தமிழகத்தே செவிவழிச் செய்தியாக உலவுகிறது.

> அவ்வமயம் அவண் ஓடிய நரியினைச் சுட்டிக்காட்டிப் பாடுக என ஆசான் பணிக்க அதனையே பாடு பொருளாக அமைத்து யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை பற்றி அழகாக 'நரிவிருத்தம்' என்ற பெயருடன் நூல் ஒன்றினை இயற்றித் தம் ஆசானிடம் அளித்தாராம் திருத்தக்க தேவர்.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

முடிவாக இக்காப்பியம் 'தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும் தீரா இடும்பை தரும்' என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க அரசன் அமைச்சர்களை நன்கு ஆராயாது தேர்ந்தெடுக்கக் கூடாதெனவும், பெண் வழிச் சேரல் பேரிடர் தரும் எனவும், பகை வெல்லக் கருதுவோர் ஏற்ற காலமும் இடமும் கருதிச் செயலாற்ற வேண்டுமெனவும், இரு முதுகுரவர்களாகிய தாய், தந்தையர் சொற்கட்குத் தனையன் ஏற்றம் கொடுத்துப் பணிந்து ஒழுகவேண்டும் எனவும், பிற உயிர்படும் இன்னலை உடன் சென்று களைதல் வேண்டுமெனவும், நன்றி மறப்பது நன்றல்ல எனவும், இன்ப துன்பக் கூறுபாடுகளை ஒக்க எண்ணும் உரன் பெற வேண்டும் எனவும் விளங்கும் சிறந்த அறங்களை விளக்கமாக உரைக்கும் அறப் பெட்டகமாக இந்நூல் விளங்குகிறது.

**கதை நிகழ்ச்சி:** சச்சந்தன் என்னும் மன்னன் தன் நாட்டைச் செம்மையாக ஆட்சி செய்து வருங்கால் 'விசயை' எனனும் மங்கை நல்லாளை மணந்து, இல்லற வாழ்வில் ஈடுபடத் தலைப்பட்டான். இன்பத்துறையில் எளியனாயும் பெண் வழிச் சேரல் என்ற குறையுடையவனாயும் வாழத் தலைப்பட்டு தன் ஆட்சியினைக் கவனிக்காது அந்தப்புரமே கதி என எண்ணிக் கிடந்து விட்டான். மடவாரின் மையலில் கழிகாதல் கொண்டு அந்தப்புரத்தில் ஆழ்ந்து கிடந்த மன்னன் சச்சந்தன் தேர்ந்து தெளியாது, வஞ்சக உருவே வடிவாய்க்கொண்ட கட்டியங்காரனிடம் தன் ஆட்சிப் பொறுப்பினை ஒப்படைத்தான். அவனை அரசன் தேராது தெளிந்தான். பல நல்லமைச்சர்களின் அறிவுரையினையும் ஏற்காது அச் செயல் மேற்கொண்ட சச்சந்தன் கட்டியங்காரனால் ஒரு நாள் வன்முறைப் போருக்கு வலிய அழைக்கப்பட்டான். அந்தப்புரத்தில் அடைக்கலமுற்றிருந்த மன்னன் வெகுண்டெழுந்து யானைக் கூட்டத்தே பாய்ந்த சிங்க ஏறு போல் சீற்றங் கொண்டு போரிட்டுப் பலரை விண்ணகம் அனுப்பி இறுதியில் தன் வாள் இற்றுவிழும் சமயம் எதிரியின் வாளுக்கு இலக்காகித் துறக்கம் புகுந்தான். அவ்வமயம் கருக்கொண்டிருந்த 'விசயை' மயில் பொறியின் மூலம் வான் வெளியிற் சென்று பின் தன கணவன் இறந்துபட்ட செய்தியறிந்து வருந்தி அயர்ந்தமையால் அம்மயில் பொறியின் மூலமாகவே புறங்காட்டு அடைகரையில் இறங்கினாள். அவ்வமையம் வயவு நோயினால் துன்புற்றுச் 'சீவகன்' என்ற ஆண்மகவை ஈன்றாள். அச்சீவகன் நன்முறையில் சிறந்து வளர்ந்து 'அச்சணந்தி' என்னும் நல்லாசிரியரை எடுத்துப் பல கலைகளையும் போர் முறைகளையும் கற்றுச் சிறந்த அடலேறாகத் திகழ்ந்தான். பல செயற்கரும் வீரச் செயல்களை ஆற்றி மக்கள் நன்மதிப்பினைப் பெற்று தலைவனாகத் திகழ்ந்தான். பின் காந்தருவதத்தையார் முதல் எண்மரை மணந்து பின் காலமும் இடமும் கருதிக்கட்டியங்காரனை யும் கொன்று, இழந்த அரசினை மீண்டும் பெற்று இறுதியில் மணமகளை மணந்து துறக்க வின்பம் எய்தினான் என்ற வரலாற்று நிகழ்ச்சிகளை விளக்கிக் காட்டும் அரிய காப்பியமே சீவக சிந்தாமணியாகும்.

## நாற்று

### இளம் ஆக்கங்கள்

## சிந்தை இரங்கினார்க்கு பாலன் பிறந்தநாள்

இன்று,  
உலகரட்சகர்  
பாலனாய் புவியில்  
தோற்றம் தந்த நாள்.  
துன்பப்பட்டவரின்  
பாவங்களை கழுவிய தேவனை  
நன்றி உணர்வோடு தழுவி  
உவகை கொண்டாடும் திருநாள்!  
பாலன் யேசு—  
ஆதரவற்றவரின் மேய்ப்பர்—  
ஐந்து அப்பமும் இரு மீனும்...  
ஐயாயிரம் பேரின் வயிற்றை நிறைத்தவர்—  
மீண்டும் பிறந்து வருவார்;  
'உங்களில் தூய்மையானவர்  
என் பின்னே வாருங்கள்' என்பார்...  
சகோதரர் போன்றவர்  
பசியின் கொடுமையில் துவள்தல்கண்டு  
குருதி வழிய தாய்மண்ணில் புரள்தல் கண்டு  
சிந்தை இரங்கினார் யாரோ—  
அத்தனை பேரும் மேய்ப்பரின் பின்னே  
உவகையால் செல்வர்...  
அத்தனை பேர்க்கும்  
உலக ரட்சகர்  
பாலனாய் மீண்டும் தோன்றுவார்!  
அத்தனை பேர்க்குமே  
இன்றைய நாளில்  
மீண்டும் மீண்டும்  
பாலன் பிறக்கிறார்!!

- கேமராஜ்,  
இலண்டன்.

★ ★ ★

## நான் அழமாட்டேன்!

மேல் நாட்டில் கிழக்கு திசை  
பார்த்து மவுனமாய் அழுகிறேன்  
விடிகாலை நேரத்து கிழ் வானச் சிவப்புக்கு  
காரணம் என்ன? மவுனமாய் அழுகின்றேன்!

இனி வரும் ஈழ விடுதலைக்காக  
ஈழ மக்கள் சிந்தும் செங்குருதியா?  
தெரிந்தென்ன! ஈழத்திலும் தோன்றும்  
ஆதவனைப் பார்த்து மவுனமாய் அழுகின்றேன்!

இதுதான் சொர்க்கம் என எண்ணி  
மதுவைச் சூப்பும் மேல்நாடு - அதில்  
நம் நாட்டு இராஜாக்களுங்கூட - மண்ணுக்காய்  
மானத்திற்காய் அழுவதென நினைத்து சூப்பி  
சூப்பும் வீரத்தமிழன் அங்கே,  
மவுனமாய் அழுகிறேன்!

இனிவரும் காலத்தில் நஞ்சுண்ட கண்டனின்  
கதை நமக்கு ஏன்? இனி நான் அழமாட்டேன்!  
இனி வரும் சுதந்திரத்தை எண்ணி நானும்  
துணைநிற்பேன் இனி நான் அழமாட்டேன்..!

ஆர். சின்னக்கிளி (அட்டுவன்)  
ஜேர்மனி

# 10வது ஆண்டு நினைவஞ்சலி

## தங்கராஜா விக்னேஸ்வரராஜ் (சங்கர்)

*(உடுவில் கிழக்கு, உடுவில்)*



தாய் மடியில்: 10.08.1968

தாயகத்தின் மடியில்: 11.12.1987

*எங்கள் குடும்பத்து விடிவிளக்கே*
*தாயாகவே எங்கள் தாய்மண்ணை நேசித்தாய்*
*தாயக விடுதலைக்கு உன்னை அர்ப்பணித்தாய்*
*அன்னிய நாட்டார் எம்மை ஆக்கிரமித்தபோதில்*
*உன்னுயிரை விதையாக்க களம் புகுந்தாய்*
*அடிமை வாழ்வைவிட மரணம் மேலென்றாய்*
*அடிமைத்தளை அறுக்க நீவிதையாகி*
*பத்தாண்டு கழிந்ததுவோ! நினைவுகள் மறந்திடுமோ*
*உன் லட்சியங்கள் நிறைவேற நீண்ட காலமில்லை*
*உனது நினைவுகள் நெஞ்சை விட்டு நீங்காது*

தகவல்: கணேஷ்
தொலைபேசி: 0143485530

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



*அன்பின் இலக்கணமாய், அமைதியின் உறைவிடமாய்*
*குடும்பத்தின் குலவிளக்காய் பாசமும் பரிவும் காட்டி*
*வளர்ந்து நல்வழி காட்டிய எமது அன்புத் தந்தையே*
*எமது அன்புத் தாயை பிரிந்து ஓராண்டுத்துயர் ஆறாது*
*தவித்துக்கொண்டு இருக்கும்போது அன்புத் தெய்வமே*
*உன்னையும் பிரிந்து தவிக்கின்றோம் மண்ணுலகிலும்*
*ஒன்றாக இணைபிரியாது இருந்தீர்கள். அதேபோல்*
*விண்ணுலகிலும் ஒன்றாகி இறையடி சேர்ந்தீர்கள்.*
*எங்கள் அன்புத் தெய்வங்களின் ஆத்மா சாந்தியடைய*
*இறையருள் வேண்டுகிறோம்*

09.11.1997 அன்று வட்டுக்கோட்டையில் நடைபெற்ற எங்கள் அன்புத் தெய்வத்தின் மரணச் சடங்கில் கலந்து எமது சகோதரிக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் எமது துயரத்தில் நேரிலும் தொலைபேசி மூலமும் ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் எல்லா வகையிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது உள்ளார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்

அன்னார் காலஞ்சென்ற மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும், காலஞ் சென்ற தவச் செல்வன், விக்கினேஸ்வரி, ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியத்தின் அன்புச் சகோதரரும் ஆவார்.

**ஆறாத்துயருறும் பிள்ளைகள்**

புவனேஸ்வரசுந்தரம் (மாஸ்ரர் ஜேர்மனி), ஞானேஸ்வரன் (ஜேர்மனி), தவயோகேஸ்வரி (ஜேர்மனி), தவஞானேஸ்வரி (இலண்டன்), பராசத்தி (கொழும்பு) திலகறஞ்சினி (வட்டுக்கோட்டை)

**மருமக்கள்:**

திசவீரசிங்கம் (ஜேர்மனி), சிவரூபன் (ஜேர்மனி), குகேந்திரராஜா (இலண்டன்) தரணீகரனின் அன்புப் பேரனும், சுந்தரலிங்கம் (வட்டுக்கோட்டை) பொன்மணி (கனடா) ஆகியோரின் சகோதரரும் ஆவார்

## திரு. மார்க்கண்டு சபாபதிப்பிள்ளை

(முன்னாள் நீர்ப்பாசன திணைக்கள மேற்பார்வையாளர்)

**மண்ணுலகம்:** 27.04.1923

**விண்ணுலகம்:** 08.11.1997

**தகவல் தருபவர்:-** மகன் புவனேஸ்வர சுந்தரம் (மாஸ்ரர் - ஜேர்மனி)




## இந்தியாவின் தகவல் தொழில்நுட்ப தலைமை டாட்டாவின் TCS

இது இந்தியாவின் எதிர்காலத்திற்கான நிறுவனம் ஆகும். இந் நிறுவனத்தின் வருடாந்த வருவாய் 7.2 பில்லியன் ரூபாய்கள். நிறுவனத்தின் புதிய முயற்சி 400 மில்லியன் டொலர்கள் பெறுமதியான '2000 வருடத்திற்கான முறை' (Year 2000 System). இது 750 வித்தியாசமான குறியீட்டு அடையாளங்களை கையாளும் PC க்கான திட்டமாகும்.

உலகின் மக்கள் தொகையுடனான ஒப்பீட்டு விகிதத்தில் குறைந்த அளவு கணினி பாவனையை கொண்டுள்ள இந்தியாவில் முதல்தர கணினி நிகழ்ச்சி தயாரிப்பு நிறுவனமான இவ் டாட்டாவின் TCS நிறுவனம், தன் உள்நாட்டு சந்தை பெருக்கத்திற்காக அரசு மற்றும் பாடசாலைகளுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றது. மேலும் மைக்ரோ சொப்ட் போன்ற சர்வதேச நிறுவனங்களின் துணையுடன் நவீன நிகழ்ச்சி திட்டங்களை கணினிகளுக்கு தயாரிக்கும் TCS, எதிர்காலத்தில் உலகின் முதல்தர கணினி நிகழ்ச்சி தயாரிப்பு நிறுவனமாக தன் நிறுவனத்தை வடிவமைக்கும் திட்டங்களைக் கொண்டதாகும்.

❀ ❀ ❀

## தென்கொரியாவின் மலிவு விற்பனை

உலக நாணயமாற்று சந்தையினால் பழிவாங்கப்படும் தென்கொரிய பொருளாதாரம், பயத்துடனும், பரபரப்புடனும் இயங்குகின்றது. தொடர்ச்சியான சொந்த நாணய மதிப்பிழப்பும், எதிர்காலம் பற்றிய பயமும் தென்கொரிய பல்பொருள் அங்காடிகளை மலிவு விற்பனை போட்டிக்கு அழைத்துள்ளது.



தென்கொரியாவில் உள்ள வெளிநாட்டவர்கள் தமது மதிப்பு கூடிய நாணயங்களை பாவித்து உள்ளூர் மக்களுடன் போட்டிபோட்டு பொருட்களை கொள்வனவு செய்து வருகின்றனர்.

50% மதிப்பிழப்பு தென்கொரியாவை நம்பிக்கையற்ற பொருளாதாரம் ஆக்கியுள்ளதுடன், விலைவாசியை எதிர்வரும் காலத்தில் மலையளவு உச்சிக்கு கொண்டுசெல்லும். இதேவேளை இன்று புதிதாகத் தேர்வு செய்யப்பட்ட தென்கொரிய ஜனாதிபதி தொழிற்சங்கங்களுக்கு வளைந்து கொடுப்பார் என்ற கருத்து பிறிதொரு நாணய அச்சுறுத்தலை விடுத்துள்ளது.

❀ ❀ ❀

## இந்திய முதலாளிகளின் குதிரை வேகம்

| தொழில் நிறுவனங்கள் | 1969 | 1977 | இன்றைய மதிப்பு |
|---|---|---|---|
| | (சொத்து மதிப்பு கோடியில்) | | |
| 1. டாட்டா குருப் | 506 | 739 | 5559 |
| 2. பிர்லா குருப் | 418 | 729 | 5564 |
| 3. மபட்லால் | 163 | 234 | 1131 |
| 4. ஜே.கே.குருப் | 081 | 136 | 1566 |
| 5. தாபர் | 095 | 168 | 1317 |
| 6. பங்கூர் | 03 | 164 | 0651 |
| 7. அய்.சி.அய் | 125 | 161 | 0537 |
| 8. சிறீராம் | 110 | 144 | 0685 |
| 9. ஏ.சி.சி | 122 | 141 | 0759 |
| 10. வால்சந்த் | 095 | 122 | 0592 |
| 11. லார்சன் & டுப்ரோ | 055 | 199 | 0931 |
| 12. கிர்லோஸ்கா | 057 | 113 | 0517 |
| 13. அய்.டி.சி | 070 | 100 | 0567 |
| 14. டி.வி.எஸ் | 038 | 094 | 0767 |
| 15. ரிலையன்ஸ் | - | - | 2033 |
| 16. ஜே.கே. சிங்கானியா | - | - | 1566 |
| 17. யுனைடட் புருவரீஸ் | - | - | 0488 |
| 18. எம்.ஏ.சிதம்பரம் | - | - | 0856 |
| 19. பஜாஜ் | - | - | 0954 |
| 20. இந்துஸ்தான் லீவர் | - | - | 0775 |

## யூரோவை வரவேற்க விடைபெறும் பிராங்குகளும் மார்க்குகளும்

ஐரோப்பாவின் புதிய நாணயம் ஒருவருட காலத்தில் புழக்கத்தில் வரவுள்ளதால் அதற்கான ஆயத்தங்களை ஐரோப்பிய வர்த்தக பொருளாதார சமூகம் செய்து வருகின்றது.

உலக மூலதன வரலாற்றின் புதுமையாக இடம்பெற உள்ள இந் நாணய மாற்றீடு சுமார் 80 பில்லியன் டொலர்களையாவது இதற்கான செலவினங்களாக ஐரோப்பிய பொருளாதாரத்திற்கு கொடுக்கவுள்ளது. இவற்றில் 50% மேற்பட்ட செலவினம் கணினி சேவைக்கு ஒதுக்கப்படுகின்றது.

இதேவேளை உலகம் பூராவும் உள்ள வங்கிகளும் வர்த்தக சமூகங்களும் தமது கணினிகளின் கணிப்புக்களை மாற்றி அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன.

புதிய யூரோ நாணயம் வங்கியாளர்கள் மத்தியில் அவநம்பிக்கையையும் பீதியையும் ஏற்படுத்தியிருக்கின்றது. பலம் வாய்ந்த ஐரோப்பிய பொருளாதார சமூகத்தின் பின்பலத்தை யூரோ கொண்டுள்ளது. டொலரின் சர்வதேச மதிப்பீட்டை பாவித்து யூரோவிற்கான தளத்தை உருவாக்கும் என கருதப்படுகிறது.

❀ ❀ ❀

## உடன்பாடு III
## உலக நிதி உடன்பாடு
### - அமெரிக்கா வெற்றி முழக்கம் -

102 நாடுகள் ஒன்றுகூடி உலகின் புதிய நிதி உடன்பாடு ஒன்றை 12.12.97 அதிகாலை மேற்கொண்டுள்ளனர். உலக வர்த்தக நிறுவனத்தின் (WTO) விதிகளுக்கு அமைய 132 நாடுகளை கட்டுப்படுத்தும் இப் புதிய உடன்பாடு, உலக முதலீடுகளுக்கான தடைகளை நீக்கி தேசங்களின் உள்நாட்டு பொருளாதார விதிகளை செல்லுபடியற்றதாக்க உள்ளது. 10 ரில்லியன் டொலர்கள் புழக்கத்தில் உள்ள உலக மூலதன சான்றிதழ் சந்தையையும், 40 ரில்லியன் டொலர்கள் புழக்கத்தில் உள்ள, உலக வங்கிகளின் கையிருப்பையும், 2 ரில்லியன் டொலர்கள் புழக்கத்தில் உள்ள உலக காப்புறுதி சான்றிதழ்களையும் தேசங்களின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கும் இவ் உடன்பாட்டை அமெரிக்கா ஆரவாரமாக வரவேற்றுள்ளது.

ஆயினும் இந்தியா போன்ற நாடுகள் இவ் உடன்பாட்டினால் அச்சுறுத்தப்பட்டுள்ளன. இந்தியா தன் உள்நாட்டு நிதி சட்டங்களை சர்வதேச உடன்பாடுகள் ஆட்சிசெலுத்த நடைவிதித்து வந்துள்ளது. இவ் WTO உடன்பாடு ஆசியாவை தற்போது பாதித்துள்ள முதலீட்டு வெளிச்செல்லுகையைக் கட்டுப்படுத்தி, உலக உடன்பாடு கொடுத்த தைரியத்தில் முதலீட்டாளர்களை மீள ஆசியாவினுள் மீட்டுக் கொண்டு வரும் என மேற்கத்தேய பொருளியல் நிபுணர்களால் நம்பப்படுகின்றது.

உடன்பாடு கடந்த 12.12.97 இரவு 12.00 மணிக்கு முடிவு பெற்றிருக்க வேண்டும். ஆயினும் மலேசியா தன் காப்புறுதி துறையில் வெளிநாட்டு நிறுவனங்களின் ஆதிக்கத்தை எதிர்த்தால் இது 2 மணி நேரம் காலதாமதமாகியது. அமெரிக்கா தன் பிரதான காப்புறுதி பல்தேசிய கம்பனிக்காக மலேசியாவுடன் மோதி தன் முதன்மை ஸ்தானத்தை பாதுகாத்தது.

இவ் உடன்பாடு 1997 இல் கைச்சாத்திடப்பட்ட மூன்றாவது பெரும் முதலாளித்துவ சந்தைக்கான உடன்பாடாகும்.

தொலை தொடர்பு உடன்பாடு, உலக தகவல் தொழில் நுட்ப தடைகளை நீக்குவதற்கான உடன்பாடு என்பனவே பிற இரு உடன்பாடுகள் ஆகும்.

❀ ❀ ❀

## MTV 200 மில்லியன் டொலர்கள் நடனம்

MTV இன்று உலகின் இளந்தலைமுறைக்கு சொந்தமான ஊடகமாக விபரிக்கப்படுகின்றது. இசை நடனம் மற்றும் இளையோர் தொடர்பான விபரங்களை பாவித்து உலக சமூகத்தின் வீடுகளும் பாயும் MTV ஒளிபரப்பு சேவை ஆசியா, ஐரோப்பா, அமெரிக்கா கண்டம் பூராவும் அந்தந்தப் பிரதேச மணம் வீசும் (?) விதத்தில் ஒளிபரப்பப்படுகின்றது.

200 மில்லியன் டொலர்கள் நிகர இலாபத்துடன் இயங்கும் இச் சேவை பலமான விளம்பர ஊடகமாக சர்வதேச வர்த்தக சக்திகளால் கணிக்கப்படுகின்றது.

எனினும் இவ்வாண்டு MTV இன் வளர்ச்சி எதிர்பார்த்த அளவு பலமில்லாத சூழ்நிலையில் இதன் எதிர்காலம் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. ஏனெனில் 12 பில்லியன் டொலர்கள் தொலைக்காட்சி துறையில் ஏற்பட்டுள்ள போட்டி, MTV இன் இலாப வீதத்தைக் குறைத்ததுடன் பார்வையாளர்களை பிரித்தும் வருகின்றது.

❀ ❀ ❀

## நடமாடும் ON - LINE தொடர்புகள்

நடமாடும் தொலைபேசியூடாக (Mobile Phone) உலகின் தகவல் தொழில் நுட்ப ஆற்றை நுகரலாமா? இது உலகின் தலைசிறந்த நடமாடல் தொலைபேசி உற்பத்தியாளர்களான நொக்கியா மற்றும் எரிக்சன் (ERICSSON) நிறுவனங்களை சவாலுக்கு அழைத்த கேள்வியாகும்.

ஈற்றில் மனிதன் தன் ஒவ்வொரு கணமும் தகவல் ஆற்றை (On - line services) தொடர்பு கொள்ள முடியும் என்ற தனது வாதத்தை ஐரோப்பிய சமூகத்தின் அங்கீகாரத்துடன் நிரூபிக்க இவை தயாராகி விட்டன.

இரண்டாயிரம் ஆண்டின் இறுதிப் பகுதியில் யப்பானின் கைத்தொலைபேசியூடாக உலகின் பிரதான தகவற் பரிமாற்ற துறையான On - line services உடன் தொடர்புகொள்ளத்தக்க தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்துகிறது.

40 பில்லியன் டொலர்கள் பெறுமதியான கைத்தொலைபேசிச் சந்தையை மேலும் விஸ்தரிக்க உள்ளஇப்புதிய முயற்சி, எதிர்காலத்தில் மனிதனின் தேவைகளைப் புரிந்துகொண்ட முயற்சியென பாராட்டப்படுகின்றது.

## நாணயமாற்று விகிதம்

| | $ | £ | DM | F Fr | S. Fr |
|---|---|---|---|---|---|
| பிராங்போட் | 1.81 | 3.03 | — | 0.30 | 1.26 |
| சூரிச் | 1.46 | 2.43 | 0.82 | 0.25 | — |
| பாரிஸ் | 6.07 | 10.07 | 3.41 | — | 4.23 |
| லண்டன் | 0.61 | — | 0.34 | 0.10 | 0.43 |
| நியூயோர்க் | — | 1.70 | 0.57 | 0.17 | 0.71 |
| பம்பாய் | 40.04 | 66.76 | 22.53 | 6.73 | 27.89 |
| கொழும்பு | 62.65 | 104.47 | 35.26 | 10.52 | 43.64 |


## ஈழமுரசு ஜேர்மனி வாசகர் வட்டத்திற்கான அழைப்பு

ஈழமுரசுக் குடும்பம் தனது வாசகர்களுக்கான அமைப்பினை ஜேர்மனி நாட்டில் உருவாக்குவதற்கு முடிவு செய்துள்ளதென்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறது.

*ஈழமுரசின் வாசகர்கள் தங்களுக்கிடையில் ஒரு தொடர்பாடலை ஏற்படுத்திக் கொள்வதற்கும், ஈழமுரசின் வளர்ச்சியில் பங்கெடுப்பதற்குமாகவே இந்த வாசகர் வட்டம் அமைக்கப்படுகிறது. இந்த வாசகர் வட்டத்தில் பங்கெடுத்துக் கொள்ளுமாறு ஆர்வலர்கள் அழைக்கப்படுகின்றீர்கள்.*

முழுப்பெயர்: ..............................
முகவரி: ..............................
..............................
தொலைபேசி: ..............................

எழுத்துத்துறை, இலக்கியம் போன்றவற்றில் ஆர்வமிருப்பின் அதுபற்றிய குறிப்புகளும் ஈழமுரசின் வளர்ச்சிக்கான உங்கள் ஆலோசனை குறிப்புகளும் வரவேற்கப்படுகின்றன.

அலுவலக உபயோகத்திற்கு வாசகர் எண்..........
ஈழமுரசு சந்தாதாரராயின் சந்தா எண் G- .......

நா. கதிர்காமநாதன்
Branden Burger Str-13
40880 Ratingen.
Tel: 02102 475633

எமது ஏழ்மை நிறுவனத்தை 97இல் மிகப் பெரிய அளவில் கௌரவப்படுத்திய அன்பு ரசிகப் பெருமக்களுக்கு

# கிறிஸ்மஸ், புதுவருட, பொங்கல் வாழ்த்துக்கள்"

RAMIY RECORDS

3 வகை CDகளில்

"புரியாத புதிர்" முதல் "பிஸ்தா" வரை வெற்றிகளைக் குவித்த சினிமாப் புகழின் சாதனையின் உச்சம் கே.எஸ்.ரவிக்குமார் டைரக்ஷனில்

இனிக்கும் 8 பாடல்கள்
இசை: மரகதமணி

## கொண்டாட்டம்

அர்ஜூன்-மந்தாரா
அர்ஜூன்-சிம்ரான்

கொண்டாட்டம்... இது இளைஞர்களின் தேரோட்டம்... இப் பாடல்களைப் பற்றிக் கொண்டதில் ரமிக்கு சந்தோசம்

RAMIY RECORDS

'தொட்டால் சிணுங்கி" என்ற படத்தில் தொட்டால் பற்றிக் கொள்ளும் பாடல்களைத் தந்த கே.எஸ்.அதியமானின் மற்றுமொரு வெற்றிப் படைப்பு

நெஞ்சைத் தொடும் 7 பாடல்கள்
இசை: ஸ்வரன்ராஜ்

## சொர்ணமுகி

பார்த்திபன்
தேவயானி
பிரகாஸ்ராஜ்

இத்துடன் இரு படங்கள். என் காதலே - இசை: அம்சலேகா, என் உயிரினும் மேலாக - இசை: தேவா

RAMIY RECORDS

இவர் கதை முடிந்தது... இனி வரமாட்டார்... என்பவர்களின் முகத்தில் அறைந்தாற்போல் காதல் ரோஜாவே, காதலுக்கு மரியாதை என ஹிட் பாடல்களைத் தந்த ராஜா... இளையராஜாவின்

உள்ளத்தைத் தாலாட்டும் 10 பாடல்கள்
இசை: இளையராஜா

## வீரத்தாலாட்டு

பொற்காலம்
முரளி, ராஜ்கிரண்
சுபலட்சுமி, குஷ்பு

இத்துடன் தென்றலே என்னைத் தீண்டு

RAMIY RECORDS

அவள் வருவாளா... உன்னைப் பார்த்ததும் வேர்க்குதடி என்ற பாடல்களால் இளைஞர்களின் இதயங்களை வருடிச் சென்ற தேவாவின் அதிரடி இசையில்

இனிய 6 பாடல்கள்
இசை: தேவா

## இனியவள்

பிரபு
சுபலட்சுமி
மந்த்ரா

ஒரு வாலிப விருதாக இனியவள் பண்டிகைக் காலங்களில் விருந்து படைக்க வருகிறாள்

RAMIY RECORDS

ஞாபகம் இருக்கின்றதா... என்னை உனக்கு ஞாபகம் இருக்கின்றதா...
மழையில் நனைந்த சிற்பச் சிலையே... என்று கரைந்திடும் ஹரிஹரனின் பாடலுடன்...

நேருக்கு நேர்
காதலே நிம்மதி
சூர்யா
சிம்ரான்

## சந்திப்போமா

இசை: "தேனிசைத் தென்றல் "தேவா, டைரக்ஷன்: எங்கள் இந்திரகுமார்

### எமது நத்தார் புதுவருட சிறப்பு வெளியீடுகள்:

மனதில் தீ மூட்டும் இவர் பாட்டு
ஹரிகரன்

இவர் ராகம் புது ராகம் - உன்னி கிருஷ்ணன்

சேரன் பாண்டியன், புத்தம் புதுப் பயணம்

காதலுக்கு மரியாதை, தினந்தோறும்
சூரியவம்சம், காதல் ரோஜாவே

பெரும் புள்ளி, புரியாத புதிர்

கோழைக்குக் காதலென்ன

### "உன்னை அறிந்து உலகத்தில் போராடு"

*எங்கள் அகதி நிறுவனத்தை அதிகாரப்படுத்திய ரசிக உள்ளங்களுக்கு மீண்டும் இனிய வாழ்த்துக்கள் - ரமி*

**RAMIY Records - Switzerland**

# றொனால்டோவுக்கு ஐரோப்பிய விருது



உலகின் சிறந்த உதைபந்தாட்ட வீரர்களில் ஒருவராக தெரிவுசெய்யப்பட்ட பிரேசில் வீரரான றொனால்டோ, ஐரோப்பாவின் சிறந்த உதைபந்தாட்ட வீரர் என்ற பட்டத்தையும் தற்போது பெற்றுள்ளார்.

ஸ்பானியாவின் 'பாசலோனா' உள்ளூர் அணிக்காக விளையாடிய இவர், தற்போது இத்தாலியின் 'இன்ரர் மிலான்' அணிக்கு விளையாடி வருகிறார்.

தென் அமெரிக்கர் ஒருவர் இவ் விருதைப் பெறுவது இதுவே முதல் தடவையாகும்.

# சார்ஜா கிண்ணத்தை இங்கிலாந்து வென்றது

11.12.97 ஆரம்பமாகி 19.12.97 முடிவுற்ற சார்ஜா கிண்ணத்துக்கான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட ஒரு நாள் கிரிக்கட் போட்டிகளில் இங்கிலாந்து உட்பட, முன்னாள் உலக சம்பியன்களான மேற்கிந்திய தீவுகள், இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நான்கு நாடுகள் கலந்துகொண்டன.

மேற்கிந்திய தீவுகள் அணிக்கும் இங்கிலாந்து அணிக்கும் இடையிலான இறுதிப்போட்டியில், முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி 50 ஓவர்களில் 7 விக்கட்டுக்களை இழப்பிற்கு 235 ஓட்டங்களைப் பெற்றது. வில்லியம்ஸ், சந்திரபோல் ஆகியோர் முறையே 55, 76 ஓட்டங்களை தமதணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர். தொடர்ந்து ஆடிய இங்கிலாந்து அணி 48.1 ஓவர்களில இலக்கை அடைந்து கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது.

ஸ்ருவேட் 51 ஓட்டங்களையும், ஆட்ட நாயகனாகத் தெரிவு செய்யப்பட, தோர்ப் ஆட்டமிழக்காமல் 66 ஓட்டங்களையும் பெற்றது குறிப்பிடத்தக்கது

# இந்திய கிரிக்கட் அணிக்கு புதிய ஆலோசகர்

தலைசிறந்த துடுப்பெடுத்தாட்ட வீரன் சச்சின் டெண்டுல்கர் தலைமை ஏற்றதிலிருந்து தோல்விமேல் தோல்வியைத் தழுவி வரும் இந்திய கிரிக்கட் அணியை வெற்றிக்கனி பறிக்கும் அணியாக மாற்றியமைப்பதற்காக, முன்னாள் அவுஸ்திரேலிய அணித் தலைவர் பொபி சிம்சன் அவர்கள் ஆலோசகராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

ஏற்கனவே அவுஸ்திரேலிய அணியின் வளர்ச்சியில் சிம்சனின் பங்கு முக்கியமானது குறிப்பிடத்தக்கது.

# பிரேசில் அணியின் மாபெரும் வெற்றி

உலக உதைபந்தாட்டச் சம்பியன் பிரேசில், ஆபிரிக்கா சம்பியன் தென்னாபிரிக்கா, உருகுவே, செக் குடியரசு, சவூதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம், அவுஸ்திரேலியா, மெக்சிகோ உட்பட்ட எட்டு நாடுகள் கலந்துகொண்ட உதைபந்தாட்ட கற்றுப்போட்டிகள் சவூதி அரேபியாவில் நடைபெற்றன.

அரையிறுதிப் போட்டிகளில், பிரேசில், செக் குடியரசை 2-0 என்ற கோல் கணக்கிலும், அவுஸதிரேலியா, உருகுவேயை 1-0 என்ற கோல் கணக்கிலும் வென்று இறுதிப்போட்டிக்குத் தெரிவாகின.



கடந்த 21.12.97 ஞாயிற்றுக்கிழமை பிரேசிலும் அவுஸ்திரேலியாவும் இறுதிப்போட்டியில் மோதிக்கொண்டன.

உலகின் தற்போதைய சிறந்த உதைபந்தாட்ட வீரனான பிரேசிலைச் சேர்ந்த றொனோல்டோவும், கடந்த உலகக் கிண்ணப் போட்டிகளின் நாயகனாகத் தெரிவுசெய்யப்பட்ட பிரேசிலைச் சேர்ந்த றோமாரியோவும் மிக மிக சிறப்பாக ஆடி தலா 3 கோல்களைப் போட்டனர்.

பிரேசில் அணி 6-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் செக் குடியரசு உருகுவேயை 1-0 என்ற கணக்கில் வென்றது.

# கிரிக்கட்

## நியூசிலாந்து

இதுவரை 256 டெஸ்ட் போட்டிகளில் கலந்துகொண்ட நியூசிலாந்து 36 போட்டிகளில் மட்டுமே வெற்றியடைந்துள்ளது. அதே வேளை 284 மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட ஒருநாள் ஆட்டங்களில் கலந்துகொண்ட நியூசிலாந்து அணி 117 போட்டிகளில் வெற்றியைப் பெற்றுள்ளது.

தற்போது அணியின் தலைவராக இருக்கும் ஸ்ரீபன் ஃபிளெமிங் ஒரு துடுப்பெடுத்தாட்ட வீரராவார். இவருடன் ஆரம்பத் துடுப்பெடுத்தாட்டக்காரர் யங், நாதன் அஸ்ரல், விக்கட் காப்பாளர் அடம் பரோர் அத்தி பூப்பது போல் எப்போதோ ஒருமுறை அதிக ஓட்டங்களை தமது அணிக்குப் பெற்றுக்கொடுப்பதும், ஹறிஸ், விற்றோரி போன்ற பந்துவீச்சாளர்களின் பந்துவீச்சும் சகலதுறை ஆட்டக்காரர் கிறேக் மக்மிலனின் இடையிடையேயான பிரகாசிப்பும் நியூசிலாந்து அணிக்கு நிலையான வெற்றியைக் கொடுக்கவில்லை.

தற்போதைய உலகக் கணிப்பீட்டில் மிகவும் பின்நிலையிலுள்ள உள்ள அணியாகவே இருந்து வருகிறது. முன்னர் நியூசிலாந்து அணியின் வெற்றியின் பின்னணியில் இருந்த சிறந்த துடுப்பெடுத்தாட்டக்காரரான மாட்டின் குறோ, மற்றும் சிறந்த பந்து வீச்சாளரான சேர் ரிச்சட் ஹட்லி ஆகியோரை காலம் மறந்துவிடவில்லை. நியூசிலாந்து அணியின் சார்பில் முறையே கூடிய ஓட்டங்களையும், கூடிய விக்கட்டுக்களையும் டெஸ்ட் போட்டிகளில் பெற்றவர்கள் இவர்களே.

இந்திய அணியின் சகலதுறை ஆட்டக்காரராக விளங்கிய கபில்தேவ், டெஸ்ட் போட்டிகளில் பெற்ற 434 விக்கட்டுக்களுக்கு அடுத்தபடியாக 86 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 431 விக்கட்டுக்களைப் பெற்றவர் சேர் ரிச்சட் ஹட்லி. ஹட்லியின் சிறந்த பந்துவீச்சுப் பெறுமானமாக 1985-1986 போட்டித் தொடரில் அவுஸ்திரேலியாவிற்கு எதிராக 52 ஓட்டங்களைக் கொடுத்து 9 விக்கட்டுக்களைக் கைப்பற்றியதைக் குறிப்பிடலாம். அடுத்து குறிப்பிடத்தக்க பந்துவீச்சாளராக விளங்கியவர் மொரிசன். துடுப்பெடுத்தாட்டத்தைப் பொறுத்தவரையில் நியூசிலாந்தின் தனிக்காட்டுராஜாவாக இருந்தவர் மாட்டின் குறோ. டெஸ்ட் போட்டிகளில் 5000 ஓட்டங்களுக்கு மேலாகப் பெற்ற இவர், 3வது விக்கட் இணைப்பாக ஜோன்சுடன் இணைந்து 467 ஓட்டங்களை தமது அணிக்குப் பெற்றுக்கொடுத்ததோடு, ஒரு இனிங்சில் நியூசிலாந்து அணிக்காக அதிகூடிய எண்ணிக்கையான ஓட்டங்களை (299) பெற்றுக்கொடுத்தவர் என்ற பெருமைக்கும் உரியவராவார் இவர். மேலும் இவரும் இவரது சகோதரன் ஜெஃப் குறோவும் ஒன்றாக 34 டெஸ்ட் போட்டிகளில் கலந்துகொண்டு விளையாடியுள்ளார்கள்.



மாட்டின் குறோ

ஒருநாள் போட்டி ஒன்றில் நியூசிலாந்து அணிக்காக அதிகூடிய ஓட்டங்களைப் பெற்றவர் ரேனர். இவர்களை விட ஹோவார்த், ஜே. ரைட், ரி. லார்விஸ, கே. ருத்தஃபோட் ஆகியோர் குறிப்பிடததக்க வீரர்களாக விளங்கினர். நியூசிலாநது அணியின் விக்கட் காப்பாளராக இருந்து அதிகூடிய ஓட்டங்களை பெற்றவராக (173 ஓட்டங்கள்) இயன் சிமித்தைக் குறிப்பிடலாம.

அண்மையில் நடைபெற்ற அவுஸ்திரேலியப் பயணத்தில் மிகவும் சோர்ந்த நிலையில் காணப்பட்ட நியூசிலாநது அணிக்கு மீண்டும் ஒரு மாட்டின் குறோ, ஒரு ரிச்சட் ஹட்லி கிடைக்கமாட்டார்களா என ஏங்கும் உள்ளங்கள் எத்தனை எத்தனை?

# விளையாட்டு

## அமெரிக்காவின் சிறந்த விளையாட்டு வீரன்

1997ம் ஆண்டுக்கான அமெரிக்காவின் 'சிறந்த விளையாட்டு வீரன்' பட்டத்தை 400 புள்ளிகளைப் பெற்ற டென்னிஸ் விளையாட்டு வீரர் சாம்ப்ராஸ் பெற்றுள்ளார். ஏ. ஜோன்சன் 376 புள்ளிகளைப் பெற்று இரண்டாவது இடத்தில் இருக்கிறார்.



டென்னிஸ் வீரர் ஒருவர் இப்பட்டத்தைப் பெறுவது இதுவே முதல் தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஈழத்தமிழர் உதை பந்தாட்ட சம்மேளனம் புதிய நிர்வாகசபை தெரிவு

ஈழத்தமிழர் உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் கடந்த 14.12.97 அன்று நடைபெற்றது.

மேற்படி கூட்டத்தில் அடுத்த வருடத்திற்கான புதிய நிர்வாக சபைத் தெரிவு இடம்பெற்றதுடன், தொடரும் ஆண்டில் பிரான்சில் ஈழத் தமிழர்களின் உதைபந்தாட்ட வளர்ச்சிக்கு சம்மேளனம் ஆற்றவேண்டிய செயற்பாடுகள் பற்றியும் கலந்து உரையாடப்பட்டது.

புதிய நிர்வாக சபைக்கு தெரிவாகியோரின் விபரம் வருமாறு:

**தலைவர்: திரு. றொனி**
**செயலாளர்: திரு. சோமசுந்தரம்.**
**பொருளாளர்: திரு. மணிவண்ணன்**
**உபதலைவர்: திரு. நவராஜ்**
**உப செயலாளர்: திரு. அலெக்ஸ்**
**கணக்காய்வாளர்: திரு. கொன்சலஸ்**

சம்மேளனத்தில் பதிவு செய்து கொள்ள விரும்பும் அனைத்து உதைபந்தாட்ட கழகங்களையும் எதிர்வரும் ஜனவரி மாதம் 31 திகதிக்கு முன்பாக பதிவுசெய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நடுவர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் சம்மேளனத்தினால் ஒழுங்கு செய்து பயிற்றப்படவிருப்பதால், அதில் பங்கு கொள்ள விரும்பும் விளையாட்டு வீரர்கள் சம்மேளனத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு

தலைவர் : 01.43.94.19.05
செயலாளர் : 01 43 64 16 33

# பாசையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக் கழக பொதுக்கூட்டம்

பிரான்சில் இயங்கிவரும் பாசையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக் கழகத்தினது வருடாந்த பொதுக்கூட்டம், எதிர்வரும் 28.12.97 ஞாயிறு பிற்பகல் 3.00 மணிக்கு, 26, Rue du Departement, 75018 Paris-ல் அமைந்துள்ள 'தமிழ்ச்சோலை மண்டபத்தில் நடைபெற உள்ளது. மேற்படி கூட்டத்தில் 1998ம் ஆண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவும் நடைபெறும் எனவும், பிரான்சு வாழ் பாசையூர் மக்கள் அனைவரும் தவறாது சமூகமளிக்கும்படியும் கேட்கப்பட்டுள்ளது

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

## யாழ்ப்பாணச் செய்திகள்

# யாழ்.குடாவில் இருந்து தென்பகுதி செல்பவர்கள் பொதிகள் கொண்டுசெல்ல அனுமதி மறுப்பு

யாழ் உள்ளூராட்சி தேர்தலின் பாதுகாப்பு காரணங்களிற்காக யாழ். செயலகத்தினுள், துவிச்சக்கரவண்டி முதற்கொண்டு அனைத்து வாகனங்களும் நுழைவது தடைசெய்யப்பட்டுள்ளது.

இங்கு கடமைபுரியும் அனைவரும் தமது வாகனங்களை 'பழைய பூங்கா'வில் நிறுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் செயலகத்திற்கு வருபவர்கள் அனைவரும் தீவிர சோதனைக்குட்படுத்தப்பட்ட பின்னரே அனுமதிக்கப்படுகின்றனர். அவர்கள் கொண்டுசெல்லும் பொதிகளும் இராணுவத்தினரால் பலத்த சோதனைக்கு உள்ளாக்கப்படுகின்றன.

இதேவேளை யாழ். குடாவில் இருந்து கொழும்பு பகுதிகளுக்கு செல்லும் அனைவரும் எந்தவிதமான பொதிகளையும் கொண்டுவரவேண்டாம் என சிறீலங்காவின் யாழ். சிவில் நிர்வாக இணைப்பதிகாரி தெரிவித்துள்ளார். பொதிகளை சோதனையிடுவதால் காலதாமதம் ஏற்படுவதாகவும், பொதிகளை வைத்து பாதுகாக்க முடியாதெனவும் அவ் அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

# மக்களின் ஆதரவு உள்ளவரை யாழ்ப்பாணத்தில் புலிகளை அழிக்கமுடியாது

## இராணுவ உயரதிகாரி

யாழ். குடாநாட்டில் 200 தொடக்கம் 300 வரையிலான விடுதலைப் புலிகள் ஊடுருவியுள்ளார்கள் எனவும் அவர்கள் தாக்குதல்களை சிறீலங்கா படையினருக்கு எதிராக மிகத் தீவிரமாக தற்போது நடாத்துகின்றார்கள் என்பதை சிறீலங்கா இராணுவத்தின் உயரதிகாரி ஒருவர் ஒத்துக்கொண்டுள்ளார்.

யாழ். நிலைமைபற்றி கருத்து வெளியிட்ட அவர், மக்கள் மத்தியில் ஊடுருவியுள்ள புலிகளை இனங்காண்பதென்பது சுலபமான காரியமல்ல. மக்களின் ஆதரவு அவர்களுக்கு இருக்கிறது. இவ்வாறான மக்கள் ஆதரவுடன் அவர்கள் செயற்படுவார்களேயானால் அவர்களை எம்மால் அழிக்க முடியாது. மக்கள் அவர்களை எமக்குக் காட்டித் தருவார்களேயானால் தான் எம்மால் எதுவும் செய்யமுடியும். ஆனால் யாழ்ப்பாணத்தில் இவ்வாறான நிலை இல்லை எனவும், அவர் தெரிவித்துள்ளார்.

# கோவில்களிலும் திருடர்களின் கைவரிசை

யாழ்ப்பாணத்தில் திருட்டுச்கள் மிக அதிகமாக நடைபெற்று வருகின்றன. இரவு வேளைகளிலேயே நடைபெற்று வந்த திருட்டுச் சம்பவங்கள், தற்பொழுது பட்டப் பகல் வேளைகளிலும் நடைபெறுவது அதிகரித்துள்ளது.

இத் திருட்டுக்களை நடத்தும் திருடர்கள், கடைகள், வீடுகள், கோவில்கள் என எத்த வேறுபாடுமின்றி தமது கைவரிசைகளைக் காட்டி வருகின்றனர்.

அண்மையில் பல கோவில்களில் திருட்டுச் சம்பவங்கள் தொடராக இடம்பெற்றுள்ளன. இப்படியான திருட்டுக்களில் கோவிலுக்குச் சொந்தமான ஒலிபெருக்கிகள், பாரிய விளக்குகள், உட்பட உண்டியல் பணமும் திருடிச் செல்லப்படுகின்றன.

கடந்த வாரம் பலத்த மழை பெய்துகொண்டிருந்த பகல் வேளையொன்றில் நவாலி - அந்திரான முருகமூர்த்தி கோவிலினுள் புகுந்த திருடர்கள் உண்டியலுடன் பணத்தையும் மற்றும் பெறுமதி வாய்ந்த பொருட்களையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

# யாழ் குடாவில் தயாரிக்கப்படும் வெதும்பியின் நிறை குறைவு

யாழ் மாவட்ட வெதுப்பகங்களில் தயாரிக்கப்படும் வெதும்பியின் (பாண்) நிறை குறைவாக உள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். 450 கிராமாக இருக்க வேண்டிய 'ஒரு இறாத்தல்' வெதும்பியின் நிறை தற்போது 350 கிராமாக உள்ளதெனத் தெரியவந்துள்ளது.

அண்மையில் யாழ் செயலகத்தில் நடந்த வெதுப்பக உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகள் கூட்டத்தில், தவசனிட்ட உள்ள அச்சுக்களில் 350 கிராம் நிறையுடைய வெதும்பியைத்தான் தயாரிக்க முடியுமெனவும், புதிய அச்சுக்கள் தயாரிக்க பணம் விரயமாகும் எனவும் தெரிவித்துள்ளனர்.

இக் காரணங்களை மறுத்துள்ள மக்கள், வெதும்பியின் நிறைக்கேற்ற விலை நிர்ணயிக்கப்படாவிட்டால் பாதிப்பு தங்களுக்கே என வேதனை தெரிவித்துள்ளனர்.

# மிதிவெடியில் ஒருவர் பலி இன்னொருவர் படுகாயம்

வாழைத் தோட்டத்தில் வேலை செய்துகொண்டிருந்த போது அங்கு புதைத்து வைக்கப்பட்டிருந்த மிதிவெடி ஒன்று வெடித்ததில் ஒருவர் கொல்லப்பட மற்றொருவர் படுகாயம் அடைந்துள்ளார்.

இச் சம்பவம் நீர்வேலிப் பகுதியில் நடந்துள்ளது. தோட்டத்தில் மண்வெட்டியால் கொத்திக்கொண்டிருந்தபோது மண்வெட்டி மிதிவெடியில்பட்டதினாலே அது வெடித்துள்ளது. படுகாயம் அடைந்த நிலையில் இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது, வே. இராசரத்தினம்(65) என்ற ஐந்து பிள்ளைகளின் தந்தை மரணமானார். காயமடைந்துள்ள அறு பிள்ளைகளின் தந்தையான க. சுந்தரலிங்கம் (39) தொடர்ந்து சிகிச்சை பெற்றுவருகிறார்.

# 1125 மாணவர்களுக்கு யாழ். பல்கலைக்கழக அனுமதி

1996 - 97-ம் ஆண்டிற்கான யாழ். பல்கலைக்கழக அனுமதி 1125 மாணவர்களுக்குக் கிடைத்துள்ளது.

இதில் 941 மாணவர்கள் மட்டுமே தங்களது அனுமதிக்கான பதிவுகளை மேற்கொண்டுள்ளதாக பல்கலைக்கழக உயர் அதிகாரி தெரிவித்துள்ளார். மிகுதி 181 மாணவர்களும் சிறீலங்கா இராணுவத்தினரின் கைதுகளின் அச்சம் காரணமாகவும், இடம்பெயர்வுகளினாலும் தமது அனுமதிகளை வந்து பதிந்து கொள்ளவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கட்டட சுவர் விழுந்து இளைஞன் பலி

கட்டடம் ஒன்றை இடித்துக் கொண்டிருந்தபோது, அதை இடித்துக்கொண்டிருந்த இளைஞன் மீதே சுவர் இடிந்து விழுந்ததில் அவர் அவ்விடத்திலேயே பலியாகிய சம்பவம் ஒன்று பருத்தித்துறையில் நடைபெற்றுள்ளது.

பருத்தித்துறையில் வசித்து வந்த, மேற்படி சம்பவத்தில் பலியாகிய இளைஞன் பலாலியைச் சேர்ந்த அன்ரன் ஜெயக்குமார் (28) என்பவராவார்.

## வலிகாமம் சுற்றிவளைப்பு பரீட்சார்த்திகளும் தடுத்து வைப்பு

யாழ். வலிகாமம் பகுதியினை இன்று அதிகாலை சுற்றிவளைத்த சிறீலங்காப் படையினர் அப் பகுதிகளில் பெரும் தேர்தல் வேட்டையினை நடாத்தினர்.

கொக்குவில், கோண்டாவில், பொற்பதி ஆகிய பகுதிகளே படையினரின் சல்லடைத் தேடுதலுக்கு இலக்கானது. இப் பகுதிகளிலிருந்து மக்கள் வெளியேறவோ அல்லது உட்புகவோ இராணுவம் அனுமதிக்கவில்லை.

நடைபெறும் கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சை பரீட்சார்த்திகள் பலரும் தடுத்துவைக்கப்பட்டு இராணுவத்தினரால் கடுமையாக விசாரிக்கப்பட்டனர். ஆனால், கைதுசெய்யப்பட்டு கொண்டுசெல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை சரியாக தெரியவரவில்லை.


வேலணை மத்தியமகாவித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம்

காலம் : 28. 12. 1997
பிற்பகல் 3.00மணி
இடம் : Salle de Conference
69 Ter, Rue de la
Chapelle
75018 Paris.
M°: Pte de la Chapelle

சங்க உறுப்பினர்கள், ஆர்வமுள்ள பழையமாணவர்கள் அனைவரையும் தவறாது சமூகமளிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

செயற்குழு
பழையமாணவர் சங்கம்
பிரான்ஸ்


## பிறந்தநாள் வாழ்த்து



புங்குடுதீவு 10, தமிழீழத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சிற்றம்பலம் சிவம் தம்பதிகளின் செல்வப் புதல்வன் திருச்செந்தூரன் (SELVA) தனது 22-வது பிறந்த நாளை 26.12.97 அன்று SWISS இல் உள்ள தனது இல்லத்தில் அப்பா, அம்மா, அன்புத் தம்பி அருள் சகிதம் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, சித்தப்பாமார், சித்திமார், தங்கைமார், Basel மச்சான், கொழும்பு அத்தை, சீதா மச்சாள், மச்சான், பிள்ளைகள், சித்தப்பா, சித்தி, தங்கைமார், மற்றும் ஜேர்மனியில் வசிக்கும் தாத்தா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, அண்ணன், அண்ணி, அத்தான், அக்கா, பிள்ளைகள், தம்பி, தங்கைச்சி, மாமா, மாமி, மச்சான், மச்சாள்மார், சித்தப்பா, சித்திமார், மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் செல்வஸ்ரீ நாயன்மாரின் அருளால் சகல கலைகளும் கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்:
V. S. Sittampalam
Ziegelfeldstr 22, 4600 Olten, Schweiz
Tél: 062/ 212 42 64

# ஞானம் சென்ரர்

மீண்டும் வெளிவந்துவிட்டது




| | |
|---|---|
| இந்தியா | 28 நிமிடம் |
| கனடா | 80 நிமிடம் |
| தாய்லாந்து | 20 நிமிடம் |
| ஹொங்கொங் | 40 நிமிடம் |
| பிரான்ஸ் | 60 நிமிடம் |
| இலங்கை | 25 நிமிடம் |

| | |
|---|---|
| பாகிஸ்தான் | 22 நிமிடம் |
| மொறிசியஸ் | 24 நிமிடம் |
| சிங்கப்பூர் | 42 நிமிடம் |
| பிரித்தானியா | 80 நிமிடம் |
| அமெரிக்கா | 70 நிமிடம் |
| சீனா | 25 நிமிடம் |

இலங்கைக்கான தொடர்பு நேரம் 25 நிமிடங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது

தொடர்புகளுக்கு: **GNANAM CENTER**

195, Rue du Faubourg Saint Denis. 75010 Paris, France. M°: La Chapelle / Gare du Nord

Tel: 01 46 07 09 36 - Fax: 01 46 07 00 14



## வெளிவந்துவிட்டது




எங்கும் கிடைக்கிறது










*Marketed & Distributed by*

**Ayngaran Limited**

172, Woodmansterne Road,
London SW16 5TZ,
United Kingdom.
Tel: 0181 7645200
Fax: 0181 764 5255
*E-mail:*
*bhasky@aol.com*

போலி CD க்களை வாங்கி ஏமாறாதீர்கள். Bhasky முத்திரைகளை கவனித்து வாங்குங்கள்

# 11 யுத்தத் தாங்கிகளை புலிகள் கைப்பற்றினர்?

வன்னியில் சிறீலங்கா இராணுவத்தினரின் 'ஜெயசிக்குறுய்' நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து விடுதலைப் புலிகள் ஜெயசிக்குறுய படை நகர்வின் மீது நடாத்திய பாரிய தாக்குதல்களின்போது படையினரின் பதினொரு யுத்தத் தாங்கிகளை கைப்பற்றியுள்ளனர் என கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில ஏடான 'சண்டே லீடர்' தனது கடந்தவார இறுதி பாதுகாப்பு நிலவர அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அவ் அறிக்கையில், வன்னியில் நடைபெற்ற சண்டைகளில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டதுடன், ஐயாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர். கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் 14 கிலோ மீற்றர் தூரத்திற்கே இராணுவம் இந்தளவு இழப்பினை சந்தித்துள்ளதென்றால் காலநிலை பாதகமாக இருக்கும் இவ்வேளையில் மேலும் இராணுவ நடவடிக்கை முன்னெடுக்கப்படுமானால் இன்னும் எவ்வளவோ இழப்புக்களைச் சந்திக்க வேண்டிவரும். போர் இன்னும் ஒரு வருடத்திற்குத் தொடருமானால் போர் செலவீனங்களை தாங்க முடியாமல் அரசு மிகவும் திண்டாடப் போகிறது எனவும் அவ் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### கெமுனு படைப்பிரிவு....

கேணி பகுதியூடாக சிப்பாய்களின் அணிகள் ஆனையிறவு படைத் தளத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட போதே இத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

இத் தாக்குதல் பற்றி கருத்து வெளியிட்ட இராணுவ தலைமையகம், மூன்று சிப்பாய்கள் பலியாகி மேலும் பத்துப்பேர் படுகாயமடைந்ததாக அறிவித்துள்ளது. துருப்புக்களை அளவிற்கு அதிகமாக ஏற்றிச் சென்ற வாகனம் மீதே கிளைமோர் தாக்குதல் நடாத்தப்பட்டதாகவும் இராணுவத் தரப்பு தெரிவித்துள்ளது.

அதிஉயர் பாதுகாப்பு இராணுவ வலையத்திலுள்ளே இத் தாக்குதல் நடாத்தப்பட்டமை இராணுவத் தரப்பை அதிர்ச்சியடையச்செய்துள்ளது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### தமிழர் தலையில்....

இனிமேல் கிழக்கு பிராந்திய வான் படைக்கு பணிப்பாளராகவும் இருப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்தவாரம் சிறீலங்காவின் முப்படைகளின் உயர் பொறுப்புகளில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களையொட்டியே இவருக்கு இப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

இராணுவத்தின் 53 வது பிரிவிற்கு தற்போது மேஜர் ஜெனரல் நெவில் டயஸ் நியமிக்கப்பட்டுள்ளார். 55 படையணிக்கு பிரிகேடியர் சரத் பொன்சேகாவும், ஆனையிறவு தளத்தின் 54-வது படைப் பிரிவிற்கு பிரிகேடியர் லொகான் குணவர்த்தனாவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடற்படையில் மேற்கு பிராந்திய கடற்படை பிரிவிற்கு றியர் அட்மிரல் டயா சந்திரசிறியும், கிழக்கு பிராந்திய கடற்படை பிரிவிற்கு கொமடோர் லொகான் விஜயவிக்கிரமாவும் நியமிக்கப்பட்டுள்ளதுடன், வேறு சில பதவிப் பொறுப்புகளும் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### களுத்துறை....

குறித்து சர்வதேச விசாரணையும், கண்டனமும் செய்யப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன், மேலும் இவ்வாறான படுகொலை சம்பவங்கள் நிகழாதவாறு பிரித்தானிய அரசு சிறீலங்கா அரசின் மேல அழுத்தங்களை பிரயோகிக்கவேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்போராட்டம் நடாத்தப்பட்டபோது அந்த வழியாக சென்ற பிரித்தானிய மக்களும், வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளும பெரும் ஆர்வம் காட்டியமை குறிப்பிடத்தக்கது.

## புளொட் உறுப்பினர் சுட்டுக்கொலை

புளொட் குழுவின் உறுப்பினர் ஒருவர் கடந்த 20.12.97 அன்று வவுனியா புறநகர்ப்பகுதியான குலைசப் பிள்ளையார் குளப் பகுதியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

மாலை 6.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இவரை சுட்டுக்கொன்றவரை யாரென தம்மால் உறுதிப்படுத்த முடியாதிருப்பதாக வவுனியாப் பொலிசார் தெரிவித்துள்ளனர். அண்மைக்காலமாக புளொட் குழுவுக்கும், ரெலோ குழுவுக்கும் இடையே வவுனியாவில் மோதல்கள் இடம் பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

## மலையக பகுதிகளில் புலிகள் செல்வாக்கு உயர்கிறது - அரசியல் அவதானிகள்

மலையகப் பகுதிகளில் விடுதலைப் புலிகளின் செல்வாக்கு மிகவும் உயர்ந்து வருவதாக சிறீலங்கா புலனாய்வு அமைப்பு எச்சரித்துள்ளது. இந்த நிலை பற்றி கருத்து வெளியிட்ட அரசியல் அவதானி ஒருவர், அண்மைக் காலமாகவே மலையகப் பகுதிகளில் குறிப்பாக தோட்டத் தொழிலாளர் சமூகத்தின் மத்தியில் விடுதலைப் புலிகளின் உயரிய கொள்கைகள் குறித்து மிகுந்த ஆர்வம் காட்டப்படுவதுடன் தமது பிரச்சினைகளுக்கும் புலிகளினால் மட்டுமே தீர்வு காணப்படமுடியும் என்ற நம்பிக்கையினை அவர்கள் கொண்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் மலையகப் பகுதி மக்களிடையே செல்வாக்குப் பெறுவது சிறீலங்கா அரசிற்கு பெரும் சிக்கலை தோற்றுவித்துள்ளது உண்மையில் மலையக மக்களிடையே விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் எதிலும் படையினரோ, பொலிசாரோ ஈடுபட்டால் அது நிச்சயமாக புலிகள் நினைத்த இலக்கினை அவர்களுக்கு தேடித்தரும். ஏனெனில் மலையகத்தில் தற்போதுள்ள விரக்தி நிலலையை போக்க விடுதலைப் புலிகளால் தான் முடியுமென்ற மனப்பாங்கு அங்கு வளர்ந்து வருகிறது. தோட்டத் தொழிலாளர்களுக்காக போராடுவதாக கூறிக்கொள்ளும் மலையக அரசியல்வாதிகளின் சாயம் மெல்ல மெல்ல வெளுத்து புலிகளின் கொள்கைபற்று தொடர்பான விழிப்புணர்வு அங்கு தோன்றி வருவதாகவும் அவ் அவதானி மேலும் தெரிவித்துள்ளார்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### சிறை படுகொலை....

சிறைப் படுகொலைகளைக் கண்டித்துள்ள மனித உரிமைகள் மையம், இப் படுகொலைகள் தொடர்பாக பூரணமான விசாரணைகள் நடாத்தப்பட வேண்டும் எனக் கோரியுள்ளது. இதேவேளை தமிழர் மனித உரிமைகள் மையம் சிறைப் படுகொலையை வன்மையாக கண்டித்துள்ளதுடன், ஐநா செயலாளர் நாயகம் உட்பட பல்வேறு உலகத் தலைவர்களின் கவனத்தையும் கோரியுள்ளனர்.

## 10வது ஆண்டு நினைவஞ்சலி



### கப்டன் காந்தி

(செல்வக்குமார்)

(கொழும்புத்துறை)

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆரம்பகால உறுப்பினர் கோப்பாய் பிரதேச பொறுப்பாளர்

வீரஜனனம்: 09.02.1966
வீர மரணம்: 23.12.1987

*இந்தியப் பேய்களின்*
*இரக்கமற்ற சதிக்கு*
*வஞ்சக நரிகள்*
*உடந்தையாய் மாற*
*கொஞ்சும் தமிழ்த்தாய்க்கு*
*காணிக்கையாக*
*பிஞ்சு உயிரையே*
*ஈகம் செய்தாயே!*
*காந்தி தேசம் எங்கள்*
*காந்தியை கொன்றது*
*கயமையின் கைகளால்*
*கழுத்தை அறுத்தது*
*காந்தியே நீ மீண்டும்*
*பிறந்து வா!!*

கப்டன் காந்தியுடன் கோப்பாயில் பலியான பத்து வேங்கைகளுக்கும் எமது வீர வணக்கங்கள்

*(கொழும்புத்துறை வாழ் மக்கள்)*

## ஓராண்டு நினைவஞ்சலி

### இரத்தினம் காந்தம்

அன்னை மடியில்:
20.02.1940



இறைவன் அடியில்:
10.12.1996

*என் கண்களில் கண்ணீர்! காந்தம் மாமி*
*என்னிலும் என் குடும்பத்திலும் அன்பும், மிகுந்த*
*அக்கறையும் கொண்டவர்களில் நீங்களும் ஒருவரல்லவா!*
*அப்பம்மாவை எனக்குத் தெரியாது. உங்கள் அரவணைப்பில்*
*எக்குறையும் எனக்கு இருந்ததில்லை.*
*இன்று நீங்களும் எனக்கில்லை - என் செய்வேன்*
*என் நெஞ்சத்துப் பலகைதனில்*
*நின் நிழல் படம் 'பிறேம்' போட்டு*
*வைத்திருக்கிறேன்.*
*மலரிட்டு மாலைபோட்டுப் பிரார்த்திக்கிறேன்!*

**ஆத்மா சாந்தி - சாந்தி - சாந்தி.**

செல்லையா ரமேஷ் (இலண்டன்)
கோவியம்பதி குடும்பத்தினர்
கொற்றாவத்தை, வல்வெட்டித்துறை.


# ராணி மஹால்

இறக்குமதி செய்யப்பட்ட இலங்கை இந்திய உணவுப் பொருட்கள், பசுமையான மரக்கறிவகைகள், கடல் உணவுவகைகளை நியாயமான விலையிலும், ஹிந்தி, தமிழ், வங்காள, பாகிஸ்தான், குஜராத், சிங்கள ஓடியோ, வீடியோ கசட்டுக்களை குறைந்த கட்டண வாடகையிலும் வழங்கி உங்களுக்குச் சேவை செய்யவென காத்திருக்கிறார்கள்!

மலிவு விலையில் புதிய பாடல்கள் அடங்கிய நான்கு CD 100Frs மட்டுமே!
(இச் சலுகை குறிப்பிட்ட வாரங்களுக்கு மட்டும்)

127, Av. Parmentier, 75011 Paris. - M°: Goncourt
Tel: 0140213167 / Fax: 0143555927 - Bus: 46 / 75

(இங்கு அரச அனுமதிபெற்ற சர்வதேச தொலைத்தொடர்புகளுக்கான தொலைபேசி அட்டைகளும் விற்பனைக்குண்டு)

ஈழமுரசு
Eelamurasu Weekly

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

**AYNGARAN ENTERPRISES & VIDEO**

பசுமையான மரக்கறி வகைகள் மளிகைப் பொருட்கள்
ஐரோப்பிய ரீதியில் தெளிவான, தரமான, ஒரிஜினல்
வீடியோக்களை குறைந்த விலையில் வழங்குபவர்கள்

**AYNGARAN** *VIDEO*
80, BURLINGTON ROAD, NEW MALDAN
SURREY, KT3 4NU, ENGLAND
Tel: 0181 - 9421561
Fax: 0181 - 2968778



# மட்டக்களப்பு ஆறாம்கட்டை இராணுவ அணிமீது தாக்குதல்

(20.12.97)

மட்டக்களப்பு ஆறாம் கட்டை சிறீலங்கா இராணுவத்தினர் மீது இன்று விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் நான்கு படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு பிரதான வீதியில் உள்ள ஆறாம்கட்டை இராணுவ முகாமிலிருந்து சோதனை மேற்கொள்ளவென வெளியே வந்த இராணுவத்தினர் மீது முகாமிலிருந்து 200 மீற்றர் தொலைவில் வைத்து காலை 9.40 மணியளவில் இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் 4 படையினர் அவ்விடத்திலே கொல்லப்பட்டுள்ளனர். விடுதலைப் புலிகளின் தாக்குதலை எதிர்கொள்ள முடியாத படையினர் இறந்த சகாக்களின் உடல்களையும், காயமடைந்தவர்களையும் தூக்கிக் கொண்டு முகாமிற்கு பின்வாங்கிச் சென்றுள்ளனர். இத் தாக்குதலில் சில தானியங்கி துப்பாக்கிகள் உட்பட இராணுவ தளவாடங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றியுள்ளனர் எனவும், விடுதலைப் புலிகள் தரப்பில் இழப்புக்கள் எதுவும் ஏற்படவில்லை என்றும் மட்டக்களப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## மாபெரும் விழிப்புப் போராட்டம்

கடந்தவாரம் சிறீலங்காவில் சிங்களச் சிறைச்சாலையில் சிங்களக் கைதிகளால் தமிழ்க் கைதிகள் மூவர் கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டிக்கும் முகமாகவும், சிறீலங்காவில் அரச படைகளால் மீறப்படும் மனித உரிமை நடவடிக்கைகளை வெளியுலகுக்குத் தெரியப்படுத்தும் நோக்குடனும் மேற்படி விழிப்புப் போராட்டத்தை நடாத்த எமது அமைப்பு தீர்மானித்துள்ளது.

இப் போராட்டத்தில் தாங்கள் கலந்துகொள்வதோடு எமது போராட்டத்தின் நோக்கத்தையும் அதன் வெளிப்பாடுகளையும் தங்கள் பத்திரிகை ஊடாக வெளிப்படுத்தி, இப் போராட்டம் சிறப்புற நடைபெற ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

— தமிழர் மனித உரிமைகள் அமைப்பு

இடம்: Place des Droits de L'Homme M°: Trocadero
காலம்: 24.12.1997 புதன்கிழமை பிற்பகல் 3 மணி – 5 மணி வரை

## சிறை படுகொலை பற்றி விசாரணை நடத்துங்கள்
### – ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு

அண்மையில் களுத்துறை சிறைச்சாலையில் மூன்று தமிழ்க் கைதிகள் படுகொலை செய்யப்பட்டதானது, 1983 சிறைப் படுகொலைகளுக்கு ஒப்பானது என ஹொங்கொங்கை தலைமையாகக் கொண்டியங்கும் ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் விபரித்துள்ளது.

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

## கெமுனு படைபிரிவு வாகனம் கிளைமோர் தாக்குதலில் சிதறியது

19.12.97

சிறிலங்கா கெமுனு படைப் பிரிவின் கவச வாகனதொடர் ஒன்றின் மீது ஆனையிறவில் இருந்து பளை நோக்கி ரோந்து சென்றுகொண்டிருந்த துருப்புக் காவி மீது விடுதலைப் புலிகள் கிளைமோர் தாக்குதலை மேற்கொண்டனர். இதன்போது பல படையினர் பலியாகியுள்ளதுடன், பலர் படுகாயமடைந்துள்ளனர்.

இன்று மாலை வெற்றிலைக்

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

## களுத்துறை படுகொலைகளை கண்டித்து இலண்டனில் விழிப்பு போராட்டம்

சிறீலங்காவின் களுத்துறை சிறைச்சாலையில் கடந்த 12-ம் திகதி தமிழ் அரசியல் கைதிகள் படுகொலை செய்யப்பட்ட கொடூரச் சம்பவத்தை கண்டித்து பிரித்தானியாவில் வாழும் தமிழ் மக்களால் விழிப்புப் போராட்டமொன்று நடாத்தப்பட்டுள்ளது.

மனித உரிமைகளுக்கான தமிழர் மையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இப் போராட்டத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் பிரித்தானிய பிரதம மந்திரியின் வதிவிட முன்றலில் கூடி சிறீலங்கா அரச நிர்வாகத்தின் இப் படுகொலைகளுக்கெதிராக தமது எதிர்ப்பினைக் காட்டியுள்ளனர்.

மாலை 4 மணிக்கு ஆரம்பித்த போராட்டம் இரவு 7 மணிவரை நடைபெற்றுள்ளது.

போராட்டத்தின் முடிவில் மனித உரிமைகளுக்கான தமிழர் மையத்தினரால் பிரித்தானியப் பிரதமருக்கு மனு ஒன்றும் கையளிக்கப்பட்டது. இந்த மனுவில் தமிழ் கைதிகளின் மீதான இப் படுகொலைகள்

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

## வாகனேரி தாக்குதலில் 5 சிப்பாய்கள் பலி!

புனானை குளத்தில் அமைந்திருக்கும் சிறீலங்காப் படையினர் வாகனேரிப் பகுதியில் ரோந்து சென்றபோது விடுதலைப் புலிகளினால் மறிக்கப்பட்டு அதிரடித் தாக்குதல் ஒன்றுக்குள்ளாகியுள்ளார்கள். இத் தாக்குதலில் 5 படையினர் கொல்லப்பட்டு மேலும் ஒரு சிப்பாய் படுகாயமடைந்ததாக அரசு தெரிவித்துள்ளது.

கடந்த வெள்ளியன்று (19.12.97) காலை 9 மணியளவில் இத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. பலியானவர்களில் 'லான்ஸ் கோப்ரல்' ஒருவரும் அடங்குகிறார். விடுதலைப் புலிகள், படையினரை சுற்றிவளைத்து தன்னியக்க ஆயுதங்களைக்கொண்டு தாக்குதல் நடாத்தியுள்ளனர். பலியான சிப்பாய்களுடைய ஆயுத தளவாடங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றிச் செல்லப்பட்டுள்ளன.

## தமிழர் தலையில் குண்டு போட கிழக்கு வான்படை பணிப்பாளராக தமிழர்

தமிழ் மக்களின் மீது ஈவிரக்கமின்றி குண்டுகளை வீசும் சிறீலங்கா வான்படையின் கிழக்கு பிராந்திய பணிப்பாளராகவும் சீனன்குடா வான்படை தளத்தின் பொறுப்பாளராகவும் தமிழர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னதாக இப்பதவிகளை வகித்து வந்த எயார் கொமடோர் டொனாட் பெரேரா மேலதிக பயிற்சி பெற இந்தியாவின் டில்லி பாதுகாப்பு கல்லூரிக்கு செல்வதால் அவரது இடத்திற்கு எயார் கொமடோரான ரவி அருந்தவநாதன் என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார். இவரே

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

ஈழமுரசு சந்தா விபரம்



தபாற் செலவுடன்:-
52 - வாரங்களுக்கு £60 (520Frs.)
26 - வாரங்களுக்கு £30 (260Frs.)

தொடர்புகளுக்கு:
ஜெயந்தன் - 09 56 90 81 45 / குணம் - Tel: 09 56 27 77 18

E.Mail - eelamurasu@aol.com

'ஈழமுரசு உங்கள் பத்திரிகை; நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் ஈழமுரசினை அறிமுகப்படுத்துங்கள்

## தென் தமிழீழச் செய்திகள்

# கழுத்துறை படுகொலையைக் கண்டித்து மட்டக்களப்பு கைதிகள் உண்ணாவிரதம்

கழுத்துறையில் கடந்த 12-ம் திகதி சிங்கள காடையர்களால் தமிழ் கைதிகள் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து, மட்டக்களப்பு சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் அடையாள உண்ணாவிரதம் ஒன்றை கடந்த புதன் அன்று மேற்கொண்டனர்.

வெலிக்கடை படுகொலையில் இருந்து கழுத்துறை சிறைக் கொலை வரை ஏராளமான சிறைக்கொலைகளை சிறீலங்கா காடையர்கள் புரிந்து வருகின்றனர். கழுத்துறையில் நடந்த இப்படுகொலை சிறீலங்காவின ஆட்சியாளர்கள் மாறினாலும் இவ்வாறான படுகொலைகள் மாறப்போவதில்லை என்பதையே காட்டுகின்றது என மட்டக்களப்பு கைதிகள் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் கூறுகையில், தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல தமிழ் கைதிகளுக்கு கூட எந்தவித பாதுகாப்பும் இல்லை என்ற நிலையே இப்பொழுது காணப்படுகின்றது தமிழ மக்களின் பிரதிநிதிகள் என்று கூறிக்கொள்ளும் தமிழ்கட்சிகளும் இச் சம்பவங்களை தட்டிக் கேட்க முன்வருவதில்லை எனவும் கூறினர்.

இதேநேரம் தமிழ் கைதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். படுகொலை சம்பவத்தில் ஈடுபட்ட அனைவருக்கும் எதிராகவும் கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும். இதில் இறந்த காயமடைந்தவர்களுக்கான நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும். இவ்வாறான மனித உரிமை மீறல்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# உப்புவெளி முகாமில் பெண் மரணம்

திருகோணமலை உப்புவெளி கண்ணாடி தொழிற்சாலை அகதிமுகாமில் தங்கியிருந்த பெண் ஒருவர் நோய் காரணமாக இறந்துள்ளார்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த மார்க்கண்டன் அன்னம்மா என்ற இரண்டு பிள்ளைகளின் தாயான இவர், தனது கணவனுடனும் குழந்தைகளுடனும் இவ் அகதிமுகாமில் தங்கியிருந்த வேளையே இம் மரணம் நிகழ்ந்துள்ளது.

இவர் வவுனியாவிலிருந்து கப்பல் மூலம் யாழ்ப்பாணம் செல்வதற்காக திருகோணமலை வந்திருந்தார். தற்பொழுது யாழ்ப்பாணம் திரும்புகின்ற பொதுமக்கள், விடுதலைப் புலிகளின் உளவாளிகளா என சிறீலங்கா இராணுவம் கருதுவதால் அவர்களை அகதி முகாம்களில் அடைத்து தீவிர விசாரணையின் பின்னரே அவர்களின் சொந்த இடங்களுக்கு செல்ல அனுமதிக்கின்றனர். அவ்வாறு இவர்களும் முகாம்களில் விசாரணைக்கென தடுத்து வைத்திருந்தபோதே இச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இதேவேளை வவுனியாவில் இருந்து சொந்த இடங்களுக்கு திரும்பும் அகதிகளை திருகோணமலைக்கு அனுப்பி வைக்க வேண்டாம் என கோரியுள்ளதாக வடகிழக்கு மாகாண புனர்வாழ்வு அதிகாரசபையை சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

உப்புவெளி கண்ணாடித தொழிற்சாலை முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள 358 பேர் பல சுகாதார நெருக்கடிகளை சந்தித்த வண்ணம் உள்ளனர். இதேவேளை இவர்களுக்கான கப்பல் போக்குவரத்துக்கள் எதுவும் இதுவரை ஏற்பாடு செய்யப்படவில்லை. இந் நிலையில் மேலும் இங்கு அகதிகளை கொண்டுவருவதால் சங்கடங்களை எதிர்நோக்கவேண்டும் என்ற நிலையிலேயே இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# இராணுவ தடைமுகாம்கள் ஒருநாளில் பல இலட்சம் நட்டம்

மட்டக்களப்பு ஆடைத் தொழிற்சாலையில் இருந்து தைக்கப்பட்ட ஆடைகளை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்வதற்கு கொழும்புத் துறைமுகத்திற்கு ஏற்றிச்சென்றவேளை, லொறியின் சாரதியையும் அதன் உதவியாளரையும் சிறீலங்கா இராணுவத்தினரின் சோதனைக்காக தடுத்து வைத்தனர். இதனால் குறிப்பிட்ட தினத்திற்கு ஆடைகள் ஏற்றுமதி செய்ய முடியாமல் போனது இதனால் தங்கள் நிறுவனத்திற்கு பல இலட்சம் ரூபா நஷ்டம் என தொழிற்சாலையின் முகாமைப் பணியாளர் ஆர். சண்முகராசா தெரிவித்துள்ளார்.

ஏற்றுமதிக்கு கொண்டுசெல்வதற்கான சகல ஆவணங்கள் இருந்தும், தமிழன் என்ற காரணத்தினாலேயே இவர்களை தடுத்து வைத்த இராணுவத்தினர். தங்களது பகுதி பொலிஸ் நிலையத்தினுள் இவர்களையும் இன்னும் சில தமிழ் இளைஞர்களையும் சேர்த்து சுவர்களுக்கு வர்ணம்பூசிவிட்டு செல்லுமாறு கூறியுள்ளனர். அதன் பின் அப் பொலிஸ் நிலையத்திற்கு இவர்கள் வர்ணம் பூசிய பின்னரே விடுவித்து அனுப்பி வைத்துள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

# கல்முனையில் மோட்டார் சைக்கிளினால் பரபரப்பு !

கல்முனை பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக வியாழன் காலை கவனிப்பாரற்ற நிலையில் காணப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்று மக்களை பெரும் பரபரப்படைய வைத்துள்ளது.

சிறிது வேளைக்குப்பின் அவ்விடத்திற்கு விரைந்த பொலிசாரும் குண்டினை செயலிழக்க வைக்கும் நிபுணர்களும், மக்கள் எவரும் அப்பகுதியினுள் வர வேண்டாம் என தடைசெய்த பின் மோட்டார் சைக்கிளை பரிசோதிப்பதற்காக நெருங்கினர். அந்நேரம் கல்வி அதிகாரி ஒருவா ஓடிவந்து அது தனது என உரிமைகோரியுள்ளார்.

நடைபெற்றுவரும் க.பொ.த சாதாரண பரீட்சையின் வினாத்தாள்களை பொலிஸ் நிலையத்திற்கு சென்று எடுத்து வருவதற்காக தனது மோட்டார் சைக்கிளை வெளியில் நிறுத்திவிட்டு சென்றுள்ளார். அக் கல்வி அதிகாரி பொலிஸ் நிலையத்தினுள் ஒருமணி நேரமாக தங்கியிருக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. அந்நேரம் வெளியில் நின்ற மோட்டார் சைக்கிளில் வெடிகுண்டு இருப்பதாக சந்தேகித்த பொலிசாரே குண்டு செயலிழக்கும் குழுவினரை அழைத்துள்ளனர்.

# மட்டக்களப்பில் கடும் மழை

## வெள்ள அபாயத்தை எதிர்நோக்கும் தாழ்ந்த பகுதிகள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெய்து வரும் கடும் மழையினால் தாழ்ந்த பகுதிகள் வெள்ளத்தினால் மிகவும் பாதிப்படையக்கூடும் என தெரிய வருகிறது. கடந்த இரு தினங்களாக பெய்த மழையின் அளவு 100 மில்லி மீற்றரையும் தாண்டியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து இரு தினங்கள் இம்மழை நீடிக்குமானால் மக்கள் அப்பகுதிகளில் இருந்து வெளியேறவேண்டி ஏற்படலாம் என தெரியவந்துள்ளது.

இம் மழையின் காரணமாக இருதயபுரம் மேற்கு, கொக்குவில், புதூர் திமிலதீவு, நாவற்குடா கிழக்கு, நொச்சிமுனை, கல்லடி, சீலாமுனை, கருவேப்பங்கேணி, மாமாங்கம் போன்ற பகுதிகள் வெள்ளத்தினால் சூழப்பட்டுள்ளன.

இதேவேளை மண்முனைத் துறை, மகிழடிதீவு, குருக்கள் மடம், அம்பிளாந்துறை ஆகிய பகுதிகளில் இருந்து இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசங்களுக்கு இடம்பெறும் படகுச் சேவையும் பாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் வலையிறவுப் பாலத்தினூடாக [illegible]டிக்கு செல்வதற்கு கட்டப்பட்ட புதிய பாலம் 5 அடி வெள்ளத்தில் மூழ்கிப்போயுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

# துறைமுகசந்தி இராணுவ முகாம்மீது புலிகள் மோட்டார் தாக்குதல்

வாழைச்சேனை நாசிவன் தீவுப் பகுதியில் இருந்து வாழைச்சேனை துறைமுகச் சந்தி இராணுவ முகாம்மீது கடந்த திங்கள் மாலை விடுதலைப்புலிகள் மோட்டார் தாக்குதல் நடாத்தியுள்ளதாக சிறீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளது.

இதன் பின்னர் வாழைச்சேனைப் பகுதியை சுற்றிவளைத்த சிறீலங்கா இராணுவத்தினர் பலதத சோதனை ஒன்றை நடாத்தியுள்ளதாக துறைமுகச் சந்தி இராணுவ முகாம் அமைந்திருக்கும் வாவிக்கு அப்பால் உள்ள நாசிவன் தீவு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில உள்ள பிரதேசம் என்பதால் அங்கிருந்து வந்தவர்கள் அனைவரும் வீதிகளில் வைதது விசாரணை செய்யப்பட்ட பின்னரே தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

பாரிஸ் தமிழர் கல்வி நிலையம்
165, Rue de Charonne,
75011 Paris. -
M°: Alexendre Dumas
ou Charonne

புதிய பிரெஞ்சு வகுப்பு
காலம்: 03.01.1998 சனிக்கிழமை பிற்பகல் 1 மணி
உயர்தர பிரெஞ்சு வகுப்பு
காலம்: 03.01.1998 சனிக்கிழமை மாலை 4 மணி
புதிய கணினி வகுப்பு
காலம்: 27.12.1997 சனிக்கிழமை மாலை 5 மணி

தமிழீழத்தில் பிரசித்தி பெற்ற
ரீகல் வீடியோ மூவிஸ்
தமிழ் வீடியோ துறையில் 'கொம்பியூட்டர் எடிட்டிங்' முதல் முறையாக அறிமுகப்படுத்துவோர்.
தொலைபேசி: 06 60 94 75 91 / 01 49 88 93 15
மேலதிக விபரங்களுக்கு:
THAVAM VIDEO CENTER
64, Rue louis Blanc, 75010 Paris. M°: La Chapelle
தொலைபேசி: 01 42 09 35 53
ஹப்பி ரெக்ஸ்
தொலைபேசி:
01 40 05 08 09
REEGAL VIDEO MOVIES
பாரிஸ் மாநகரில் மக்களுக்கு
அரிய சேவையாற்றுகிறது

தமிழீழச் செய்திகள்

# ராசீக் குழுவின் வெறித்தனம்! இரு இளைஞர்கள் படுகொலை

தென்தமிழீழத்தில் சிறிலங்கா இராணுவத்துடன் இணைந்து தமிழ் மக்கள் மீது அட்டூழியத் தனங்களை கட்டவிழ்த்துவிடும் ராசிக் கும்பல் மீது விடுதலைப் புலிகள் தாக்குதலைத் தொடுத்தபோது அக்கும்பலின் ஒரு உறுப்பினர் கொல்லப்பட்டுள்ளார். அக்கும்பலினால் கைது செய்யப்பட்ட தம்பதியினரும் சூட்டுக்காயங்களுடன் புலிகளினால் மீட்கப்பட்டுள்ளனர்.

தளவாய் பகுதியில் நடைபெற்ற இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவர் போக, ராசிக் கும்பலைச் சேர்ந்த ஏனையோர் ஓடித்தப்பிவிட்டனர். தப்பிச் செல்லும் போதே தாமிட்டமிருந்த கைதிகளான இத்தம்பதியினரை சுட்டு படுகாயப்படுத்தி விட்டு சென்றுள்ளனர்.

இதேவேளை மறுநாள் இப்பகுதிக்கு சிறிலங்கா படையினருடன் இணைந்து தேடுதல் வேட்டைக்கென இரண்டு பேருந்துகளில் சென்ற ராசிக் குழு வெறியர்கள் இரண்டு இளைஞர்களை சுட்டுக்கொன்றுவிட்டு அவர்களது உடலை தமது முகாம் முன்றலில் பார்வைக்கு வைத்து அவர்கள் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களென பிரச்சாரம் செய்துள்ளனர்.

இப்பகுதி இளைஞர், யுவதிகள் பெருமளவில விடுதலைப் புலிகளுடன் நாளுக்கு நாள் இணைந்து வருவதால் பீதியுற்ற இந்த வெறியர்கள் இளைஞர்களை எச்சரிக்கும்முகமாகவே இப் படுகொலைகளை புரிந்ததாக மட்டு. செய்திகள் தெரிவிக்கின்றன.

## வன்னியில் மீண்டும் பெருமழை கனகராயன் ஆறு பெருக்கெடுத்து ஓடுகிறது

வன்னி பிரதேசத்தில் மீண்டும் பெருமழை பெய்யத் தொடங்கியுள்ளது. கொஞ்ச நாட்களுக்கு ஓய்ந்திருந்த இம்மழை மீண்டும் பெருமளவாக கொட்டுவதால் பல இடங்களில் வெள்ள நிலைமை மிக மோசமாகியுள்ளது. வெள்ளப்பெருக்கு காரணமாக கனகராயன் ஆறு கரைகளை மேவிப் பாய்ந்தளால் இப்பகுதிகளில் மக்களுக்கு பெரும் இடர்கள் தலை தூக்கியுள்ளன.

சுறுப்புக்கத்தி பகுதியில் நிலைகொண்டுள்ள சிறீலங்காப் படையினரை சூழவும் பெரும் வெள்ளம் ஏற்பட்டுள்ளதால படையினர் தமது நிலைகளில் சிலவற்றை கைவிட்டும் சென்றுள்ளதாகவும் தெரியவருகிறது. இத்துடன் வவுனியா திருமலை வீதியிலுள்ள பல இராணுவ காவலரண்களையும் வெள்ளம் சூழ்ந்துள்ளதனால் மீள ஆரம்பிக்கப்பட்ட இரணைமடு குள அணைக்கட்டு மேலான போக்குவரத்துகளும் தற்போதைய கடும் மழை காரணமாக மீண்டும் தடைசெய்யப்பட்டுள்ளதுடன் அணையின் நீர்மட்டமும் தொடர்ந்தும் அதிகரித்து வருகிறது.

இதேவேளை கடும் வெள்ளம் காரணமாக, இரணைமடு அணையூடாக பாரவாகனங்களைக் கொண்டு செல்ல வேண்டாமென்று விடுதலைப் புலிகள் வன்னியில் அறிவுறுத்தியுள்ளது டன், அணையின் பாதுகாப்புக்கென போடப்பட்டுள்ள மண் மூடைகளை திருடி மணலை அப்புறப்படுத்திவிட்டு சாக்குகளை கொண்டு செல்பவர்களையும் அவ்வாறு செய்ய வேண்டாமென அறிவுறுத்தியுள்ளனர்.

## வன்னியில் எம்.ஜி.ஆர். நினைவு தினம்

மறைந்த முன்னாள் தமிழக முதல்வரும் ஈழத்தமிழர்களின் பெரும் ஆதரவாளரும் நடிகருமான எம்.ஜி.ராமச்சந்திரனது 10-வது நினைவு தினத்தினை வன்னிப்பகுதியில் அனுஷ்டிக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

துணுக்காய், கல்விளான்குளம் ஆகிய இடங்களில இந்நினைவு தின நிகழ்வுகள் 24, 25, 26 ஆகிய தினங்களில் செய்யப்பட்டுள்ளன. இந்த நிகழ்வுகளில் பொதுக் கூட்டங்களும், கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

## அல்வாயில் தாக்குதல் 5 சிப்பாய்கள் பலி

அல்வாய் புலவரோடைப் பகுதியில் கடந்த 18-ம் திகதி சிறீலங்கா படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதலொன்றினை மேற்கொண்ட போது ஐந்து சிப்பாய்களுக்கு மேல் கொல்லப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

காலை 8.30 மணிக்கு ஆரம்பமான இத்தாக்குதல் 10.00 மணி வரை நீடித்துள்ளது. ரோந்து வந்த சிறீலங்கா இராணுவ அணி ஒன்றின் மீதே புலிகள் சுற்றிவளைத்து தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத படையினர் தமது கொல்லப்பட்ட சகாக்களையும் தூக்கிக் கொண்டு பின்வாங்கிச் சென்று விட்டனர்.

விடுதலைப் புலிகள் அப்பகுதியைவிட்டுச்சென்றதன் பின்னர் மீண்டும் அங்குவந்த படையினர் அங்கு தேடுதல் வேட்டையினை நடாத்திவிட்டு இப் பகுதியிலுள்ள பொதுமக்களின் நான்கு வீடுகளை குண்டுவைத்து தகர்த்து விட்டுச் சென்றுள்ளனர்.

இதேவேளை கடந்த 17-ம் திகதி நாகர் கோவில் பகுதியில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலொன்றில் இரண்டு சிப்பாய்கள் பலியாகியுள்ளனர்.

## மட்டு. சந்தை குண்டு வெடிப்பின் சூத்திரதாரிகள் பொலிசாரே - புலிகள் கண்டனம்

சிறீலங்கா பொலிசாரே மட்டக்களப்பு சந்தை வளாகத்தில் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தின் சூத்திரதாரிகளென விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு பிராந்திய அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. கீதன் அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளார்.

சிறீலங்கா படையினரின் 'ஜெயசிக்குறுய்' இராணுவ நடவடிக்கையின் விரக்தி மனப்பான்மையைத் திசை திருப்புவதற்காகவும், மக்கள் மீது அதனை பழிவாங்கும் முகமாகவுமே இக் குண்டு வெடிப்பினை படைத்தரப்பு, பொலிசாரினூடாக நடாத்தியதாக அவ் அறிக்கை தெரிவித்துள்ளது.

கடந்த 7 ஆம் திகதி நடைபெற்ற இக் குண்டு வெடிப்பு சம்பவத்தில் நால்வர் பலியாகியதுடன், 53 பேர் காயமடைந்தது குறிப்பிடத்தக்கது.

## படையினரின் கெடுபிடிகளால் மட்டு. தபால் வேலைகள் பாதிப்பு

மட்டு. தபாலகத்தில் இது வரை நடைபெற்றுவந்த இரவு நேரத்தில் கடிதங்களைத் தரம் பிரிக்கும் வேலைகள் தற்போது நிறுத்தப்பட்டுள்ளன. இரவு நேரத்தில் இராணுவ புலனாய்வு பிரிவு அதிகாரிகள் பலர் மட்டு தபாலகத்திற்கு வந்து கடிதங்களை தரம் பிரிக்கும் ஊழியர்கள் மேல் பலவித கெடுபிடிகளை மேற்கொள்வதுடன், வெளிநாட்டு கடிதங்களில் வரும் பண உண்டியல்கள் மற்றும் பெறுமதியான பொதிகளையும் எடுத்துச் சென்று வருகின்றனர்.

இதன் காரணமாகவே தபாலக ஊழியர்கள் தமது இரவு நேர கடமைகளை நிறுத்தியுள்ளனர். இது பற்றித் தெரிவித்த தபாலக ஊழியர் ஒருவர்,

இராணுவத்தினரும், தமிழ் கும்பல்களில் உளவாளிகளும் இரவு நேரங்களில் அலுவலகத்திற்கு வந்து கெடுபிடிகளை எம் மேல் மேற்கொள்வதுடன், தபால்களில் வரும் பெறுமதியான ஆவணங்களையும் திருடிச் சென்று வருகின்றனர். ஆனால், பொதுமக்களோ இவற்றை தபாலக ஊழியர்களே திருடுவதாக வீணாக சந்தேகிக்கின்றனர் எனவும் கவலை தெரிவித்துள்ளார்.

## கும்புறுமூலையில் காணமற் போன பொலிஸ்காரர்

சிறீலங்கா பொலிஸ்காரர் ஒருவர் கும்புறு மூலைப் பகுதியில் வைத்து காணாமற் போயுள்ளதாக கிழக்கு பொலிஸ் பணிமனை தெரிவித்துள்ளது.

தனதுபணியிலிருந்து விடுப்பு எடுத்துக்கொண்டு சென்ற இச் சிங்கள பொலிஸ்காரர் கும்புறு மூலை பகுதியூடாக சென்ற போது இனந்தெரியாத சிலர் அவரைக் கடத்திச் சென்று விட்டதாக தெரிவிக்கப்படுகிறது. முஸ்லிம் வர்த்தகர் ஒருவருடன் வாகனம் ஒன்றில் இப்பொலிசார் பயணம் செய்த போதே இச்சம்பவம் நடந்துள்ளது.

## கடற்கரையில் கிடந்த பொருள் எமனாகியது சிறுமி பலி! அறுவர் படுகாயம்!!

எழுவை தீவு கடற்கரையில் கடல் அலைகளால் ஒதுக்கப்பட்டுக் கிடந்த பொருள் ஒன்றினை எடுத்து அதனை பரிசோதிக்க முயன்ற சிறுமி ஒருவர் அப்பொருள் வெடித்ததன் காரணமாக பலியானார். அவருடன் கூட நின்ற மேலும் அறுவர் படுகாயமடைந்தனர்.

படுகாயமடைந்தவர்களில் ஐவர் ஒரே குடும்பத்தினைச் சேர்ந்தவர்களாவார்கள். காலை 10.30 மணியளவில் கடற்கரைப் பகுதிக்குச் சென்ற இச்சிறுமி கரையில் கிடந்த இந்த உருமறைப்பு செய்யப்பட்ட வெடிகுண்டுகளை வேறு ஏதோ பொருள் என தவறுதலாக எண்ணி பரிசோதனை செய்ய முயன்ற போதே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.


**வாகன சேவை**

உங்கள் பொருட்கள் வீட்டுத் தளபாடங்கள் போன்றவற்றை ஏற்றி இறக்கவும் வெளியூர் பிரயாணம் போன்ற தேவைகளுக்கும்

ரவி: 01 48 76 51 90 / 06 07 62 26 89 / 01 42 23 23 10

**சிவதயா தமிழ் அச்சகம்**

★ உங்கள் சகலவித அழைப்பிதழ்களும் மிக அழகான, நவீன, தரமான அழைப்பிதழ்களிலும் மற்றும் சகல அச்சுப் பதிப்புகளுக்கும் குறித்த நேரத்தில் மிக விரைவாக செய்து தரப்படும்.

★ எம்மிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டால் நாம் இலவசமாக Model Cards உங்களுக்கு அனுப்பி, Fax or Telephone மூலமாக விபரங்களை பெற்று குறிப்பிட்ட தவணையில் உங்களுக்கு அழைப்பிதழ்களை பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைப்போம்.

*Haupt Str - 13,*
*6313 Menzingen*
*(Zug, Switzerland)*
*Tel: & Fax: 41/ 7553192*

தொடர்புகளுக்கு:
Mr. K. Siva

அழைப்பிதழ் தயாரிப்பாளர்களுக்கு!
தரமான அதிநவீன அழைப்பிதழ்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

# யாழ் உள்ளூராட்சித் தேர்தல் குத்துவெட்டும் - குழிபறிப்பும்

சிறீலங்காவின் சர்வ வல்லமை பொருந்திய அதி உத்தம ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்கா அம்மையாரும் அதி தீரவீர சூர பராக்கிரம நவீன சாபுமல் குமரையா! ரதவத்தை மாத்தையாவும் தனிப்பெருங் கருணைகொண்டு யாழ்ப்பாண குடாநாட்டு மக்களுக்கு உள்ளூராட்சித் தேர்தல் என்னும் சமாதான தெய்வீக கைங்கரியத்தில் பங்கெடுக்கும் கிடைத்தற்கரிய பெரும் பேற்றை அருளியிருக்கின்றார்கள்.

எப்போது அம்மையாரது கடாட்சம் கிட்டும், எப்போது சாபுமல் மாத்தையாவினுடைய கடைக்கண் பார்வை கிடைக்கும் என்று கொழும்பில் தவமிருந்த தமிழர் விடுதலைக்கூட்டணி, PLOT, EPDP, TELO, EPRLF சிரோன்மணிகளெல்லாம் இந்தத் தெய்வீக அறிவிப்பினால் பாக்கியவான்களாகி, இந்தப் புனித கைங்கரியத்திலே பங்கெடுத்துக்கொள்வதற்கு யாழ்ப்பாணம் நோக்கி புறப்பட்டுவிட்டார்கள்.

ஆனாலும் பாருங்கள், இந்த பாக்கியவான்கள் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு ஆகாய விமானம் ஏறுவதற்கு முன்பே ஆளுக்கு ஆள் குழிபறிக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணியினரும் EPRLF, TELO குழுவினரும் தேர்தல் இப்போது வேண்டாம். அப்படித் தேர்தல் நடந்தால் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒரே அணியில் போட்டியிடலாம் என்று ஒரு ஆலோசனையை முன்வைத்தனர். PLOT, EPDP குழுவினர், 'இல்லை தேர்தல் வைக்கத்தான் வேண்டும், தனித்துப் போட்டியிடத்தான் வேண்டும்' என்று அழுங்குப் பிடி பிடித்தனர். ஆனால் இந்த அழுங்குப்பிடி வெளியில் தெரிந்தால், தங்களது வண்டவாளங்கள் 'சந்தி சிரித்துவிடும்' என்பதில் ரொம்பவும் கவனமாக இருந்த இவர்கள், வெளியில் தாங்கள் இப்போது தேர்தல் நடாத்தக் கூடிய சூழ்நிலை இல்லை என்று சொல்வதை ஆதரிப்பவர்களாகவும் தேர்தல் நடந்தால் போட்டி தவிர்ப்பு ஒப்பந்தம் செய்துகொண்டு பொது வேட்பாளர்களை நிறுத்த ஒத்துக்கொள்பவர்கள் போலவும் நடந்து கொண்டனர்.



தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் செய்த இறுதி குறித்த பின்பு இவர்களுக்கிடையே இரண்டு மூன்று சந்திப்புகள் கொழும்பில் நடந்தன. இந்தச் சந்திப்புக்களிலே எல்லோரும் ஒரே குரலில் 'யாழ்ப்பாணத்தில் இப்போது தேர்தல் நடத்துவதற்கான சூழ்நிலை இல்லை. தேர்தலை பின்போட வேண்டும் என்று அதி உத்தம அம்மையாரிடம் சென்று திரு விண்ணப்பம் செய்யவேண்டும் என்று முடிவெடுத்தனர்.

ஆனால PLOT குழுவினரும் EPDP குழுவினரும அம்மையாரின் தரிசனத்திற்கு நான் குறிக்கப்பட்ட தினத்திற்குமுனபே அம்மையாருக்கு நெருக்கமான 'அட்டதிக்குப பாலகர்கள்' மூலமாக 'எந்தக் காரணத்தைக் கொண்டும தேர்தலைப பின் போடவேண்டாம். தேர்தலை நீங்கள் பகிஷ்கரித்தால் சுதந்திரக் கட்சி தனது வேட்பாளர்களை நிறுத்தி போட்டியின்றி தெரிவு செய்து கொள்ளும் என்று தமிழ்கட்சி கூட்டணிக்கு எச்சரித்து விடுங்கள்' என்று தகவல் சொல்லிவிட்டார்கள்.

PLOT குழுவின் உப தலைவர் மாணிக்கதாசனாருக்கு தான் கோஷ்டிச்சண்டை பிடித்தவர்களில் எழுத்தெழுதிய- யாழ்ப்பாண நகரத்தில் மேயராக ஆகவேண்டும் என்று ஆசை!!

டக்ளஸ் தேவானந்தனாருக்கோ யாழ் மாவட்டத்தில் அதிக பாராளுமன்ற உறுப்பினர்களை பெற்றிருப்பதைப் போலவே உள்ளூராட்சித் தேர்தலிலும் அதிக ஆசனங்களைப் பெற்ற தாங்களும் அரசியலில் முக்கியமானவர்கள் என்று காட்டவேண்டும் என்று ஆசை!

TELO, EPRLF, தமிழர் விடுதலைக்கூட்டணியினருக்கு இது ஒரு வாழ்க்கைப் பிரச்சினை. தேர்தலில் போட்டியிட்டு வெற்றியடையாவிட்டால் அம்மையார் அன் கொம்பனியின் கடைக்கண்பார்வையை இழக்க வேண்டிய ஆபத்தான நிலை ஏற்படும். கொழும்பின் சுகபோக வாழ்க்கைக்கும் நெருக்கடி வந்து விடும். இதனால் அவர்கள் இயன்றவரை தேர்தலை தள்ளி வைக்க அல்லது அனைவரும் ஒன்று சேர்ந்து போட்டியிட கடைசிவரை முயற்சி செய்து பார்த்தனர். ஊகூம்! ஒன்றும் கைகூடவில்லை.

தேர்தல் நடப்பது உறுதி. 23.12.97-க்கு முன் வேட்பாளர்கள் வேட்பு மனுத்தாக்கல் செய்யவேண்டும் என்று அறிவித்தாகிவிட்டது. PLOT, EPDP உட்பட எல்லோருக்கும் ஒரு சிக்கல். யாழ்ப்பாண மாவட்டம் முழுவதிலும் வேட்பாளர்களை நிறுத்துவதானால் குறைந்த பட்சம் 222 வேட்பாளர்களாவது வேண்டும். அந்தளவு பேர் அவர்களது கட்சியில் சட்டபூர்வமான உறுப்பினர்களாக இல்லை. எல்லோருக்கும் தேர்தலுக்கு ஆள்பிடிக்க வேண்டிய நிலை.

எனவே எல்லா இடங்களிலும் போட்டியிட்டு தங்கள் சாயத்தை வெளுக்கச் செய்யாமல் யாழ்ப்பாணம், பருத்தித்துறை, சாவகச்சேரி முதலான சில முக்கிய இடங்களிலேயே வேட்பாளர்களை நிறுத்த பலரும் முன்வந்தனர்.

யாழ்ப்பாண நகர சபைக்கு PLOT குழு மாணிக்கதாசனாரையும், தமிழர் விடுதலைக் கூட்டணி யாழ் முன்னாள் எம்.பி. யோகேஸ்வரனின் மனைவியையும் நிறுத்தியிருக்கின்றனர்.

கூட்டணியினரோ, யாழ் நகர மக்கள் யோகேஸ்வரன் மீதுள்ள அபிமானத்தினால் தங்களுக்கு வோட்டுப் போடுவார்கள் என்று நம்பிக்கை கொண்டிருக்கின்றார்கள்

மாணிக்க தாசனாரோ தன்னுடைய தாய் வழிச் சொந்தங்களான இராணுவ மாததையாக்களின் உதவியோடு தான் எப்படியும் வெற்றியடையலாம் என்று நம்பிக்கை கொண்டிருக்கின்றார். மாணிக்கதாசனாரின் தாயார், சிங்கள இனத்தைச் சேர்ந்தவர் என்ற வகையில் அவருக்கு இராணுவத்தினருடன் சொந்தம் அதிகம். இந்த நெருக்கத்தை தனக்கு சாதகமாக்கிக்கொள்ள அவர் நினைக்கிறார்.

ஆனாலும் அவர் மேயராக வரமுடியாது என்று EPDP யினர் அடித்துச்சொல்லி வருகின்றார்கள். அதாவது மாணிக்க தாசனார் ஆனைக்கோட்டை பொலீஸ் நிலையத் தாக்குதல், கிளிநொச்சி வங்கிக்கொள்ளை என்பவை தொடர்பாக சிறீலங்கா அரசால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர். ஏற்கனவே பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் சிறைவைக்கப்பட்டு சிறையில் இருந்து தப்பிச் சென்றவர். இவை எப்போதோ நடந்த சம்பவங்கள். ஆனால் இவற்றிலிருந்தெல்லாம் அவருக்கு சட்டபூர்வமான மன்னிப்பு அளிக்கப்படவில்லை. அவர் மேயராக தெரிவு செய்யப்பட்டாலும் அது சட்டபூர்வமாகச் செல்லாது என்று அவர்கள் தங்களுக்கு தெரிந்தவர்களிடம் சொல்லி வருகின்றார்கள்.

மறுபுறத்தில் சிறீலங்கா இராணுவ அரக்கர்களிடம் தங்களது பிள்ளைகளைப் பறிகொடுத்த, கணவன்மாரைப் பறிகொடுத்த யாழ் குடா மக்கள் இன்னும் அழுது புலம்பிக்கொண்டுதான் இருக்கிறார்கள். தனது மார்பிலே சிறீலங்காவின் சிங்கள ஆதிக்க இராணுவத்தின் சப்பாத்துக் கால்கள் அழுத்திக் கொண்டிருப்பதையிட்டு யாழ் மண் கொதித்துக் கொண்டிருக்கிறது. யாழ் மக்களுக்கோ நகரபிதா இப்போது தேவையில்லை. அவர்களுக்குத் தேவை விடுதலை; தங்களுடைய சொந்த மண்ணில் அச்சமின்றி நடமாடும் உரிமை.

அவற்றைப் பெற்றுத்தர தனபதி பொட்டம்மான் தலைமையில் தலைவர் பிரபாகரன் ஒரு படையை அனுப்பியிருக்கிறார் என்ற செய்திதான் யாழ்குடா நாட்டு மக்களுக்கு சந்திரிகா அம்மையாரின் தேர்தல் அறிவிப்பை விட, இனிப்பானது மகிழ்ச்சிதரக்கூடியது.


**- நாடோடி**

**PLOT குழுவின் உப தலைவர் மாணிக்கதாசனாருக்கு தான் கோஷ்டிச்சண்டை- பிடித்தவர்களில் எழுத்தெழுதிய- யாழ்ப்பாண நகரத்தில் மேயராக ஆகவேண்டும் என்ற ஆசை!! டக்ளஸ் தேவானந்தனாருக்கோ யாழ் மாவட்டத்தில் அதிக பாராளுமன்ற உறுப்பினர்களை பெற்றிருப்பதைப் போலவே உள்ளூராட்சித் தேர்தலிலும் அதிக ஆசனங்களைப் பெற்ற தாங்களும் அரசியலில் முக்கியமானவர்கள் என்று காட்டவேண்டும் என்று ஆசை!**


# 'TAMIL COMPUTER EXPO 98'



## SENITH COMPUTER INSTITUTE ஆதரவுடன்



Senith பழைய மாணவர்களுடன் மற்றும் பல சுவிஸ் கணினி, கலை, கல்வி அமைப்புக்களும் இணைந்து நடாத்தும்

## "Tamil computer Expo 98"

1) Windows 98 உடனான கணினி பற்றிய அறிமுகம்!
2) Internet, Internet Telephone தொடர்புகள்!
3) திருக்குறள் ஒலியுடன் தமிழ், தமிழ் அகராதி, ஆங்கிலம், இலகுவான முறையில் எண் சோதிடம்!
4) Europe வர்த்தக சேவை நிறுவனங்களின் தொகுப்புகள்! திரைப்படங்களின் தொகுப்புகள்
5) சிறுவர்கள் தயாரித்த மிருகங்கள் பற்றிய விபரமும், படங்களும்!
6) வர்த்தக நிறுவனங்களில் பயன்படக்கூடிய தமிழிலான
1, நாட்குறிப்பு ஏடுகள், இலாபநட்டக் கணக்கு பதிவுகள்!
2, வாடிக்கையாளர்களின் பதிவுத்தொகுதி மூலம் வீடியோ கொப்பி, கடிதம், கடிதஉறைகள் தயாரித்தல், நாணயமாற்று Progam.
7) 98ம் ஆண்டிற்கான Encyclopiedia, World atlas, Lexicon, விளையாட்டு பிரியர்களுக்கான Game, Video க்கள், தமிழ் வீடியோ சி.டி படங்கள்.
8) பாட்டுக்கள், சினிமாப்படங்கள், புகைப்படங்கள் போன்றவற்றை உங்கள் விருப்பத்திற்கு ஏற்ப உங்கள் சி.டி.யில் பதிவு செய்தல்.

## இன்னும் பல!

அகன்ற வெண்திரையில் கணினியின் செயற்பாட்டின் விளக்கம்

**காலம் : 27, 28, 29.12.97 ஆகிய மூன்று நாட்களும்!**
**நேரம் : 10.00 - 22.00 மணிவரை.**
**இடம் : Militar str.84, 8004 Zurich.**
**Tel : 01 242 73 91, 01 242 73 60, Fax : 01 242 73 58**

*இந் நிகழ்ச்சிகள் யாவும் ஐரோப்பா தமிழ் வானொலி அலைகள் மூலம் நேரடியாக ஒலிபரப்பப்படும்!*

# நாம் இன்னமும் சிங்களவர்களிடம் நியாயத்தை எதிர்பார்க்கின்றோம் – சிவசிதம்பரம்

**தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் மு.சிவசிதம்பரம் யாழ். உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக 22.12.97 திங்கட்கிழமை பகல் ஈழமுரசுக்கு வழங்கிய பிரத்தியேகச் செவ்வி**

**கேள்வி:**

தேர்தலில் உங்கள் கட்சி நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்து விட்டதா?

**பதில்:**

ஆம். இன்றைகு தாக்கல் செய்ய இருக்கிறோம். இரண்டு இடங்களில் தாக்கல் செய்து இருக்கின்றோம். ஒன்று யாழ்ப்பாணம் முனிசிப்பாலிட்டி, மற்றது வலிகாமம் வடக்கு பிரதேச சபை.

**கேள்வி:**

அதற்கு யார் வேட்பாளர்கள்?

**பதில்:**

வேட்பாளர்கள் எல்லோரும் கையொப்பம் இட்டதன் பின்புதான் இன்று நியமனப் பத்திரம் கொடுக்கப்பட்டது அதாவது முதலாவது திருமதி சரோஜினி யோகேஸ்வரன் மற்றது சிறிபாஸ்கரன். அவர் விடுதலை கூட்டணியின் இளைஞர் பேரவையில் இருந்தவர்.

**கேள்வி:**

அரசாங்கம் இந்த தேர்தலை நடத்துவதன் நோக்கம் என்ன?

**பதில்:**

என்ன கருத்தோடு அரசாங்கம் இத்தேர்தலை நடத்துகின்றதோ தெரியாது. அரசாங்கத்தின் நோக்கங்கள் வேறு வேறாக இருக்கலாம். ஆனால் நாங்கள் பின்போடச் சொல்லித்தான் வற்புறுத்திக் கேட்டோம். அதை செய்யாத சூழ்நிலையில், மற்றைய குழுக்களும் போட்டியிட முன்வந்ததின் காரணத்தினால் தான் நாங்கள் கேட்க வேண்டிய சூழ்நிலை நேர்ந்தது. அதற்கு பின்புகூட சென்ற சனியும், ஞாயிறும் எல்லா கட்சிகளும் சேர்ந்து இத் தேர்தலை பகிஷ்கரிக்கலாம் என்று 'ஒற்றுமைக்கு வர' எத்தனித்தோம். ஆனால் அது முடியாமல் போய்விட்டது.

**கேள்வி:**

இந்தத் தேர்தல் ஒரு மாயவலை என்று விடுதலைப் புலிகள் சொல்லியிருப்பது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:**

இது முழுமையாக ஜனநாயக தேர்தலாக அமையாது. அந்தக் காரணத்தைக் காட்டித்தான் இதை பின்போட வேண்டும் என்று கேட்டோம். ஆனால் நாங்களும் போட்டி போடாவிட்டால் மிகமிக குறைந்த வாக்குகளுடன் ஒரு சிலரால் வெற்றி பெற முடியும். நாங்கள் போட்டியிடுவதனால் மக்கள் முன்வந்து வாக்களிப்பார்கள் என நம்புகின்றோம்.

**கேள்வி:**

உங்களுடன் போட்டிபோடும் மற்றைய குழுக்களால் உங்களுக்கு ஆபத்து இல்லையா?

**பதில்:**

தற்போது தமிழ் குழுக்களால் அச்சுறுத்தல்கள் இல்லை. ஆனால் தேர்தல் நடைபெறும் போது என்ன நடக்குமோ தெரியாது. எனவேதான் ஜனாதிபதிக்கு கடிதம் எழுதும்போது கூறினோம், மற்றைய குழுக்களின் ஆயுதங்களை களைய வேண்டும். அப்படி களைந்தால் தான் நேர்மையான தேர்தல் நடக்கும் என்று.

**கேள்வி:**

நீங்கள் அரசாங்கத்திடம் ஆயுதம் கேட்டதாக தகவல் வந்ததே...?

**பதில்:**

நாங்கள் ஆயுதம் கேட்கவில்லை. ஆனால் எங்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்று கேட்டோம். இந்த அரசாங்கத்திலுடைய பொறுப்பு இந்த தேர்தலில் போட்டியிடும் எல்லோருக்கும் கட்சி வேற்றுமை இல்லாமல் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்பதே. நாங்கள் ஆயுதம் கேட்கவில்லை.

**கேள்வி:**

தமிழ் மக்களை கொல்லும் அரசாங்கம் உங்களை பாதுகாக்கும் என்று நினைக்கிறீர்களா?

**பதில்:**

நாங்கள் அரசாங்கத்தை பாதுகாப்பு கேட்காவிடின் வேறு யாரைக் கேட்கலாம் நாங்கள் ஆயுதம் தாங்கி எங்கள் பாதுகாப்புக்காக செயல்பட விரும்பவில்லை. செயல்படுவது மட்டும் அல்ல, அதற்கான பலமோ அல்லது வேறு வசதியோ இல்லை. நாட்டின் பாதுகாப்புக்கு 'யார் உரித்தோ' அவர்களைத்தானே நாம் கேட்கலாம்.

**கேள்வி:**

யாழ்ப்பாணத்தில் காணாமல் போனவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என சர்வதேச மன்னிப்புச் சபை அறிவித்தது தொடர்பாக நீங்கள் என்ன செய்தீர்கள்?

**பதில்:**

நாங்கள் பாராளுமன்றத்திலே ஒருமுறைக்கு பலமுறை (பரராஜசிங்கம், சம்பந்தர்) எல்லோரும அதைப்பற்றி பேசியிருக்கின்றோம். அதற்கு முற்று முழுதாக விசாரணை நடத்த வேண்டும என்று கூறியிருக்கின்றோம். நாங்கள் இந்த விடயத்தை எந்த வகையில் உலகறிய செய்யமுடியுமோ அந்த வகையில் செய்திருக்கின்றோம்.

**கேள்வி:**

இந்த விடயத்தை ஓர் போர்க் குற்றமாக ஏன் சர்வதேச நீதி மன்றத்திற்கு நீங்கள் எடுத்துச்செல்ல முயலவில்லை?

**பதில்:**

சர்வதேச நீதிமன்றத்திற்கு செல்வது இலகுவான காரியம் அல்ல. அதற்கு பல வழிவகைகள் செய்யவேண்டும். உள்ளூரிலே சட்ட மன்றங்களுக்குச் சென்றும் முடியாத சூழ்நிலையில்தான் நாங்கள் சர்வதேச மன்றத்துக்கு வருகின்றோம் என்று நிரூபிக்க வேண்டும். எனவே அந்த நிலைக்கு வரவில்லை நாங்கள். அரசாங்கத்தைக் கேட்கின்றோம் ஒரு நீதி விசாரணை நடத்தப்படவேண்டும் என்று

**கேள்வி:**

விடுதலைப் புலிகள் தொடர்பாக உங்கள் நிலைப்பாடு என்ன?

**பதில்:**

எங்களுடைய நிலைப்பாடு விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் எப்பொழுதும் கதைக்க வேண்டும். அவர்கள் இல்லாத தீர்வு நிரந்தரதீர்வாக அமையாது என்பது எங்களது அபிப்பிராயம். அதை ஒருமுறைக்கு பலமுறை அரசாங்கத்திடம் சொல்லி இருக்கின்றோம். நாங்கள் மேலும் கூறினோம். இரண்டு சாராருக்கும் இடையிலே நம்பிக்கை இல்லாத சூழ்நிலையில் மூன்றாவது மத்தியஸ்தம் தேவை என்று. இருவரும் ஒருவரை ஒருவர் நம்பாத கால கட்டத்தில் மூன்றாவது மத்தியஸ்தம் தேவை என்று. நாங்கள் மீண்டும் வற்புறுத்துகின்றோம். இந்தமுறை கூட பாராளுமன்றத்தில் சம்பந்தன் வற்புறுத்தினோம், பேச்சுவார்த்தை விடுதலைப் புலிகளுடன் நடத்த வேண்டும்; அதற்கு மூன்றாவது மத்தியஸ்தத்தை தேடவேண்டும் என்று.

**கேள்வி:**

உங்கள் கட்சிக்குள் முரண்பாடுகள் இருப்பதாக செய்திகள் வருகின்றனவே...?

**பதில்:**

கட்சிக்குள் ஒரு முரண்பாடும் இல்லை. அப்படி முரண்பாடு இருக்கும் எனறால் செயற்குழுவிலோ அல்லது பொதுக்குழுவிலோ வாதிட்டு ஒரு முடிவு எடுப்போம். அதற்கு மீறி ஏதாவது கருத்து யாருக்கும் தெரிவிப்பதில் உரித்து இல்லை. அப்படி தெரிவித்திருக்கலாம். ஆனால் முரண்பாடு இல்லை. நாங்கள் ஒற்றுமையாக இருக்கின்றோம். மற்றுமொன்று தலைமைப்பீடத்தில் இருந்து சொல்லி வைக்க விரும்புகின்றேன். எப்பொழுது பொதுச்சபை எங்கள்மீது நம்பிக்கை இல்லை என்று கூறியதோ அந்த நேரமே நாங்கள் விலகுவதற்கு தயார்.

**கேள்வி:**

உங்கள் கட்சியிலுள்ள சிலர் புலிகளுக்கெதிரான கருத்துக்கூறும் போது யோசப் பரராஜசிங்கம் போன்றவர்கள் புலிகளை ஆதரித்து பேசிக்கொள்கின்றார்களே..?

**பதில்:**

விடுதலைப் புலிகளுக்கு சார்பாக பேசுவது, அவர்களும் பேச்சு வார்த்தைக்கு வரவேண்டும் என்பதுதான் எங்கள் கட்சியின் கொள்கை. ஆகையால் பரராஜசிங்கம் ஏதாவது கூறியிருந்தால் அதுஎங்கள் கட்சிக்கு முரணானது அல்ல. இந்த முறையும் அவர் டில்லிக்குப் போக முன்பு என்னை சந்தித்து சொன்னார், நான் மனித உரிமை மீறலைபபற்றித்தான் பேசப் போவதாக.

**கேள்வி:**

தமிழர் தாயகம் தமிழீழம் என்ற வட்டுக்கோட்டை தீர்மானத்திற்குப் பின்பு நீங்கள் தேர்தலில் போட்டியிடுவது அத் தீர்மானத்தை கைவிட்டு விட்டதைக் குறிக்குமா?

**பதில்:**

தமிழர் தாயகத்தில் ஒரு விட்டுக்கொடுப்பும் இல்லை. வட்டுக்கோட்டை தீர்மானம் எடுத்ததன் பின்புதான் அப்போது நடந்த உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிட்டோம். அப்போது ஒருவரும் சொல்லவில்லை. நீங்கள் தாயகத்தை விட்டுக் கொடுத்து விட்டீர்கள் என்று. ஆனபடியால் வேறு வேறு தேர்தல்களை அரசியலுக்கு நடத்துவது ஒரு சர்வசாதாரணமான விடயம். ஒரு தேர்தலில் போட்டியிட்டபடியால் எங்களுடைய அடிப்படைக் கொள்கையை விட்டுக் கொடுத்தோம் என்பது இல்லை. தாயகம் என்று சொல்லும் போது முஸ்லீம்களுடைய நிலைமையையும் சிந்திக்க வேண்டும். நாங்கள் தாயகம் என்ற சொல் இன்றபோது அது தமிழ மக்களுக்குமான தாயகம் இல்லை. முஸ்லிம மக்களுக்கும்தான் தாயகம். அவர்களுடைய நிலைமையைப் பற்றியும் நாங்கள் சிந்திக்க வேண்டும்.

தமிழீழம் தான் எங்கள் கோரிக்கை என்று ஒருமுறைக்கு பலமுறை கூறிவிட்டோம். அதே நேரத்தில் சர்வகட்சி மாநாடு நடந்தபோது திரு. அமிர்தலிங்கம தெளிவாக கூறியிருந்தார், எங்களுக்கு கொடுத்த ஆணை இது. ஆனால் நீங்கள் அதற்கு மாற்றுத் திட்டமான நியாயமான திட்டத்தை முன்வைத்தால் அதை எங்கள் மக்கள் மத்தியில் கொண்டுசென்று அது அவர்கள் ஏற்பார்களா இல்லையா என்பது பற்றி கதைப்பதற்கு நாங்கள் ஆயத்தமாக இருக்கின்றோம் என்று. அது இன்றைக்கு அல்ல, 1977ம் ஆண்டு சொன்ன கருத்து. இன்று வரையும் எந்தவொரு அரசாங்கமும் நியாயமான மாற்றுத் திட்டத்தை வைக்காத காரணத்தினால் தான் இந்த நிலைமை இப்படி உருவாகியது.

**கேள்வி:**

களுத்துறை சிறையில் நடந்த படுகொலைகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:**

களுத்துறையில் நடந்தது கண்டிக்கக்கூடிய விடயம். அப்பாவிக் கைதிகள் தங்களை பாதுகாக்க முடியாத ஒரு சூழ்நிலையில் அவர்களை கொலை செய்தது மிகவும் கொடூரம். நாங்கள் பலமுறை அரசாங்கத்தைக் கேட்டிருக்கின்றோம், இந்த கைதிகளுக்கு எதிராக வழக்கு போடவேண்டும் என்றால் விரைவாக வழக்கு போடுங்கள். இல்லாவிட்டால் விடுதலை செய்யுங்கள் என்று. இப்படி 2,3,4 ஆண்டுகள் வைத்திருப்பதில் நியாயம் இல்லை. ஓரளவிலே நாங்கள் கேட்டதின் பின்புதான் 2 உயர் நீதி மன்றங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஒன்று கொழும்பில், மற்றது வவுனியாவில். விரைவாக வழக்குகள் முடிக்கலாம் என்று அரசாங்கம் சொல்லியிருக்கிறது. ஆனால் கைதிகளுக்கு பாதுகாப்பு கொடுப்பதற்காக களுத்துறையில் ஒரு பொலிஸ் பிரிவையும் உண்டாக்கி இருக்கிறார்கள்.

**கேள்வி:**

இந்த அரசாங்கங்கள் தமிழ் மக்களுக்கு நீதி வழங்கும் என்ற நம்பிக்கை உங்களுக்கு இருக்கிறதா?

**பதில்:**

நாங்கள் இந்த நாட்டில் இருக்கும் வரையும் அவர்களின் நியாயத்தை எதிர்பார்க்கின்றோம். அதற்கும் மீறிப் போவதென்றால் நாம் வேறு வழியில் தான் செல்ல வேண்டும். இந்த வழியால் செல்லமுடியாது.

**கேள்வி:**

தீர்வுப்பொதிபற்றி உங்கள் கருத்தென்ன?

**பதில்:**

தீர்வுப்பொதியில் நல்ல பல அம்சங்கள் உண்டு. இதற்கும் முன்பு எந்த அரசாங்கமும் நாட்டிலே வைக்காத யோசனைகள் இந்த தீர்வுப் பொதியில் உள்ளன. அதில் குறைகள் - குறைபாடுகள் இருக்கின்றன. ஆனால் இதற்கு முன்பு எந்த அரசாங்கமும் துணிந்து வைக்காத சில கோரிக்கைகள் இநத தீர்வுப் பொதியில் இருக்கின்றன. ஒற்றை ஆட்சிமுறையை அகற்றுவதற்கு சம்மதித்தது இநத தீர்வுப் பொதிதான். ஆனபடியால் தீர்வுப் பொதியில் சில நல்ல அம்சங்கள் இருக்கின்றன. ஆனால் சில குறைபாடுகளும் இருக்கின்றன.

**கேள்வி:**

குறைபாடு என்று நீங்கள் கருதுவது எது?

**பதில்:**

கருதுவதில் முதலாவது மட்டக்களப்பும் திருகோணமலையும் வடக்கு மாகாணத்தோடு இணைவதற்கு ஒரு சர்வசன வாக்கெடுப்பு என்பது தேவையற்றது. ஒரு முறைக்கு பலமுறை திருகோணமலை மக்களும், மட்டக்களப்பு மக்களும் வடமாகாண மக்களுடன் இணைந்து இருக்கவேண்டும் என்பதை நிரூபித்து இருக்கிறார்கள். அதற்கு பின்பு இன்னும் ஒரு சர்வஜன வாக்கெடுப்பு தேவை அற்றது. மற்றது பிராந்திய சபைகளை கலைப்பதற்கு ஜனாதிபதிக்கு கூடுதலாக அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது.

**கேள்வி:**

யாழ். தளபதியாக பொட்டம்மான் நியமிக்கப்பட்டது பற்றி...?

**பதில்:**

அதுபற்றி எனக்குத் தெரியாது தம்பி.

## "யாழ். தளபதி பொட்டம்மான் பற்றி எனக்குத் தெரியாது"

Tamileelam Archive

# அ.தி.மு.க - பா.ஜ.க அணியில் பாட்டாளி மக்கள் கட்சி

எதிர்வரும் மக்களவை தேர்தலில் அதி.மு.க-பா.ஜ.க அணியுடன் சேர்ந்து போட்டியிடுவதற்கு பாட்டாளி மக்கள் கட்சி தீர்மானித்துள்ளது. இந்த முடிவை கடந்த 19.12.97 வெள்ளிக்கிழமை பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் டாக்டர் ராமதாஸ் சென்னையில் உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளார்.

பாட்டாளி மக்கள்கட்சி, தி.மு.க. தமிழ் மாநில கட்சியினுடனேயே தேர்தல் கூட்டு வைத்துக்கொள்ளும் என்று பரவலாக எதிர்பார்ப்பு இருந்தது. இதற்கு எதிர்மாறான விதத்தில் அதி.மு.க-பா.ஜ.க. அணியில் அது சேர்ந்து கொண்டதை அடுத்து தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியிடம் இதுபற்றி கருத்துக் கேட்ட போது, எனக்கு இது பற்றி 15 நாட்களுக்கு முன்பே தெரியும். அது குறித்து நான் ஒன்றும் ஆச்சரியப்படவில்லை என்று தெரிவித்துள்ளார்.




# எம்.ஜி.ஆருக்கு ஜெயலலிதா துரோகம் செய்துவிட்டார்

## - ஆர்.எம்.வீரப்பன்

மதவாதக் கட்சியுடன் தேர்தல் கூட்டுவைத்து எம்.ஜி.ஆர் உருவாக்கி வளர்த்த இயக்கத்துக்கு துரோகம் செய்து விட்டார் என்று எம்.ஜி.ஆர் கழகத்தின் தலைவர் ஆர்.எம்.வீரப்பன் குற்றம் சாட்டியுள்ளார்.

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா, பாரதீய ஜனதாவுடன் கூட்டணி சேர்ந்ததன் மூலம் தமிழக மக்களுக்கு தனது உண்மையான தோற்றத்தை அடையாளம் காட்டி விட்டார். காங்கிரஸ் கட்சியுடன் தேர்தல் உறவைப் பேசிக்கொண்டே, இரகசியமாக பாரதீய ஜனதாவுடனும் பேசிக்கொண்டிருந்தார். என்பதையும் நம்பவைத்து கழுத்தை அறுப்பவர் என்பதையும் நிரூபித்து விட்டார்.



வட மாநிலங்களில் நீண்ட காலமாக நிலவிவரும் மத பேத உணர்ச்சிகள் திராவிட இயக்கங்களின் தீவிரமான பிரச்சாரங்களால் இல்லாது போய அமைதி நிலவியது. சமீப காலங்களில் தான் மதவாத இயக்கங்களால் தமிழகத்தில் அமைதி குலைக்கப்பட்டு வருகின்றது. அதற்கு எண்ணை ஊற்றி பகைமையை வளர்க்கும் விதத்தில் நடந்து கொள்கிறார் ஜெயலலிதா. மத, சாதி, பேத உணர்ச்சிகளை அரசியல் உணர்வுகளால் தான் மாற்ற முடியும் என்ற திராவிட இயக்க முயற்சிகளுக்கு எதிராக ஒரு மதவாதக கட்சியுடன் தேர்தல் உறவை வைத்துக்கொண்டு அழிவு வேலையில் ஈடுபட்டு இருக்கிறார். அமைதி நிலவ உழைக்க அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் என்று அறிஞர் அண்ணாவின் பெயரால் எம்.ஜி.ஆர். உருவாக்கி வளர்த்த ஒரு இயக்கத்தை ஜெயலலிதா ஏமாற்றிவிட்டார் என்று ஆர்.எம். வீரப்பன் மேலும் கூறினார்.

# ஜெயலலிதாவுடன் சேர்ந்தாலும் ஊழலை எதிர்ப்போம்

## - பா.ஜ.க.

ஜெயலலிதாவுடன் நாங்கள் தேர்தல் கூட்டு வைத்துக் கொண்டாலும், எமது கட்சி தொடர்ந்து ஊழலை எதிர்த்து வரும் என்று பாரதீய ஜனதாக் கட்சியின் பொதுச் செயலாளர் வெங்கையா நாயுடு தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் பத்திரிகையாளர்களுக்கு மேலும் கருத்து தெரிவிக்கையில், பா.ஜ.க. மத்தியில் ஆட்சிக்கு வந்தால் ஜெயலலிதாவுடன் அமைத்துக்கொண்ட தேர்தல் உடன் பாட்டை காரணமாகக் கொண்டு அவர் மீதான ஊழல் வழக்குகளை மழுங்கடிப்பதற்கு ஒரு போதும் துணை போகாது. எமது கட்சி தொடர்ந்து ஊழலை எதிர்த்து போராடும் என்று தெரிவித்துள்ளார்.

# டி.என். சேஷனுக்கு சிவசேனை ஆதரவு

முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர் டி.என். சேஷனுக்கு எந்தத் தொகுதியில் போட்டியிட்டாலும் அவருக்கு 'சிவசேனை' ஆதரவு அளிக்கும் என சிவ சேனைத்தலைவர் பால் தக்கரே கடந்த வாரம் தெரிவித்தார்.

மகாராஷ்டிர பெருநகரத்திலிருக்கும் 6 பாராளுமன்றத் தொகுதியில் ஏதாவது ஒரு தொகுதியில், ஏதாவது ஒருகட்சியில் சிவ சேனை சார்பில் சேஷன் போட்டியிட்ச் செய்வது தொடர்பாக கட்சி எந்த முடிவும் எடுக்கவில்லை என்று பால் தக்கரே மும்பையில் தெரிவித்தார்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# 12ம் ஆண்டு நினைவு வணக்கம்



24.06.61 21.12.85

மூத்த உறுப்பினர்

## மேஜர் அல்பேட்

### (கந்தையா ரூபநிதி)

அச்சுவேலி, யாழ்ப்பாணம்

*அல்பேட்! ஆதிக்க வெறியர்களுக்கு*
*அடி வயிற்றில் புளி கரைத்த பெயரிது!!*
*கிட்டண்ணாவின் முகாமினை சிங்களப்*
*படைகள் முற்றுகையிட முனைகின்றன..*
*புலிமறவன் ஒருவன் தொடர்புக்*
*கருவியில் பதறினான்..*
*புலியின் குகைக்குள் நரிகள் புகுவதா?*
*பாதகர்களுக்கு ஒரு பாடம்*
*புகட்டுவோம் சீறிய*
*மறவன் சினத்தோடு போரிட்டான்...*
*தலை தப்பினால் காணுமென*
*தலை தெறிக்க ஓடி மறைந்தது*
*நரிகளின் கூட்டம்!*
*தளபதியை காத்த*
*பணிமுடித்து களப்பலியானான்*
*எம் வீரகுல மறவன்!!*

*- நண்பர்கள்*

# கலையுலகில் அரசியல் வேண்டாம்

## -முதல்வர்-

கலை உலகில் உள்ளவர்கள் அரசியல் செய்தால் கலையுலகின் எதிர்காலம் பாதிக்குவிடும் என்று முதல்வர் கருணாநிதி தெரிவித்தார்.

கமலா கலையரங்கின் வெள்ளி விழாவும், சில சினிமா திரைப் படங்களின் வெள்ளிவிழாவும் இணைந்து சென்னையில் நடைபெற்றது. இவ் விழாவில் கலந்து கொண்டு முதல்வர் கருணாநிதி தெரிவிக்கையில்,

கலையுலகம் தனியுலகம் என்பதால் அதில் அரசியல் குறுக்கீடுகள் இல்லாதிருத்தல் வேண்டும். திரையுலகில் இருந்து அரசியல் வாதிகள் தோன்றலாம். அதற்காக திரையுலகு அரசியலில் ஈடுபடக்கூடாது. நான் கூறுவது சிலருக்கு கசப்பாக இருக்கலாம். தமிழ்த் திரையில் எதிர்காலத்தில் பிரச்சனைகள் ஏற்படக்கூடாது என்பதற்காகத் தான் இதனைக் கூறுகிறேன். இன்று பல இளந்தலைமுறையினர் திரையுலகில் கால் பதித்து வருகின்றனர். அவர்களின் திறமையில் ஒரு எதிர்காலம் அமைய வேண்டும்.

சித்திரம், சிற்பம் ஆகியவற்றை உருவாக்க ஒருவரின் சிந்தனையும், உழைப்பும் காரணமாகும். ஆனால் திரைப்பட தொழிலைப் பொறுத்தவரை நூற்றுக் கணக்கானவர்களின் ஒத்துழைப்பு தேவைப்படுகின்றது. இவர்களுக்குள் பிளவு ஏற்பட்டால் திரைப்படத்துறை தான் பாதிக்கப் படும் என்று முதல்வர் தெரிவித்தார்.

# பாரதீய ஜனதாவுடன் அ.தி.மு.க. கூட்டு காங்கிரஸ் கட்சி அதிர்ச்சி

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் கூட்டணி அமைத்துப் போட்டியிட அ.தி.மு.கவுக்கும் பாரதீய ஜனதா கட்சிக்கும் இடையே தேர்தல் உடன்பாடு ஏற்பட்டுள்ளது. பாரதீய ஜனதா கட்சித் தலைவர்கள் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதாவுடன் கடந்த 17.12.97 கூட்டணி வைக்க முடிவெடுத்து இருப்பது காங்கிரசுக்கு பெரும் அதிர்ச்சியையும், கலக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

பாரதீய ஜனதா கட்சித் தலைவர்கள் அ.தி.மு.க பொதுச் செயலாளர் ஜெயலலிதாவுடன் கடந்தவாரம் நடத்திய பேச்சுவார்த்தையை அடுத்து இவ் உடன்பாடு காணப்பட்டது. புதுச்சேரி, தமிழ்நாட்டில் இக்கூட்டணி இணைந்து தேர்தலை சந்திக்கும். இது குறித்து அ.தி.மு.க தலைமைக் கழக அறிக்கையில் தெரிவித்ததாவது,

நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் நிலையான ஆட்சியை அமைத்திடும் கொள்கையில் தீவிர ஈடுபாடு கொண்டுள்ள அ.தி.மு.கவுடன் உடன்பாடு காணும் எண்ணத்தோடு பாரதீய ஜனதா கட்சித் தலைவர்கள் அ.தி.மு.க பொதுச் செயலாளர் ஜெயலலிதாவை போயஸ் தோட்டத்தில் உள்ள அவரது இல்லத்தில் சந்தித்து பேசினார்கள்.

பாரதீய ஜனதா கட்சியின் அகில இந்தியத் துணைத்தலைவர் ஜனா கிருஷ்ணமூர்த்தி தலைமையில் ஒரு குழுவும், ஜெயலலிதாவுடன் அ.தி.மு.க. அவைத் தலைவர் இரா.நெடுஞ்செழியன் உள்ளிட்ட ஒரு குழுவும் இச்சந்திப்பில் சமூகமளித்தனர். பாரதீய ஜனதா கட்சித் தலைவர் அத்வானி தொலைபேசி மூலம் தேர்தல் உடன்பாடு பற்றி தனது வேண்டுகோளைத் தெரிவித்தார். அண்மைக்கால மத்திய ஆட்சியின் நிலையற்ற தன்மை காரணமாக ஒட்டுமொத்த தேசநலன் பாதிக்கப் பட்டது. அ.தி.மு.க எம்.ஜி.ஆர் காலத்தில் இருந்து மத்தியில் ஓர் நிலையான வலுவான ஆட்சி அமைவதையே அ.தி.மு.க. கொள்கையாக கொண்டு வருகின்றது. அதற்கேற்ப நாடாளுமன்றத் தேர்தல்களில் உடன்பாடு கண்டு வந்துள்ளது.

இவற்றை கருத்தில்கொண்டு நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தமிழகத்திலும், புதுச்சேரியிலும் அ.தி.மு.க வும் பாரதீய ஜனதா கட்சியும் தேர்தல் உடன்பாடு கொண்டு பணியாற்றுவது என்று பேச்சுவார்த்தையின்போது கருத்து ஒற்றுமை ஏற்பட்டது. தமிழகத்தில் மாநிலக்கட்சியின் ஆட்சியையே ஏற்று தமிழகமக்கள் அதனை வரவேற்று வந்துள்ளனர். அத்தகைய நல்லுணர்வின் அடிப்படையில் இத் தேர்தல் உடன்பாட்டை அ.தி.மு.க வும் பா.ஜ.க வும் உருவாக்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பாரதீய ஜனதாவுடன் கூட்டணி வைக்க அ.தி.மு.க பொதுச்செயலாளர் ஜெயலலிதா முடிவெடுத்து இருப்பது, காங்கிரசுக்கு பெரும் அதிர்ச்சியையும் கலக்கத்தையும் தந்துள்ளது. காங்கிரஸ் மாநிலத் தலைவர் கே.வீ.தங்கபாலு பா.ஜ.கவுடன் அதிமுக கூட்டணியை உருவாக்கியிருப்பது பற்றி கருத்துத் தெரிவிக்க முன்வரவில்லை. கைவிடப்பட்ட நிலையில் காங்கிரஸ் இருப்பதாக தெரிகின்றது. முன்னாள் மத்திய அமைச்சர் பிரபு, வாழப்பாடி ராமமூர்த்தியின் செய்தித் தொடர்பாளர் தி.சு.கிள்ளிவளவன் ஆகியோரும் கூட்டணி பற்றி கருத்துத் தெரிவிக்க இயலாது என்று தெரிவித்துள்ளனர்.

# பாரதீய ஜனதாவுடன் கூட்டணி கூடாது வீரமணி ஜெயலலிதாவுக்கு வேண்டுகோள்

அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் பாரதீய ஜனதாவுடன் செய்து கொண்ட தேர்தல் கூட்டணி அதிர்ச்சி தரக்கூடியதும் விரும்பத்தகாத ஒன்றாகும். அ.தி.மு.க பொதுச் செயலாளர் ஜெயலலிதா இந்த முடிவை மறு பரிசிலனைசெய்ய வேண்டுமென திராவிடர் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டு உள்ள அறிக்கையில், இந்து மத வெறித்தனத்தை அடிப்படையாக கொண்டு இயங்கும் பாரதீய ஜனதா கட்சியுடன், திராவிட பாரம் பரியத்தில் வந்த திராவிட இயக்க கட்சி ஒன்று, அதுவும் திராவிட இயக்கத்தின் வெள்ளிவிழாக் காலத்தில் கூட்டணி அமைத்திருப்பது மிக மிக தவறான முடிவாகும். இது திராவிட கொள்கைகளுககு மட்டும் அல்ல தமிழ்நாட்டுக்கும், தமிழ் மக்களுக்கும் செய்யும் துரோகம் ஆகும அகில இந்திய அ.தி.மு.க எம.ஜி.ஆர். காலத்தில் இருந்தே சிறுபான்மை சமுதாய மக்களுக்கு பாதுகாப்பான அரணாக இருந்து வந்துள்ளது. அந்த வரலாற்றை மறந்து சிறு பான்மை சமுகத்தினருக்கு எதிரான மத வெறியாளர்களுடன் கூட்டு சேருவதை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாத ஒன்றாகும். இப போதாவது இந்த தவறான முடிவை அதிமுக மறு பரிசிலனை செய்ய வேண்டும். திராவிட இயக்கங்களின் தாய இயககம் என்ற வகையில் திராவிடர் கழகம் இப்படி ஒரு கோரிக்கையை முன்வைபபதை தனது கடமையாக கருதுகிறது என்று தெரிவித்துள்ளார்.

# பாரதீய ஜனதாவுடன் கூட்டு வைத்ததில் தவறில்லை

## - ஜெயலலிதா

பாரதீய ஜனதாக்கட்சியுடன் நாங்கள் தேர்தல் கூட்டு வைத்துக் கொண்டதில் எந்தவித தவறும் இல்லை என்று அ.தி.மு.க பொதுச் செயலாளர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

மாறிவரும் அரசியல் சூழ்நிலையில் பாரதீய ஜனதாக் கட்சியினால் மட்டுமே மத்தியில் நிலையான நல்லாட்சியை தரமுடியும். அதனாலேயே நாங்கள் காங்கிரஸ் கட்சியுடனான உறவை முறித்துக் கொண்டு பா.ஜ.கட்சியுடன் கூட்டணி அமைத்துள்ளோம் என்று அதற்கு விளக்கம் கூறிய ஜெயலலிதா பத்திரிகையாளருக்கு தகவல் தருகையில், இன்றைய சூழ்நிலையில் பா.ஜ.கட்சி மதவாதக் கட்சி என்று சொல்ல முடியாது. அந்தக்கட்சி சில வடமாநிலங்களில் ஆட்சி செய்து வருகிறது. அங்கெல்லாம் மாற்று மதத்தவர்களும் சிறுபான்மை இனத்தவர்களும பிரச்சனை இல்லாமல் இருந்து வருகின்றார்கள். அறிஞர் அண்ணா கூட கடவுளை இல்லை என்று சொல்லவில்லை. 'ஒன்றே குலம ஒரு வனே தேவன்' என்று தான் சொலலி இருக்கிறார். அதனால் நாங்கள் பாரதிய ஜனதாவுடன் கூட்டு வைத்துக் கொண்டதில் தவறேதுமில்லை.

# வாய் மொழிகளும் கொசுறுச் செய்திகளும்

'மத்தியில காங்கிரஸ் ஆட்சியில வந்தாக்கூட நிலைச்சு நிக்காது என்று எப்படி உறுதியா சொல்றீங்கள்?'
'பழக்கதோஷத்துல, கேசரி தன் கட்சிக்கே கூட ஆதரவை வாபஸ் வாங்கிடுவார் அதுதான்.'

– மொட்டேஷ்

'நடிகர் ரஜனி காந்த் தேர்தல் பிரசாரத்துக்கு வருவாரா என்பதை பொறுத்து இருந்து பாருங்கள்.'

– முதல்வர் கருணாநிதி

'காலையில் கண்விழித்தவுடன் அ.தி.மு.க. நெல்லை மாநாட்டைப் பற்றி ஜெயலலிதா நினைக்கிறாரோ இல்லையோ முதல்வர் கருணாநிதி அது பற்றிய விபரங்களை தவறாமல் கேட்டுப் பெற்றுக் கொள்கிறாராம்.'

– ரஷீதா, நெற்றிக்கண்

'இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியை ஏதோ ஒரு கெட்ட சக்தி இந்திய தேச விரோதக்க சியாக்கிவிட்டது, அது நாட்டை அழிப்பதற்கு முன் அது அழிந்து போய்விடவேண்டும்'

– இந்தியன் எக்ஸ்பிரசில்

## ஏமாற்றிய தி.மு.க.- எம்.எல்.ஏ. எங்கே?

தமிழ்நாடு மின்வாரியத்தில் 'தொழில்நுட்ப உதவியாளர்' வேலை வாங்கித்தருவதாக கூறி பலரிடம் பணத்தை கறந்துள்ளார் மதுராந்தகம் தொகுதி தி.மு.க. எம்.எல்.ஏ வெங்கடேசன். நீதிமன்றத்தீர்ப்பு ஆராயப்பட்டு முடிவுகள் வெளிவந்துவிட்ட நிலையில்கூட வெங்கடேசனுக்கு பணம் கொடுத்தவர்களில் ஒருவருக்கும் வேலை கிடைக்கவில்லையாம்.

பணத்தையாவது திருப்பி வாங்கிவிடலாம் என அவர் வீட்டுக்கு செல்வோரிடம் 'எம்.எல்.ஏ சென்னையில் இருக்கிறார்' எனச் சொல்லியுள்ளனர். சென்னைக்கு வந்து எம்,எல்.ஏ. தங்கும் விடுதியில் பார்த்தால் பெரிய பூட்டுத்தான் தொங்குகிறது.

பாதிக்கப்பட்டவர்களோ இப்போது எம்.எல்.ஏவைத் தேடி மதுராந்தகத்திற்கும், சென்னைக்குமாக அலைகின்றனர்.

ஆனால் எம்.எல்.ஏ வெங்கடேசனோ எதைப்பற்றியும் கவலைப்படாமல் ராயப்பேட்டை விடுதி ஒன்றில் உல்லாசமாக பொழுதைக் கழிக்கின்றாராம்,

– நெற்றிக்கண்ணில் அருணா



நன்றி: நக்கீரன்

# கர்நாடகத்தில் புதிய கூட்டணிகள்

பாராளுமன்றத் தேர்தலை யொட்டி கர்நாடகத்தில் புதிய அரசியல் கூட்டணிகள் உருவாகி வருகின்றன. காங்கிரசில் இருந்து விலகிய பங்காரப்பா, ஜனதா தளத்துடன் நெருங்கி வருகின்றார். ஜனதா தளத்தில் இருந்து விலக்கப்பட்ட ராமகிருஷ்ணா ஹெக்டே பாரதிய ஜனதாவுடன் கூட்டணி வைத்துக்கொள்ள தயாராகி வருகின்றார். ஆனால் தனித்து போட்டியிட்டு வெற்றி பெறும் நம்பிக்கையில் உள்வது காங்கிரஸ் கட்சி. இதனால் கூட்டணிக்கு முன்வந்த ஹெக்டேவையும் அக்கட்சி புறக்கணித்து விட்டது.

கூட்டணி விடயத்தில் லாபம் அடைந்திருப்பது பா.ஜ.க. தான். 'மதவாத சக்தி, தீண்டத்தகாத கட்சி' என ஒதுக்கி வைக்கப்பட்ட பா.ஜ.கவுடன் கூட்டணி வைத்துக்கொள்ள பலர் தயாராகவுள்ளனர். கர்நாடக விகாஸ் கட்சியைத் ஆரம்பித்துள்ள பங்காரப்பாவும் பா.ஜ.கவுடன் கூட்டணிக்குத் தயாராகவே இருக்கிறார். ஆனால் ஜனதா தளத்திலிருந்து அழைப்பு வந்துள்ளதால் அக்கட்சியுடன் கூட்டணி வைத்துக்கொள்ள ஒப்புக்கொண்டுவிடுவார் என தெரியவந்துள்ளது.

ராமகிருஷ்ணா காங்கிரஸ் கட்சியுடன் இணைந்துவிட கடுமையான முயற்சிகள் செய்தார். இதற்கு சீதாராம் கேசரி சம்மதித்தாலும், மாநில காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் ஹெக்டே உடன் கூட்டணி வைத்துக் கொள்ள கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.